விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 08 செவ்வாய்க்கிழமை (25.10.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 310

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

RAMCO

# அவுஸ்.செல்லும் மகிந்தவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!



## மனித உரிமை வழக்கறிஞர்கள் அழைப்பு

(சிட்னி) பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளுமாறு அந்நாட்டின் மனிதவுரிமை வழக்கறிஞர்கள் சிலர் அழைப்பு விடுத்துள்ளதாக அவுஸ்திரேலிய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. 2013-ம் ஆண்டுநடைபெறவுள்ள பொது நலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டை தமது நாட்டில் நடத்துவதற்கான பரப்புரைகளை மேற்கொள்ள இம்மாநாட்டை அரசாங்கத்தின் தலைவர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள் எனவும் அவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## செய்மதியின் பாகங்கள் இலங்கையில் வீழ்ந்தன?

விண்வெளியில் செயலிழந்த ஜேர்மனியின் ஆய்வுச் செய்மதியின் உடைந்த பாகங்கள் தென்கிழக்காசியாவில் விழுந்திருக்கலாம் என்று ஜேர்மனிய விஞ்ஞானிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

சிறிய பேருந்து ஒன்றின் அளவுடைய 1.87 தொன் எடையான இந்த செய்மதி செயலிழந்து 30 துண்டுகளாக உடைந்து 450 கி.மீ. வேகத்தில் பூமியில் விழுந்துள்ளது.

1990ஆம் ஆண்டில் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட இந்த செய்மதி 1999 ஆம் ஆண்டில் செயலிழந்த நிலையில் புவிச்சுற்று வட்டப்பாதையில் (19ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய அமைப்பில் மனித உரிமை ஆணையாளர் பதவியை உருவாக்க இலங்கை கடும் எதிர்ப்பு!

(கொழும்பு)

பொதுநலவாய அமைப்பின் பதினொரு உறுப்பு நாடுகளால் முன்வைக்கப்பட்ட ஜனநாயகம், சட்டம், ஒழுங்கு மற்றும் மனிதவுரிமைகளுக்கான ஆணையாளர் பதவியை உருவாக்குவது தொடர்பிலான ஆலோசனையை இலங்கை அரசாங்கம் கடுமையாக எதிர்க்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

2009-ம் ஆண்டு ஸ்பெயினில் இடம்பெற்ற பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டில் அத்தகையதொரு பதவியை உருவாக்குவது தொடர்பில் மலேசியாவின் முன்னாள் பிரதமரின் தலைமையில் கானா, ஜமேய்க்கா, பாகிஸ்தான், உகண்டா, அவுஸ்திரேலியா, மொசாம்பிக், பிரித்தானியா, கயானா, கனடா, கரிபாதி ஆகிய பதினொரு உறுப்பு நாடுகளின் நிபுணர்கள் குழுவினால் முன்வைக்கப்பட்டிருந்தது.

பொதுநலவாய அமைப்பின் பதினொரு உறுப்பு நாடுகளால் முன்வைக்கப்பட்ட இப்பரிந்துரை குறித்து அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் பொதுநலவாய அமைப்பில் ஜனநாயகம், சட்டம், ஒழுங்கு மற்றும் மனிதவுரிமைகளுக்கான ஆணையாளர் பதவியை உருவாக்குவதற்கு அரசாங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

பொதுநலவாய அமைப்பில் இத்தகையதொரு பதவியை உடனடியாக உருவாக்க வேண்டும் என பிரித்தானியா, கனடா, நியூசிலாந்து ஆகிய (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக்கழக மாணவன் மீது ஆட்டோவில் சென்றோர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளார். உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் தாக்கப்பட்டுள்ளார்.

பூநகரி நல்லூரைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக கலைத்துறை நான்காம் வருட மாணவரான ராஜவரோதயம் கவிராஜன் (வயது 27) என்பவரே இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்டவராவார்.

உறவினர் வீட்டிலிருந்து வீடு நோக்கி சென்று கொண்டிருந்தபோது கிளிநொச்சி பரந்தன் சந்திக்கு அண்மையில் வைத்து அவர் தாக்கப்பட்டுள்ளார். ஆட்டோ ஒன்றில் வந்த 5 பேர் கொண்ட குழுவினர் இவரை மறித்து சரமாரியாகத் தாக்கிவிட்டு தப்பிச் சென்றதாக கூறப்படுகின்றது. இத் தாக்குதலில் படுகாயமடைந்த கவிராஜன் தன் நண்பர்களுக்கு தொலைபேசி மூலமாக தாக்கப்பட்டமையை அறிவித்து அவர்கள் மூலமாக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நேற்று மதியம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பினர் இன்று அமெரிக்கா பயணம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு 10 நாட்கள் விஜயத்தினை மேற்கொண்டு இன்று அமெரிக்கா செல்லவுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அழைப்பின் பேரில் நியூயோர்க் செல்லும் இக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இப்பயணத்தின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினைச் சேர்ந்த முக்கிய அதிகாரிகள் பலரும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டன் மற்றும் பிரதி இராஜாங்க அமைச்சர் றொபர்ட் ஓ பிளேக் உள்ளிட்டோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் நிலையத்துக்கு செல்லும் பெண்கள் மீது துன்புறுத்தல்கள்!



### யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாலியல் ரீதியாக பாதிக்கப்படுகின்ற பெண்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளைக் கொடுக்கச் செல்லும் போது கடமையில் இருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அந்தப் பெண்களிடம் தொலைபேசி இலக்கங்களைக் கேட்பதாகவும் அவர்களின் வீட்டுக்கு வருகிறேன் என பெண்களை துன்புறுத்துவதாகவும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் யாழ்.மாவட்டத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இவற்றைக் (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் கோரிக்கைக்கு ஐ.தே.க.வரவேற்பு

லிபியாவின் முன்னாள் அதிபர் கேணல் கடாபியின் மரணம் இடம்பெற்ற சூழ்நிலை குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென இலங்கை அரசாங்கம் கோரியுள்ளமைக்கு ஐக்கிய தேசிய கட்சி வரவேற்பு தெரிவித்துள்ளது.

இக்கொலை தொடர்பில் விசாரணை நடத்தவேண்டுமென அரசாங்கம் கோருவது சரியானது என ஐ.தே.க. பேச்சாளர் கஜந்த கருணாதிலக்க செய்தியாளர் மாநாடு ஒன்றில் கூறியுள்ளார்.

அதேவேளை முழுநாட்டையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சர்வாதிகாரிகளின் இறுதி முடிபு கடாபியை போன்றே அமையும்

## சரத் பொன்சேகா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

லிபியாவின் சர்வாதிகாரியான முவம்மர் கடாபி நாயைப் போன்று பதுங்கு குழி ஒன்றில் வைத்துச் சுடப்பட்டார். இதுதான் சர்வாதிகாரிகளின் இறுதி முடிபு.

இந்நாட்டு மக்களை நேசித்து மக்களுக்கான ஆட்சி இலங்கையில் நிலவ வேண்டுமானால் 18ஆவது திருத்தச் சட்டமூலத்தை நீக்க வேண்டும் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்துக்கு நேற்றுச் சென்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பதவிகளை நீக்குமாறு முதலாவது நீதிமன்றம் முன் வைத்த சிபார்சுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணை ஒன்று எதிர்வரும் ஜனவரி மாதம் 23ஆம் திகதி இடம்பெறவுள்ளதால் அன்றைய தினமே இவ்வழக்கையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ரோஷினி மாரசிங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இரு தரப்புச் சட்டத்தரணிகளும் குறிப்பிட்டனர். அதற்கு அனுமதி வழங்கிய மேன்முறையீட்டு நீதிமன்றம் 2012ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23ஆம் திகதி வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானித்தது. (எ-5)

## வடகிழக்கில் மீண்டும் பொலிஸ் பதிவு

வடகிழக்கில்பல்வேறு இடங்களில்வீடுகளில் தங்கியிருப்பவர்கள் விபரங்கள் பொலிஸாரால் திரட்டப்படுவதாக தகவல்கள் கூறுகின்றன. வீடுகளில் நிரந்தரமாக தங்கியிருப்போர் மற்றும் தற்காலிகமாக தங்கியிருப்போர் விபரங்கள் கேட்கப்படுவதாக உள்ளூர்வாசிகள் கூறுகின்றார்கள்.

பொலிஸ் கட்டளைச்சட்டத்தின் 76ஆவது பிரிவின் கீழ் பொலிஸாருக்கு உள்ள அதிகாரத்தின் கீழ் இத்தகவல் கேட்கப்படவுள்ளதாக தெரிகிறது. இத்தகவல்கள்குறித்து பொலிஸ் அல்லது பாதுகாப்புத்துறை அதிகாரிகளிடமிருந்து தகவல்கள் வெளிவரவில்லை. (ச-9)

# பெண்ணை நிர்வாணமாக வீடியோ எடுத்து

## கப்பம் கோரிய நபர் கைதானார்

(கொழும்பு)

பெண்ணொருவரை நிர்வாணமாகப் வீடியோவில் பதிவு செய்து அப்பெண்ணை அச்சுறுத்தி 50 ஆயிரம் ரூபாய் கப்பம் கோரிய நபரை கொட்டாவை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மேற்படி நபரை உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு அநுராதபுரம் பிரதான நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான தர்ஷிகா விமலசிரி அநுராதபுரம் பொலிஸாருக்கு உத்தரவிட்டதற்கமைவாக பொலிஸார் இந்நபரை கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம் தம்மென்னா குளம் பகுதியை சேர்ந்த பெண்ணொருவர் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டையடுத்தே நீதவான் இவ்வுத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

கப்பம் கேட்டு அச்சுறுத்திய நபர் குறித்த பெண்ணின் வீட்டுக்கு வர்ணப்பூச்சுகள் பூசுவதற்காக சென்றபோது அப்பெண்ணின் நிர்வாணப் படங்களை எடுத்து கப்பம் கேட்பதாகவும் இதனால் வீட்டில் பல்வேறுப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸ் நிலையத்தில் அப் பெண் முறைப்பாடு செய்துள்ளார்.

சந்தேக நபர் இராணுவத்திலிருந்து தப்பியோடி வந்தபோது கொண்டுவந்த ஆயுதங்கள் இருப்பதாகவும் அதனைப் பயன்படுத்தி தன்னை அச்சுறுத்துவதாகவும் அவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவுக்கமைவாக மேற்படி நபரை இன்று செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். அநுராதபுரம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தின் முறைப்பாட்டுப் பிரிவின் பொறுப்பதிகாரி ஆர்.எம்.என்.ரத்நாயக்காவின் ஆலோசனைப்படி பொலிஸ் அதிகாரி கல்தேரா நீதிமன்றில் விளக்கங்களை முன்வைத்தார். (எ-5)

# ரெலோ பிரதிநிதிகளுக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை

## கூட்டணிக்குள் குழப்பம் என குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அமெரிக்க விஜயத்தின்போது கூட்டணிக்கட்சியான ரெலோவைச் சேர்ந்த எந்தவொரு உறுப்பினருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனவும் அதனால் கூட்டணிக்குள் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம் ஆகிய இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் ரெலோ கட்சியை பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

தமது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனவும் எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி திருகோணமலையில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை சந்தித்து இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் ரெலோ முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். (எ-5)

# இசுறு திட்டத்தில் அமைக்கப்பட்ட கட்டிடங்களை திறக்கப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிகளில் இசுறு பாடசாலை திட்டத்தில் அமைக்கப்பட்ட புதிய கட்டிடங்களை எதிர்வரும் 12ஆம் திகதி திறந்து வைக்குமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நிலையில் குறித்த பாடசாலைகளில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் கட்டிடங்களுக்கான வேலைகள் துரிதகதியில் இடம்பெற்று வருகிறது.

இதேவேளை இப்பாடசாலைகளின் புதிய கட்டிடங்களை திறந்து யாழ்.மாவட்டத்தில் இசுறு பாடசாலைச் திட்டத்தை ஆரம்பித்து வைக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)


## தேவை

1. கணனி தட்டெழுத்தாளர்
Type setting செய்யக்கூடிய பெண்கள் தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது.
2. Clerk
ஆண்/ பெண் இருபாலாரும் நேரில் வரவும்.

## திசைகாட்டி

முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் நகரிலிருந்து கஸ்தூரியார் வீதி ஊடாக வருகையில் யாழ். இந்துக்கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)
☎ : 021 4914527 (சி-4815)


# இலங்கை போர்க்குற்றம் குறித்த பேச்சை தவிர்க்க வழிசெய்யும் கடாபியின் மரணம்

## மனித உரிமை ஆர்வலர்கள் கவலை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் இறுதிப்போரில் இடம்பெற்ற யுத்த குற்ற விவகாரங்கள் தொடர்பான மேற்குலகு காட்டிவந்த அக்கறையை அடியோடு இல்லாது செய்துவிடும் சாத்தியத்தை லிபியாவின் அதிபர் கடாபியின் மரணம் ஏற்படுத்தியுள்ளதாக மனித உரிமை ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஈழப்போரின் இறுதிப்பகுதியில் முன்னேற்பாட்டின் பிரகாரம் வெள்ளைக்கொடியுடன் சரணடையச்சென்ற புலித்தேவன், நடேசன் உள்ளிட்டவர்களை எப்படி நடத்தியதோ அதே போன்றே லிபியாவின் புரட்சிப்படைகளினால் கைது செய்யப்பட்ட கடாபியும் உயிரோடு கைதுசெய்யப்பட்டு பின்னர் கொல்லப்பட்டதை உறுதிப்படுத்திய பின்பே இக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

கடாபியின் மரணம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்குமாறு ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமை ஆணையர் நவநீதம்பிள்ளையிடம் பல தரப்பும் முறையிட தொடங்கிய நிலையிலேயே இலங்கையில் இடம்பெற்றதும் கடாபிக்கு இடம்பெற்றதும் ஒரேவகையான மீறல்களே என மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியப்பிரிவின் இயக்குநர்பிராட் அடம்ஸ்பிபிசிக்குதெரிவித்திருந்தார்

இந்த லிபியப் புரட்சிப்படைக்கு ஆதரவான வான் தாக்குதல்களிலும் கூட்டுத்தாக்குதல்களிலும் நேட்டோ நாடுகளைச் சேர்ந்த படைகளே ஈடுபட்டதுடன் அவைகளே இந்தப் புரட்சிப்படையின் வழிகாட்டியாகவும் இருந்தபடியால் கடாபியின் கொலை மீதானக் குற்றச்சாட்டு அவர்கள் மீதும் திணிக்கப்படும் என்ற அச்சமே அவை. இனி இலங்கையின் யுத்தக் குற்ற விவகாரங்களில் பெரிதாக குரல் எழுப்ப மாட்டா என்ற சந்தேகத்தைக் கொண்டுவந்துள்ளது. (எ-5)


## 16-ம் நாள் நினைவஞ்சலி



கடந்த 9-10-2011இல் இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர் இளைப்பாறிய
அரச எழுது வினைஞரும், தேசிய
வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின்
கிளிநொச்சி மாவட்ட உதவி
முகாமையாளராகவும், மேற்படி சபையின்
யாழ் மாவட்ட முகாமையாளராகவும்
பணிபுரிந்து இளைப்பாறியவரும்,
சமூகசேவையாளருமான
**அமரர் கனகசபை சின்னராசா J.P**
அரச சத்திய மொழிபெயர்ப்பாளரின்
ஆன்மா சாந்தியடைய 16-ம் நாளாகிய
இன்று இறையருளை
பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் சபிண்டீகரண கிரியைகளும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறுவதிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஈஸ்வர வாசா
மயிலணி, சுன்னாகம். (6671)

- குடும்பத்தினர்


# மைக்றோ பினான்ஸின் நுண்கடன் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சென்றல் இன்வெஸ்றமென்ட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி. (CIFL) நிறுவனத்தின் மைக்றோ பினான்ஸ் பிரிவு இன்று காலை 8.00 மணியளவில் யாழ்.மாவட்டத்திற்கான முதல் நுண்கடன் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்தவுள்ளது.

இந் நிகழ்வு காலை 8.00 மணிக்கு கொட்டடி கிராம சேவையாளர் நிலையத்தில் மைக்றோ பினான்ஸ் யாழ்.மாவட்ட வெளிக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.கஜமுகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் கொழும்பு CIFL நிறுவன மைக்றோ பினான்ஸ் பிரிவின் இயக்குநர் எஸ்.ரட்ணசூரியா பிரதம விருந்தினராகவும் மைக்றோ பிரிவின் ஒருங்கிணைப்பாளர் அன்ரன் ஜோய், யாழ். பிரதேச முகாமையாளர் இ.இராஜமகேந்திரசிங்கம், கொட்டடி கிராம சேவையாளர் சேந்தன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இத்திட்டத்தில் வேலணை, கொட்டடி ஆகிய பிரதேசங்களைச்சேர்ந்த 48 சுய தொழில் முயற்சியாளர்கள் இக் கடனைப் பெற தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ)

# இன்று ஒரு தகவல்

## அசோகசக்கரவர்த்தி

ஒருநாள் அசோக மன்னர் உலா வந்து கொண்டிருக்கிறார்.

அவர் அருகில் ஆலோசகர்கள் அனைவரும் படைசூழ வந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்தச் சமயத்தில் எதிரில் புத்த பிக்கு ஒருவர் வந்தார்.

புத்த பிக்குவைப் பார்த்ததும் அசோக மன்னன் ஓடிப்போய் அவரது காலில் விழுந்து வணங்கினார்.

அவ்வேளையில் அசோக மன்னரின் தலை அந்த பௌத்த துறவியின் பாதத்திற்பட்டது.

இந்தக் காட்சியைக் கண்ட அமைச்சருக்கு மிகவும் சங்கடத்தை ஏற்படுத்தியது. அவர் மிகவும் மனம் வருந்தினார்.

"நமது அசோகச்சக்கரவர்த்தி எவ்வளவு பெரியவர்! அவருடைய தலை ஒரு சந்நியாசியின் பாதத்தில் படுவதா?" என்று நினைத்து அமைச்சர் மிகவும் கவலைப்பட்டார்.

அரண்மனை திரும்பியதும் அமைச்சர் மெதுவாகப் பேச ஆரம்பித்தார்.

"அரசே! நான் மிகவும் வருத்தப்படுகிறேன்! என்றார். எதற்கு நீங்கள் வருத்தப்படுகிறீர்கள்?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

"அசோகச்சக்கரவர்த்தியின் சிரம் மிகவும் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய ஒன்று. அது ஒரு சந்நியாசியின் காலில் படுவதா" என்று அமைச்சர் வினவினார்.

அதற்கு மாமன்னர் எதுவும் கூறாமல் புன்னகை செய்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்.

அதன்பின்னர் அசோகச்சக்கரவர்த்தி ஒரு சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார்.

அவர் ஒருநாள் அமைச்சரைக் கூப்பிட்டு எனக்கு மூன்று சிரங்கள்... அதாவது தலைகள் வேண்டும்! என்று கட்டளை பிறப்பித்தார்.

"முதலில் ஓர் ஆட்டின் தலை... இரண்டாவது ஒரு புலியின் தலை... மூன்றாவது ஒரு மனிதனின் தலை... இந்த மூன்று தலைகளையும் நீ எங்கிருந்தாவது கொண்டுவா" என்று அரசர் கூறினார்.

அமைச்சர் அதற்கு இசைந்து உடனே புறப்பட்டார்.

அவருக்கு ஆட்டுத்தலை உடனே கிடைத்தது. சிறிது நேரம் செல்ல சிரமப்பட்டு காட்டிலிருந்து ஒரு புலித் தலையையும் சேகரித்தார். அவர் அதன் பின்னர் ஒரு சுடுகாட்டிற்குப் போய் ஒரு மனிதத் தலையும் சேகரித்தார்.

இந்த மூன்று தலைகளையும் எடுத்துக்கொண்டு அவர் அரசரிடம் வந்து சேர்ந்தார்.

"அரசே! உங்கள் ஆணைப்படி மூன்று தலைகளையும் கொண்டு வந்திருக்கிறேன்!" என்றார்.

அவற்றைப் பார்த்த அசோக மன்னர் "மிகவும் நல்லது. இப்போது இந்த மூன்று தலைகளையும் எடுத்துக் கொண்டு போய் சந்தையில் விற்றுவிட்டு வாருங்கள்" என்று கூறினார்.

அமைச்சர் மூன்று தலைகளையும் எடுத்துக் கொண்டு சந்தைக்குச் சென்றார்.

சந்தையில் ஆட்டுத்தலையைத் வாங்குவதற்குப் பலர் முன்வந்தனர். உடனே அது விற்றுவிட்டது.

அடுத்தபடியாக புலித்தலையை ஒருவர் வாங்கிக் கொண்டார்.

அந்தச் சந்தையில் மனிதத்தலையை மட்டும் வாங்குவதற்கு யாரும் முன்வரவில்லை. அதை எல்லோரும் பார்த்துவிட்டு விலகிச் சென்றார்கள்.

அமைச்சர் அரசரிடம் திரும்பி வந்து "அரசே! இந்தத் தலையை மட்டும் யாரும் வாங்கமாட்டேன் என்கிறார்கள்" என்றார்.

அதைக் கேட்ட அரசர் "சரி... பரவாயில்லை! அதை இனாமாகவே கொடுத்து விடுங்கள்" என்றார்.

அமைச்சர் மறுபடியும் சந்தைக்குச் சென்று இலவசமாகத் தருகிறேன்... இதை வாங்கிக் கொள்ளுங்கள்... என்றார்.

அப்போது அதை யாரும் வாங்குவதற்கு முன்வரவில்லை. எனக்கு வேண்டாம்! எனக்கு வேண்டாம்! என்று சொல்லி எல்லோருமே முகத்தைத் திருப்பிக்கொண்டு சென்றார்கள்.

அமைச்சர் மறுபடியும் அரண்மனைக்கு திரும்பி வந்து மன்னனிடம் கூறினார்.

அப்போது அசோகச்சக்கரவர்த்தி சொன்னார். அமைச்சரே உயிர் இருக்கும் வரையில் தான் இந்தத் தலைக்கு மதிப்பு உயிர் பிரிந்த பின்னர் அதன் மதிப்பும் போய் விடுகிறது. அதனால் மதிப்பு இருக்கும் போதே பெரியவர்கள் பாதம் பணிந்து அவர் புனிதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார்.

பணிவு என்பது வேறு... அடிமைத்தனம் என்பது வேறு... பெரியவர்களைப் பணிவது நமக்குப் பெருமை தரக்கூடிய ஒரு விடயமாகும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அன்பு வாரத்தை முன்னிட்டு மாணவரிடையே போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய சத்திய சாயி நிறுவனங்களின் இணைப்புக்குழுவினால் அன்புவாரம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 30 ஆம் திகதி வரை கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நிகழ்வினையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே கட்டுரை, கவிதை, சித்திரப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இதில் கட்டுரை முதலாம் பிரிவில் 11, 12, 13 ஆம் ஆண்டு மாணவர்கள் கட்டுரையினை ஏ4 அளவு கடதாசியில் 3 பக்கங்களிற்கு மேற்படாது எழுதுதல் வேண்டும். 3 ஆம் பிரிவில் 8, 9, 10 ஆண்டு மாணவர்கள் கட்டுரையினை ஏ4 கடதாசியில் இரு பக்கங்களிற்கு மேற்படாது எழுதுதல் வேண்டும், 3 ஆம் பிரிவில் 5, 6, 7 ஆம் ஆண்டு மாணவர்கள் கட்டுரையினை ஏ4 கடதாசியில் ஒரு பக்கத்திற்கு மேற்படாது எழுதியிருத்தல் வேண்டும்.

அத்தோடு முதலாம் 2 ஆம் பிரிவினர் அன்பு ஓர் மகா சக்தி, எனது வாழ்வில் அன்பின் அனுபவம், அன்பே மனித இயல்பு, இயற்கையில் அன்பு போன்ற தலைப்புக்களில் ஏதாவது ஒன்றி னையும் 3 ஆம் பிரிவினர் அம்மா வின் அன்பு அல்லது குருவின் அன்பு என்ற தலைப்பிலும் எழுதுதல் வேண்டும்.

இதில் கவிதைப் போட்டியில் முதலாம் பிரிவினருக்கு மட்டும் அன்பு எனும் தலைப்பில் எட்டுவரிகளிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

சித்திரப்போட்டியில்வரையப்படும் சித்திரம் முதலாம் பிரிவினருக்குமட்டும்அன்பை வெளிப்படுத்த கூடியதாக அமைதல் வேண்டும்.

மாணவர்கள் 30 நிமிடத்துள்குள் பூர்த்தி செய்யத்தக்க வகையில் பொருத்தமான நேரத்தை அதிபர் வழங்குதல் வேண்டும்.

அத்துடன் மாணவர்களால் ஆக்கப்பட்ட ஆக்கத்தினை அதிபர் உறுதி செய்து கே.வி. சிவனேசன், சத்தி சாயி மனிதமேம்பாட்டு கல்வி இணைப்பாளர், சாயி தர்சன் கொக்குவில் எனும் முகவரிக்கு தபால்மூலமாக 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டுமென தலைவர் கலாநிதி ஆர்.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அத்தோடு மேலதிக தக வல்களுக்கு 2226019 என்ற தொலைபேசி இலக்கத்தடன் தொடர்பு கொள்ளலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-12)

# தாய்லாந்து செல்வோர் வெளியுறவு அமைச்சிடம் ஆலோசனை பெற வேண்டும்

இலங்கையிலிருந்து தாய்லாந்து நாட்டுக்கு செல்வோர் வெளியுறவுத்துறை அமைச்சிடம் ஆலோசனை பெறவேண்டும் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

வெளியுறவு அமைச்சின் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவுக்கான பணிப்பாளர் சரத் திசாநாயக்க இந்த வேண்டு கோளை முன்வைத்துள்ளார். தாய்லாந்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாக இந்த தீர்மானத்திற்கு அமைச்சு வந்துள்ளது.

அந்நாட்டில் வெள்ளப்பெருக்கு காரணமாக 350 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதுடன் ஆயிரக்கணக்கானோர் பாதிப்புற்றுள்ளனர்.

மேலும் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படவாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தாய்லாந்து நாட்டுக்குச் செல்லும் இலங்கையர்கள் பாதிப்படையக்கூடாது என்பதற்காக அமைச்சிடம் ஆலோசனை பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.(4-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 130 | 130 | 100 |
| தக்காளி | 40 | 70 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 20 |
| கோவா | 40 | 60 | 30 |
| கரட் | 80 | 120 | 40 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 40 | 40 | 30 |
| வாழைக்காய் | 35 | 20 | 20 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 70 |
| பாகற்காய் | 80 | 90 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 70 | 90 | 70 |
| பயற்றங்காய் | 80 | 120 | 60 |
| லீக்ஸ் | 50 | 40 | 30 |
| பீற்றூட் | 20 | 20 | 20 |
| கறிமிளகாய் | - | 90 | 65 |
| முருங்கைக்காய் | 20-25 | 60 | 40 |
| போஞ்சி | - | 110 | 60 |
| கத்தரிதம்புள்ள | - | 60 | 25 |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 10 |
| தேசிக்காய் | 300 | 500 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# இராசி பலன்

25.10.2011
(ஐப்பசி 08, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
திரியோதசி காலை 7.17 மணிவரை
சதுர்த்தசி பின்னிரவு 4.56 மணிவரை
அர்த்தம் பின்னிரவு 12.41 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சுபநேரம் 10.32-12.02மணிவரை
இரவு சந்திர உதயத்தில் நாக சதுர்த்தசி ஸ்நானம்

**மேடம்** — தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சி வெற்றியளிக்கும், நல்லவர்களின் ஆதரவும், அறிவுரையும் கிடைக்கும்.

**இடபம்** — அருமையான நாள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள், அரசுவழி அனுகூலமுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**மிதுனம்** — இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொலைபேசி மூலம் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், வாகன சுகமுண்டு.

**கடகம்** — கனிவான பேச்சுக்களால் காரியங்களைச் சாதிப்பீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், வியாபார விருத்திக்கு பாடுபடுவீர்கள், இளைய சகோதரர் வழியில் நன்மையுண்டு.

**சிங்கம்** — எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், உத்தியோக நன்மையுண்டு, ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பேச்சில் இனிமை பிறக்கும். வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி** — பெண் தெய்வவழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**துலாம்** — ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க நேரிடலாம், வேலைச்சுமை அதிகரிக்கும், தொழில் கூட்டாளிகளிடம் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை, இடமாற்றங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** — வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், சகோதர ஒற்றுமை பலப்படும், பணவரவு திருப்திதரும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**தனுசு** — வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும், பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும்.

**மகரம்** — புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், நல்லவர்கள் தொடர்பால் நலம்காணும் நாள், பூமிப்பிரச்சினைகள் தீரும், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** — துயரங்கள் தீர துர்க்கை அம்மனை வழிபட வேண்டிய நாள், உறவுகள் செயற்பாடுகளில் பிறர் குறை கண்டு கொள்ளலாம், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

**மீனம்** — மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், இனசன தொடர்புகள் அதிகரிக்கும் கணவன் மனைவியிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், கௌரவமான நாள்.-

வளவன்





அன்பே சிவம் மன்றத்தினின் அனுசரணையுடன் 52 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் வடமாராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துரு சிங்க உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் அன்பே சிவம் மன்றத்தலைவர் ஏ.அருளானந்த சோதி மாணவி ஒருவருக்கு வங்கிப் புத்தகத்தை கையளிப்பதனையும் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.செல்வதீபன்)

# டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு துப்புரவுப்பணி

(நல்லூர்)

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட அச்சுவேலி கிராமத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்குறித்த கிராமத்தில் வீடுகள் மற்றும் பொது இடங்கள், இந்து மயானங்கள் ஆகியவற்றில் உள்ள கழிவுப்பொருட்கள் 40 இற்கும் மேற்பட்ட உழவியந்திரங்கள் மூலம் அகற்றப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையில் வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் அ.உதயகுமார் ,பிரதேச சபை உறுப்பினர்கள்,சுகாதார பரிசோதகர்கள் கிராம சேவையாளர்கள் ,சமுர்த்தி உத்தியோகர்த்தகர்கள், பொது மக்கள் ஆகியோர் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

(4-3-134)

# வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(நல்லூர்)

நிலாவரையில் இருந்து வடக்கு புன்னாலைக்கட்டுவன் சந்திக்குச் செல்லும் ஈவினை வீதி மக்கள் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

இவ்வீதியில் உள்ள பெரிய பள்ளங்களில் மழைகாலத்தில் நீர் தேங்கியுள்ளதால் மக்கள் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய அவலநிலை உள்ளது.

இப்பகுதியில் கூடுதலான விவசாயிகள், மக்கள், மாணவர்கள் போக்குவரத்தை இலகுவாக மேற்கொள்ள முடியாதுள்ளது.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்தில் கொண்டு இவ்வீதியை புனரமைத்து மக்கள் போக்குவரத்துக்கு உதவுமாறு மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(4-3-134)

# தீபாவளி தினத்தை முன்னிட்டு தடகள விளையாட்டு போட்டி

(நல்லூர்)

தீபாவளி தினத்தை முன்னிட்டு கோப்பாய் கண்ணகை அம்மன், சனசமூக நிலையமும் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் தடகள விளையாட்டுப்போட்டி நாளை புதன்கிழமை பி.ப 1.30 மணிக்கு கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் தலைவர் த. கோபிதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்புவிருந்தினராக யாழ்ப்பாண தேசிய கல்வியற்கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன், கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய அதிபர் அ.ஆனந்தராஜா,கோப்பாய் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் செல்வி இ.அகல்யா,தீவககல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் க. பிரபாகரன், கிளிநொச்சி இலங்கை வங்கி உத்தியோகத்தர் ஸ்ரீ.பார்த்தீபன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்

அன்றைய தினம் காலை 6 மணிக்கு மரதன் ஓட்டப் போட்டியும் நடைபெறவுள்ளது.

(4-3-134)




# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு போட்டிகள்

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தினரால் மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி, ஆங்கில வாசிப்பு போட்டி என்பன கச்சாய் பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தரம் 4 தொடக்கம் தரம் 9 வரையான மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி நடைபெறவுள்ளது.

அத்தோடு எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணிக்கு பிரிவு 4,5 இற்கான கட்டுரைப் போட்டியும் எதிர்வரும் 31 ஆம் திகதி பிரிவு 1,2 இற்கான ஆங்கில வாசிப்பு போட்டியும் நடைபெறவுள்ளன.

விண்ணப்பித்த மாணவர்களை உரிய நேரத்திற்கு சமுகமளிக்குமாறு கச்சாய் பொது நூலகர் திருமதி கோ. ராதிகா அறிவித்துள்ளார். (4-3-29)

# கிரிக்கெட் இறுதிச் சுற்றுப் போட்டியில் சாவகச்சேரி சிவன் அணி சம்பியனானது

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச விளையாட்டு கழகங்களுக்கிடையில் நடைபெற்ற கிரிக்கெட் இறுதிச்சுற்று போட்டியில் சாவகச்சேரி சிவன் அணி வெற்றி பெற்று சம்பியனாகியது.

52 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் 522 ஆவது படைப்பிரிவினரால் சாவகச்சேரி நகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட கிரிக்கெட் இறுதிச்சுற்றுப் போட்டியில் சாவகச்சேரி சிவன் அணியை எதிர்த்து மட்டுவில் வளர்மதி விளையாட்டுகழக அணி மோதியுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிவன் அணியினர் 20 ஓவர்களில் 10 விக்கெட்டுக்களை இழந்த 89 ஓட்டங்களை பெற்றனர். அவ்வணியை எதிர்த்து விளையாடிய மட்டுவில் வளர்மதி அணியினர் 18 ஓவர்களில் 10 விக்கெட்டுக்களை இழந்து 82 ஓட்டங்களை பெற்றிருந்தனர்.

இப்போட்டியில் சிறந்த பந்து வீச்சாளராக சிவன் அணியைச் சேர்ந்த கே.தீபன், ஆட்டநாயகனாக சிவன் அணியை சேர்ந்த ரி.கிரிசாந் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்போட்டியாளர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் மகிந்தஹத்துருசிங்க வழங்கி கௌரவித்தார்.

(4-3-29)

# வீதியில் நிறுத்தப்படும் வாகனங்களால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள பிரதான வீதியின் இரு மருங்கிலும் வாகனங்களை நிறுத்துவதால் போக்குவத்திற்கு இடையூறாக உள்ளது.

இவ்வாறு வாகனங்களை நிறுத்துவதால் பாதசாரிகளும் வாகனங்களில் செல்வோரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

முன்பு குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் வாகனங்களை நிறுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டது.

தற்போது அந்நடைமுறை பின்பற்றப்படாததால் அவ்வாகன நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு வாகனங்களை போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்காத வகையில் நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(4-3-29)

# நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்யை தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தரா்ஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 3 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3)

# கருத்தரங்கு

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இலங்கை தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையினரால் வாசிப்பு சம்பந்தமான ஊக்குவிப்பு கருத்தமர்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பு கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தமர்வில் ஒவ்வொரு உள்ளூராட்சி சபை நூலகங்களிலிருந்தும் 2 நூலகர்களை பங்குபற்றுமாறு இலங்கை தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையினர் அறிவித்துள்ளனர். (4-3-29)

# விளையாட்டுவிழா

(கரவெட்டி)

அல்வாய் வடக்கு நக்கீரன் சனசமூக நிலையத்தின் 63 ஆவது வருட தீபாவளி விளையாட்டுவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலையத்தலைவர் செல்வன் சி.ரிசான் தலைமையில் நடைபெறவுள்ளது.

அத்துடன் மேற்படி நிகழ்வில் 5 மைல் மரதன் ஓட்டம் 4 X 400 மீற்றர் அஞ்சல் ஓட்டம் பார்வையாளர்களுக்கான ஒரு மைல் ஓட்டம், கிறிஸ் கம்பம் ஏறுதல் ஆகிய விளையாட்டுகள் இடம்பெறவுள்ளது. (4-3-24)

# 31 ஆவது நாள் நினைவஞ்சலி

## இரவிச்சந்திரன் கஜப்பிரியன்



பிறப்பு 03.05.2006 இறப்பு 25.09.2011

அப்படி உன் ஒவ்வொரு அழுகையும்
சிரிப்பும், எம்மையும் சேர்த்து சிரிக்கவும், அழவும், சிந்திக்கவும்
வைக்குமொரு தருணத்தில் தான்
பாடங்களை சுமந்து நீ பள்ளிக்குப் போகத் தொடங்கினாய்
போகும் போது இதயம் வழிய கண்ணீரோடு போகும் நீ
வரும் போது புத்தகப்பை நிறைய
சிரிப்பை மட்டும் வாரிக் கொண்டு வந்தாய்
இது புரிந்தும் உன் அழும் விழிகளைத் துடைத்து விட்டு
எந்த கட்டாயத்தை சாதித்துக் காட்டிட
உன் அழுகையினை மீறியும் உன்னைப் பள்ளிக்கு
அனுப்புகிறோமோ தெரியவில்லை
நீ பிறந்தாய் எமக்குள் ஒரு பூ பூத்தது
அப்பா, அம்மா எனும் வாசமாய் உடலெங்கும்
கமழத் தொடங்கியது பின் நீ வளர வளர
அந்த அப்பா, அம்மா எனும் வாசத்தால்
நாமும் உலகெங்கும் மணம் பரப்பி
மதிப்பால் நிரம்பி நின்றோம்
இன்னும் உன்னிடம் நாம் பெற்ற பெரும்
பாடங்கள் ஏராளம் ஏராளம்
எமது குழந்தைப் பருவ கேள்விகளுக்கு விடையும்
வளரும் போது சந்தித்த குழப்பங்களுக்கு
தீர்வையும் உன்னிடமிருந்தே
நாம் பெற்றுக் கொண்டோம்
நாம் உள்ளே அழும் அழுகையின் சப்தம் கேட்டு
நாளை நீ பிறந்து வாழத்தக்கவனாய்
வருகையால் எமை உனக்குப் புரியலாம்
போலெனை எம் ஒவ்வொரு சொட்டுக் கண்ணீரும்
பூமியில் சிந்திக் கொண்டே எமக்கு
ஆறுதல் சொல்கிறது

தகவல்:-குடும்பத்தினர்
ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்.
T.P.:021 222 3844

(அ-4812)

# நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த ஐக்கிய தேசிய கட்சியால் முடியும்

## வ.ம.மாகாண எதிர்க்கட்சி தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க சட்டத்தையும் ஒழுங்கினை யும் பேணியிருந்தால் நாட்டில் மக்கள் நல்லாட்சியை அனுபவித்திருப்பர். ஆனால், இங்கு பாதாள உலகினரையும் போதைப் பொருள் வியாபாரிகளையும் பாதுகாக்கும் ஆட்சியே இங்கு இடம்பெற்று வருகின்றது.

இதனால் சட்டம் -ஒழுங்கு என்றால் என்னவென்றும் மக்கள் கேள்வி எழுப்பும் நிலைமை உருவாகிவிட்டதாக வட மத்திய மாகாண எதிர்க்கட்சி தலைவர் பிரசன்னா ஷாமல் செனரத் தெரிவித்தார்.

நாட்டின் அபிவிருத்தியும் மக்களின் பாதுகாப்பும் நல்லாட்சியும் என்பது அரசியல் தீர்க்க தரிசனம் மிக்க ரணில் விக்ரமவினால் மாத்திரமே சாத்தியமாகும். எனவே, அவரது ஆலோசனைகளின் பிரகாரம் செயற்பட்டு அவரது கரங்களை பலப்படுத்துவதன் மூலம் முழு நாட்டையும் வெற்றி கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே வடமத்திய மரகாண எதிர்க்கட்சி தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

அரசியல்வாதிகளாக மக்களின் பிரதிநிதியாக வருவோர் கல்வியறிவு படைத்தவர்கள் ஆகவும் ஒழுக்கம் நிறைந்தவர்களாகவும் இருக்க வேண்டும் என்பது முன்னோர்களின் வழிகாட்டலாகும். ஆனால், இன்றைய அரசியல்வாதிகள், பாதாள உலகினராகவும் போதைப் பொருள் வியாபாரிகளாகவும் இருக்கின்றனர். மறுபுறத்தில் சண்டியர்களும் அரசியல் வாதிகளாக இருக்கின்றனர்.

அரசாங்க கட்சிக்குள்ளேயே இந்த நிலைமை நீடிக்கின்றது. முல்லேரியா சம்பவமானது இந்நாட்டில் சட்டம் -ஒழுங்கு இல்லை என்பதை தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறு சட்டத்துக்கு முரணாக செயற்பட்டு நாட்டின் சட்டத்தை காலால் மிதித்து விடுகின்றனர். மரத்தில் கட்டி தண்டனை விதிக்கப்படுகின்றது. பலவந்தமாக கடைகள் மூடப்படுகின்றன. தேவாலயங்களில் சமய அனுட்டானங்களின் படி நடத்தப்படுகின்ற பூஜை வழிபாடுகள் நிறுத்தப்படுகின்றன. முல்லேரியாவில் துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் இவை இப்படி இருக்க் மாகாண சபை உறுப்பினர் ஒருவரது வீட்டில் பொலிஸார் நடத்திய சோதனையினை அடுத்து இந்நாட்டின் தலைவர் அவரது வீட்டுக்கு சென்றமையானது பாரதூரமானதாகும்.

பாதாள உலகினரும் சண்டியர்களும் போதைப்பொருள் வியாபாரிகளும் காப்பாற்றப்படுகின்ற ஒரு ஆட்சியே இங்கு நிலவி வருகின்றது. மாறாக இங்கு சட்டத்திற்கு இடமில்லை என்ற நிலை உருவாகியுள்ளது என்றார். (4-2)

# கந்தசஷ்டி விரத உற்சவம்

நீர்வேலி கந்தசுவாமி கோவில் கந்த சஷ்டி உற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை சூரசங்கார உற்சவமும் மறுநாள் புதன்கிழமை காலை தீர்த்தோற்சவமும் எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை திருக்கல்யாண உற்சவமும் நடைபெறவுள்ளது. (4)

# மரண அறிவித்தல்

(6675)



## குமாரு சோமசுந்தரம்

(புங்குடுதீவு, அல்லைப்பிட்டி, யாழ்ப்பாணம்)

(ஓய்வு பெற்ற பிரதம லிகிதர் கொழும்பு, நுவரெலியா, வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு மற்றும் மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது இல.10, கன்னாதிட்டி லேன் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.குமாரு சோமசுந்தரம் 24.10.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரு-இராசம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற வடிவேலு-நாகம்மா தம்பதிகளின் மருமகனும், தேவசேனாவின் அன்புக் கணவரும், ரவிவர்மன் (போட்டோ ரவி), லயன் பாலகுமார் JP (HNB வடபிராந்திய காரியாலயம்), சரவணன் (பிரான்ஸ்), சுலோசனன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், பிரியா, குணரஞ்சினி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், வல்லிபுரம், நடராசா, நல்லையா, கந்தசாமி, நல்லம்மா மற்றும் கனகசுந்தரம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான விவேகானந்தாராஜா, அம்பிகைதாசன் மற்றும் புனிதவதி (கனடா), காலஞ்சென்ற குருதேவி மற்றும் அம்பிகைபாலன் (டுபாய்), நவரத்தினம், தங்கம்மா, தவமணி, ந.பரமேஸ்வரி, ந.பரமேஸ்வரி, கதிர்காமு, காலஞ்சென்ற க.பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சிவசுப்பிர மணியம் மற்றும் நித்தியானந்தன் (கனடா) ஆகியோரின் சகலனும் கிருஷன், சௌமியா, அஸ்வினி, அபிஷேக், அக்ஷயா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 25.10.2011 செவ்வாய்க்கிழமை 11 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக கோம்பயன் மடல் மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

இல.10.கன்னாதிட்டி லேன்,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

# பொருளாதார நெருக்கடிக்குள்ளும் அதிகரித்துச் செல்லும் இலங்கையின் பாதுகாப்புச் செலவீனம்

இலங்கையில் போர் நிறைவடைந்து இரண்டரை வருடங்கள் அண்மித்துள்ளன. இந்தக் காலப்பகுதியில் இலங்கை அரசும் அதன் படையினரும் சிறுபான்மை தமிழ்மக்கள் வாழும் பகுதிகளில் மேற்கொண்டு வரும் இராணுவ ஆக்கிரமிப்புக்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் சிங்கள மயப்படுத்தல்களை தவிர தமிழர் தரப்பில் இருந்து ஒரு துப்பாக்கிச் சன்னம் கூட சுடப்படவில்லை.

எனினும் இலங்கையின் படைத்துறைப் பலப்படுத்தல்களும் இராணுவச் செலவீனங்களும் அதிகரித்தே செல்கின்றன. எதிர்வரும் 2012 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் படைத்துறைச் செலவீனம் 223 பில்லியன் ரூபாய்கள் என கூறப்படுகின்றது. இந்த தொகையானது தற்போதைய வருடத்துடன் ஒப்பிடும் போது 13 பில்லியன் ரூபாய்கள் அதிகமாகும்.

உக்கிரமாக போர் நடைபெற்ற 2007 ஆம் ஆண்டு 139 பில்லியன் ரூபாய்களாக இருந்த பாதுகாப்புச் செலவீனம் 2008 ஆம் ஆண்டு 20 விகிதத்தினால் அதிகரித்து 166.4 பில்லியன் ரூபாய்களைத் (ஏறத்தாழ 1.5 பில்லியன் டொலர்கள் ) தொட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டு 209 பில்லியன் ரூபாய்களாகவும் 2010 ஆம் ஆண்டு 215 பில்லியன் ரூபாய்களாகவும் இருந்த பாதுகாப்புச் செலவீனம் ஒதுக்கப்பட்ட தொகைகளை விட 5 தொடக்கம் 7 சதவிகிதங்கள் அதிகரித்தே காணப்பட்டன.

எனவே, தற்போது ஒதுக்கப்பட்டுள்ள தொகையும் அடுத்த வருடம் மேலதிக தொகைளீய உள்வாங்கலாம் என்பது உறுதியானது.

அது மட்டுமல்லாது எதிர்வரும் வருடம் 6 ஆயிரம் மில்லியன் ரூபாய்களைப் புதிய படைத்துறை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு அரசு பயன்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விமானப்படையான சீனாவிடம் இருந்து இரண்டு எம்.60 ரக சரக்கு விமானங்களை கொள்வனவு செய்துள்ள நிலையில் ரஷ்யாவிடம் இருந்து அரை டசினுக்கு மேற்பட்ட தாக்குதல் உலங்குவானூர்திகளை கொள்வனவு செய்வதற்கும் படைத்தரப்பு திட்டமிட்டுள்ளது. பொதுமக்களின் போக்குவரத்து தேவை என்ற போர்வையில் விமானப்படை கொள்வனவு செய்துள்ள இராணுவச் சரக்கு விமானங்களை சீன நிறுவனம் கடந்த மாதம் இலங்கை விமானப்படையினரிடம் வழங்கியிருந்தது.

அது மட்டுமல்லாது விமானப் படை வசம் உள்ள எஃப் 7 ரக தாக்குதல் விமானங்களுக்கான வெடிபொருட்களை ஏற்றிச் சென்ற ரஷ்யத் தயாரிப்பான அன்ரனோவ் 32 பி ரக விமானம் ஒன்று இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் உள்ள விமானப் படைத்தளத்தில் அவசர தரையிறக்கம் ஒன்றையும் அண்மையில் மேற்கொண்டிருந்தது. இயந்திரக்கோளாறு காரணமாக விமானம் அவசரமாக தரையிறங்கியதால் சீனாவின் இரகசிய ஆயுத விநியோ



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சீன ஜனாதிபதி ஹூ ஜிந்தாவோ சந்திப்பு

கம் அம்பலத்திற்கு வந்திருந்தது.

இலங்கையின் வர்த்தகப் பற்றாக்குறையானது ஒரு மில்லியன் ரூபாய்களையும் கடந்து அரசிற்கு அதிக நெருக்கடிகளை தோற்றுவித்துள்ளது. தற்போது இலங்கை வசம் உள்ள நிதியானது ஐந்து மாதங்களுக்கு தேவையான பொருட்களின் இறக்குமதிக்கே போதுமானது என நிதி அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பலத்த எதிர்ப்புக்களுக்கு மத்தியில் இலங்கைக்கு 2.6 பில்லியன் டொலர்களை கடனாக வழங்கிய அனைத்துலக நாணய நிதியமும் தற்போதைய கொடுப்பனவுகளை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதுடன் இலங்கையின் நிதி பரிமாற்றங்கள் தொடர்பான கொள்கைகள் மறுசீரமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. வரிச்சலுகையின் நிறுத்தம், அமெரிக்க அரசு வழங்கிவந்த ஜி.எஸ்.பி வரிச்சலுகையின் தற்காலிக முடக்கம், இலங்கை மீது அனைத்துலக மனித உரிமை அமைப்புக்கள் மேற்கொண்டு வரும் மனிதஉரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றம் தொடர்பான குற்றச்சாட்டுக்களால் எழுந்துள்ள முதலீட்டாளர்களின் முடக்கம் என்பன இலங்கை அரசை அதிகம் அச்சுறுத்தியுள்ள நிலையிலும் அரசு தனது பாதுகாப்பு செலவீனங்களைக் குறைக்கவில்லை.

தமிழ்மக்கள் வாழும் வடக்கு, கிழக்குப் பகுதிகளை முற்றுமுழுதாக ஒரு இராணுவ வலையமாக மாற்றிவருவதுடன், தென்னிலங்கையிலும் இராணுவ அழுத்தங்களை அதிகரித்தே வருகின்றது.

தமிழ்மக்கள் மீது இலங்கை அரசு மேற்கொண்ட போர்க்குற்றங்கள் மற்றும் பெருமளவான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அனைத்துலக சமூகத்தின் ஊடாகப் புலம்பெயர் தமிழ்மக்களும், மனித உரிமை அமைப்புக்களும் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளிலிருந்து தப்பிப்பிழைப்பதற்கு தற்போதைய அரசுக்கு உள்ள ஒரேவழி தொடர்ச்சியாக ஆட்சியைத் தக்கவைப்பது. அது முடியாவிட்டால் ஒரு இராணுவ ஆட்சியை உருவாக்குவது என்பதே.

அதனைநோக்கியே தற்போதைய அரசு மெல்ல மெல்ல நகர்ந்தும் வருகின்றது. இலங்கை அரசின் இந்த நகர்வுகளை தமிழ்மக்கள் சரியாக புரிந்துகொண்டுள்ள நிலையிலும் அதனை சிங்களப் பெரும்பான்மை இனம் உணர்ந்துகொள்ளும் காலம் வரும்போது அவர்கள் முற்றுமுழுதாக அரசின் இராணுவ வலையத்திற்குள் சிக்கிவிடுவார்கள் என்பதே யதார்த்தமானது.

ஆனால் மேற்குலகத்தை எதிர்த்தபடி இலங்கை அரசு மேற்கொண்டுவரும் இந்த ஜனநாயக விரோத செயற்பாடுகளிற்குப் பக்கபலமாக இருப்பது யார் என்றால் அதற்கான விடை சுலபமானது. சீனா என்பது தெளிவானது. படைத்துறை மற்றும் பொருளாதார வழிகளில் தன்னை சீனா காப்பாற்றும் என்ற நம்பிக்கை தற்போதைய இலங்கை அரசுக்கு உண்டு. ஐந்து மாதங்களுக்கு தேவையான பொருட்களை இறக்குமதி செய்யவே நிதி உண்டு என்ற போதிலும் இலங்கை அரசுக்குத் தேவைப்படும் மேலதிக நிதியை சீன அரசு ஏதோ ஒரு வழியில் இலங்கைக்கு வழங்கியே தீரும்.

அதுமட்டுமல்லாது அனைத்துலக மட்டத்தில் எழும் இராஜதந்திர நெருக்கடிகளையும் சீனா முறியடிக்கும் என இலங்கை அரசு வலுவாக நம்புகின்றது.

அதற்கு அண்மையில் ஐ.நா.வின் பாதுகாப்புச் சபையில் மேற்குலகத்தினால் கொண்டுவரப்பட்ட சிரியா மீதான தீர்மானத்திற்கு எதிராக சீனாவும், ரஷ்யாவும் இணைந்து மேற்கொண்ட இரண்டு வீட்டோ நடவடிக்கை சிறந்த உதாரணமாகும்.

இந்த நடவடிக்கை இலங்கைக்கு அதிக நம்பிக்கையையும் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

ரஷ்யாவை நம்பி சீனா இருந்த காலம் மாறி சீனாவின் தயவில் ரஷ்யா வாழவேண்டிய காலம் வந்துள்ளது.

சீனாவின் இந்த உதவிகளுக்கு பரிகாரமாக இலங்கை முழுவதையும் சீனாவின் ஆளுமைக்குள் தள்ளியுள்ளது இலங்கை அரசு. அது மட்டுமல்லாது மாலைதீவுடன் இலங்கை அரசு மேற்கொண்டுவரும் நெருக்கமான உறவுகளைக் காரணமாக வைத்து மாலைதீவிலும் சீனாவின் ஆளுமையை ஏற்படுத்த இலங்கை அரசு உதவிகளைப் புரிந்துள்ளது.

அதன்ஒரு அங்கமாகவே மாலைதீவில் நடைபெறும் அனைத்துலக மாநாட்டுக்கு இலங்கை அரசு தனது சிறப்பு அதிரடிப்படையினரின் படைத்துறை உதவிகளை வழங்கியுள்ள அதேசமயம் மாலைதீவில் தனியான தூதரகம் ஒன்றை திறக்கும் பணிகளையும் கடந்தவாரம் சீனா ஆரம்பித்துள்ளது.

சீனாவின் இந்த நடவடிக்கையானது இந்து சமுத்திரப் பிராந்தியம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நடவடிக்கையின் மிக முக்கிய அம்சமாகும்.

இதில் மேற்குலகத்தைவிட இந்தியாவே அதிக பாதிப்புக்களைச் சந்திக்கப் போகின்றது. மாலைதீவில் தனது தூதரகத்தை சீனா திறப்பது தொடர்பில் நேரப்போகும் ஆபத்துக்கள் குறித்து இந்திய ஊடகங்கள் தமக்குள் கூச்சல்களைப் போட ஆரம்பித்துள்ளன.

ஆனால் இந்தியாவின் இந்தக் கதறல்கள் காலம் கடந்தவை. 1987 ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் தனக்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்களை அரசியல் பழிவாங்கல்கள் மற்றும் இன வன்மம் காரணமாக தவறவிட்டுள்ள இந்தியா தற்போது கதறுவதில் அர்த்தமில்லை. சந்தர்ப்பத்தைத் தவறவிடுவதே தோல்வியின் முதற்படியாகும்.

தமிழ்மக்கள் தொடர்பில் இந்திய மத்திய அரசு மேற்கொண்டுள்ள கொள்கையில் சடுதியாக மாற்றம் ஒன்று விரைவில் ஏற்படவேண்டும்.

இல்லையெனில், எந்த மேற்குலகத்தை தமிழ்மக்களின் பிரச்சினைகளிலிருந்து இந்தியா தூரவிலக வைத்ததோ அதே மேற்குலகத்தின் கால்களில் சென்று விழும் நிலையே இந்தியாவுக்கு ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

**வேல்ஸ் இல் இருந்து அருஷ்**

# கடாபியின் மரணம் குறித்த சர்ச்சை இக்கட்டான நிலையில் நேட்டோ படைகள்

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் இறுதிப் போரில் இடம்பெற்ற யுத்தக்குற்ற விவகாரங்கள் தொடர்பான மேற்குலகு காட்டி வந்த அக்கறையை அடியோடு இல்லாது செய்துவிடும் சாத்தியத்தை ஜனாதிபதி கடாபியின் மரணம் ஏற்படுத்தியுள்ளதாக மனிதவுரிமை ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஈழப்போரின் இறுதிப் பகுதியில் முன்னேற்பாட்டின் பிரகாரம் வெள்ளைக் கொடியுடன் சரணடையச் சென்ற புலித்தேவன், நடேசன் உள்ளிட்டவர்களை எப்படி நடத்தியதோ அதே போன்றே லிபியாவின் புரட்சிப் படைகளினால் கைது செய்யப்பட்ட கடாபியும் உயிரோடு கைது செய்யப்பட்டு பின்னர் கொல்லப்பட்டதை உறுதிப்படுத்திய பின்பே இக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

கடாபியின் மரணம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்குமாறு ஐக்கிய நாடுகள் அவையின் மனிதவுரிமை ஆணையர் நவநீதம்பிள்ளையிடம் பல தரப்பும் முறையிடத் தொடங்கிய நிலையிலேயே இலங்கையில் இடம்பெற்றதும் கடாபிக்கு இடம்பெற்றதும் ஒரே வகையான மீறல்களே என மனிதவு…

[…] ரிமை கண்காணிப்பகத்தின் ஆசியப் பிரிவின் இயக்குநர் பிராட் அடாம்ஸ் தெரிவித்திருந்தார்.

இந்த லிபியப் புரட்சிப்படைக்கு ஆதரவான வான் தாக்குதல்களிலும் சூட்டுத் தாக்குதலிகளிலும் நேட்டோ நாடுகளைச் சார்ந்த படைகளே ஈடுபட்டதுடன் அவைகளே இந்தப் புரட்சிப் படையின் வழிகாட்டியாகவும் இருந்தபடியால் கடாபியின் கொலை மீதான குற்றச்சாட்டு அவர்கள் மீதும் திணிக்கப்படும் என்ற அச்சமே அவை இனி இலங்கையின் யுத்தக் குற்றவிவகாரங்களில் பெரிதாக குரல் எழுப்பமாட்டா என்ற சந்தேகத்தைக் கொண்டு வந்துள்ளது.

கடாபியின் கொலை ஒரு யுத்தக் குற்ற விசாரணை என்ற கோதாவிற்குள் இட்டுச் செல்லப்பட பல தரப்பாலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த மனிதவுரிமை கண்காணிப்பகத்தின் ஆசியப் பிரிவுக்கான இயக்குநர், கடாபி எவ்வளவு கொடியவராகவும் இருந்திருக்கலாம். ஆனால், அவரைக் கைது செய்த பின் உரிய வகையில் கையாண்டிருக்க வேண்டும் என்றும் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கக் கூடாது என்றும் தெரிவித்தோடு, உடனடியாக இது யுத்தக் குற்றமா இல்லையா என்பதைச் சொல்லமுடியாவிட்டாலும் இது யுத்தக் குற்ற விவகாரமாக மாறும் சாத்தியம் பலமாக உள்ளதையும் தெரிவித்துள்ளார்.

எனவே புரட்சிப்படைகளுடன் களத்தில் நின்று போராடிய நேட்டோ நாடுகள் இந்த விவகாரத்தில் ஒரு இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதோடு இலங்கை யுத்தக் குற்ற விவகாரத்தை இனி அடக்கி வாசிக்கவும் முயலும் என்பதை சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (4-2)

# கேதார கௌரி விரத அபிஷேக ஆராதனை

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு மத்தாளோடை அருள்மிகு ஸ்ரீ கருமாரி அம்மன் ஆலய கேதார கௌரி விரத அபிஷேக ஆராதனைகள் நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து அம்மாள் வீதியுலா வலம் வந்து காப்புக் கட்டும் வைபவம் இடம் பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (4-78)

# வடபகுதி மீன்பிடித்துறை அபிவிருத்தி செய்யப்படும்

## வெளிநாடுகளின் உதவியை பெறவுள்ளேன் என்கிறார் – ராஜித

வடபகுதியின் மீன்பிடித்துறை அபிவிருத்தி தொடர்பில் அரசாங்கம் கொரியா மற்றும் நோர்வேயின் உதவியைப் பெற்று வடக்கு-கிழக்கு மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், வேலணை துறையூர் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் ஐஸ் தொழிற்சாலையை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் தொடர்ந்து கூறுகையில்,

வடபகுதியில் மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வதற்கு ஏதுவாக 6 மீன்பிடித் துறைமுகங்களை விரைவில் புனரமைப்பது உட்பட அபிவிருத்திப் பணிக்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் நான் நோர்வே செல்லவுள்ளேன். அங்கு இவ்விடயம் குறித்து எடுத்துக் கூறி உரிய உதவிகளைப் பெற்றுக் கொள்ளவுள்ளேன். இது மாத்திரமன்றி வடக்கிலிருந்து தென்பகுதிக்கு மீன்களை பாதுகாப்பாக எடுத்துச் செல்வதற்கு கூடிய விரைவில் 6 கூலர் வாகனங்களை நாம் வழங்கவுள்ளோம்.

புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் ஐஸ் தொழிற்சாலையில் தினமும் 100 தொன் ஐஸ் கட்டிகளை உருவாக்க முடியும். இதனைப் பயன்படுத்தி மீன்களைப் பதப்படுத்தி களஞ்சியப் படுத்தலாம். சரியான சந்தை வாய்ப்பு ஏற்படும் போது அதனை சந்தைப்படுத்தலாம். இதன் மூலம் மீனவர்கள் நன்மையடைவார்கள் என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (4-2)

# பருவப்பெயர்ச்சி காலநிலையால் நாடு முழுவதும் மழை காணப்படும்

## வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

உள்ளகப் பருவப்பெயர்ச்சி காலநிலை ஆரம்பித்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

மழையுடன் கூடிய கடும் காற்று வீசக் கூடுமெனவும், மின்னல் தாக்கங்களில் இருந்து பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்கவேண்டுமெனவும் திணைக்கள பணிப்பாளர் நாயகம் தெரிவிக்கிறார்.

இரண்டாவது பருவப்பெயர்ச்சி காலநிலையின் போது இலங்கை முழுவதும் மழை காணப்படுமெனவும் அத்துடன் வெளியில் செல்வதை தவிர்க்குமாறும் அவர் கூறியுள்ளார்.

கடும் காற்று வீசக்கூடிய வாய்ப்புக் காணப்படுவதுடன் மணித்தியாலத்திற்கு 200 கிலோ மீற்றர் வேகத்தில் புயற்காற்று வீசக்கூடும் எனவும் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இடியுடன் கூடிய கடும்மழை பெய்யக் கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதாகவும் 15 தொடக்கம் 30 நிமிடங்களுக்குள் 50 தொடக்கம் 100 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி ஏற்படலாம் எனவும் இதனால் வெள்ளம் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் திணைக்களம் மேலும் தெரிவிக்கிறது. (4-2)

# காணித் தகராறில் உயிரிழந்தவரின் உடல் பிரேத பரிசோதனைக்கு

(கொழும்பு)

மன்னார், முசலி பிரதேச செயலாளர்பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் சிலாபத்துறை கிராமத்தில் காணித் தகராறு காரணமாக உயிரிழந்த அப்துல் றஹீம் பர்ஸின் என்பவரது ஜனாசாவை விசேட சட்டப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக குருநாகல் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் கே. ஜீவராணி உத்தரவிட்டார்.

மன்னார், முசலி பிரதேச செயலாளர்பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் சிலாபத்துறை என்னும் கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் காணித்தகராறு காரணமாக உறவினர்கள் இருவருக்கு இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு பின்னர் அது கைகலப்பாக மாறியது.

இதன்போது அப்துல் றஹீம் பர்ஸின் வயது 34 என்பவர் ஒன்றுவிட்ட சகோதரனால் பொல்லால் பலமாக தலையில் தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்திருந்தார்.

இந்த நிலையில் கைகலப்பில் உயிரிழந்ததாகக் ளகூறப்படும் அப்துல் றஹீம் பர்ஸின் என்பவரது மரண விசாரணை மன்னார் வைத்தியசாலையில் நீதிவானினால் மேற்கொள்ளப்பட்ட போது மாறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து சடலத்தை விசேட சட்டப்பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக குருநாகல் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறும் இது குறித்து தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நேற்று முன்தினம் மாலை மன்னார் மாவட்ட நீதிவான் கே.ஜீவராணி உத்தரவிட்டார்.

இதேவேளை குறித்தநபரை பொல்லால்தாக்கியதாகக் கூறப்படும் சந்தேகநபரை கைது செய்த சிலாபத்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-2)

# பாதாள உலக குழுத் தலைவர் கராட்டே கடத்தப்பட்டார்

(கொழும்பு)

கொலன்னாவ துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் பின்னர் தலைமறைவாக வாழ்ந்து வந்த கராட்டே தம்மிக்க என்ற பிரபல பாதாள உலகக் குழுத் தலைவர் கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் ஆதரவாளர்களுக்காக தம்மிக்க பிரசாரங்களை மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

கேகாலை, பொல்ஹாவெல போன்ற பிரதேசங்களில் தலைமறைவாக வாழ்ந்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரம்புக்கன வல்பொல பிரதேசத்தில் வைத்து இனந்தெரியாத கும்பலொன்று குறித்த நபரைக் கடத்திச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படுகொலைகள், கொள்ளைகள் உள்ளிட்ட பாரிய குற்றச் செயல்களுடன் கராட்டே தம்மிக்கவிற்கு நேரடித் தொடர்பு காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

கடுவெல வசந்த என்ற பிரபல பாதாள உலகக் குழுத் தலைவர் உள்ளிட்ட ஏழுபேரை படுகொலை செய்ததாக தம்மிக்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (4-2)



ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தின் ஆதரவில் இயங்கும் *குட்டிச்சுட்டி* சிறுவர் பாடசாலையின் வருடாந்த ஆசிரியர் தினவிழா நிலைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர் மங்களவிளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் அதிபர் சண். வாமதேவன் உரையாற்றுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

# மனிதாபிமான அடிப்படையிலேயே துமிந்தவை பார்வையிடச்சென்றேன்

## கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

துமிந்த சில்வாவை பாதுகாக்க வேண்டிய அவசியமில்லை என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

துமிந்தவை வைத்தியசாலைக்கு சென்று பார்வையிட்டமை குறித்து பலர் கேள்வி எழுப்புகின்றனர். இது ஓர் மனிதாபிமான அடிப்படையில் நடைபெற்ற சம்பவமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெறுவதற்கு முதல் நாள் துமிந்த சில்வா தமது அபிவிருத்திப் பணிகளுக்கு உதவிகளை வழங்கியிருந்ததாகவும் ஆபத்து ஒன்றில் சிக்கிய போது அவரை பார்வையிடுவதில் என்ன தவறு என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

துமிந்தவை விடவும் பாரதவை தமக்கு நீண்ட காலமாகத் தெரியும் எனவும் பாரத ஜனாதிபதியின் நெருக்கிய ஆதரவாளர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யதார்த்தத்திற்கு முகம் கொடுக்க முடியாத பலர் துமிந்தவை சென்று பார்வையிடவில்லை எனவும் நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தலாக செயற்பட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் சிலர் தொடர்புகளைப் பேணி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வேறு அமைச்சர்களோ ஏனைய முக்கியஸ்தர்களோ துமிந்தவை ஏன் பார்வையிடச் செல்லவில்லை என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது கோத்தபாய ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகள், தனியார் பாதுகாப்புப் படையினரை சேவையில் ஈடுபடுத்தக்கூடாது என நீண்ட காலமாக தாம் வலியுறுத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

பாரத லக்ஸ்மன் சம்பவம் தொடர்பில் பிழையான கருத்துக்களை மக்கள் முன்னிலையில் எடுத்துச் செல்ல சில தரப்பினர் முயற்சித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

அச்சுறுத்தல் இருப்பதாக பாரத முறைப்பாடு எதனையும் செய்யவில்லை எனவும் முறைப்பாடு செய்வதற்கு அவருக்கு போதியளவு சந்தர்ப்பம் காணப்பட்டதாகவும் கோத்தபாய குறிப்பிட்டுள்ளார்.

துமிந்த சில்வாவுடன் தாம் உத்தியோகபூர்வமான உறவுகளை மட்டுமே பேணி வருவதாகவும் அதற்கு அப்பால் எவ்வித தொடர்புகளும் கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கோபுரம் நூல் இதழ் வெளியீடு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினரால் கோபுரம் எனும் இலவச தகவல் இதழ் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதழிலில் திணைக்களச் செயற்பாடுகள் பற்றிய செய்திகளும் ஆன்மீகக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

எனவே இவ்இதழைப் பெற விரும்புவோர் 12X8 அளவுகள் கடிதவுறையை தமது சுய முகவரியை எழுதி முப்பது ரூபா பெறுமதியுடைய முத்திரையை ஒட்டி வேறொரு கடிதவுறையில் வைத்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில கோபுரம் இலவச நூல் வெளியீடு என குறிப்பிட்டு பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, கொழும்பு-04 எனும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அத்தோடு நேரில் பெற விரும்புவோர் திணைக்களத்திற்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாமெனவும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் கள உதவிப் பணிப்பாளர் ம.சண்முகநாதன் தெரிவித்துள்ளார். (4-12)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான சர்வதேச அழுத்தம் தொடர்ந்தும் காணப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலிகளின் சர்வதேச அழுத்தங்களை முறியடிப்பதற்கு எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளை எவரும் சரியாக மதிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அதிஉயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல், கைதிகளை விடுதலை செய்தல், புலிச் சந்தேக நபர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல் போன்ற நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென சர்வதேச சமூகம் எதிர்பார்க்கின்றது எனவும் இது நடைமுறைச் சாத்தியமற்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (4-2)

# சித்திரவதை சட்டங்களில் திருத்தம் அவசியமானது

## சர்வதேச ஜூரிகள் குழு கோரிக்கை

(கொழும்பு)

சித்திரவதைக்கு சட்டங்களில் இலங்கை அரசாங்கம் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென சர்வதேச ஜூரிகள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் பிரகடனத்திற்கு அமைவான வகையில் இலங்கைச் சட்டத்திலும் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

சித்திரவதைகளுக்கு எதிரான சர்வதேச பிரகடனங்களுக்கு ஏற்ற வகையில் இலங்கைச் சட்டங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டம், அவசரகால ஒழுங்குகள் போன்றவற்றின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு நியாயம் கிட்டக்கூடிய வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளையும் முழுமையாக பாதுகாக்கும் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச ஜூரிகள் சபையினால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கையில் சித்திரவதைக்கு எதிரான சட்டங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு சர்வதேச ஜூரிகள் சபை பரிந்துரை செய்துள்ளது. (4-2)

# சர்வாதிகார, குடும்ப ஆட்சியாளர்களுக்கு கடாபியின் மரணம் சிறந்த பாடம்

## இடதுசாரி முன்னணியின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

லிபியாவின் மக்கள் உரிமைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட கடாபியின் ஆட்சி பின்னர் மக்களை அடக்கும் சர்வாதிகார, குடும்ப ஆட்சியாக மாறியமையே அவரது அழிவுக்கு காரணமாக அமைந்தது என இடதுசாரி முன்னணியின் தலைவரும் தெஹிவளை-கல்கிசை மாநகர சபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின தெரிவித்தார்.

உலகின் குடும்ப சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு கடாபியின் மரணம் சிறந்த பாடமாகுமென்று அவர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

லிபிய மக்களின் உரிமைகளை பாதுகாத்து அம்மக்களுக்கு சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் போராட்டத்தை ஆரம்பித்து ஆட்சியை ஆரம்பித்து கைப்பற்றியவர் கடாபி.

ஆனால் காலப்போக்கில் மக்களை அடக்கி ஒடுக்கி குடும்ப ஆட்சியை, சர்வாதிகார ஆட்சியை முன்னெடுத்தார்.

இதனால் நசுக்கப்பட்ட மக்கள் நாட்டு தலைமைத்துவத்தின் மீது அதிருப்தியும் ஆத்திரமும் வெறுப்பும் அடைந்தனர்.

மக்களின் எதிர்ப்பை சம்பாதித்ததால் கிளர்ச்சி வெடித்தது. இறுதியில் உயிரிழந்தார்.

இது சண்டையின் போது நடந்ததா அல்லது கைது செய்யப்பட்டதன் பின்னர் நடந்ததா என்பது பற்றி தெரியாது.

ஆனால் இது தொடர்பில் கண்ணீர் விட முடியாது. அதேவேளை கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தால் அது மனித உரிமை மீறலாகும்.

எனவே சர்வாதிகார, குடும்ப ஆட்சியாளர்களுக்கு இது சிறந்த பாடமாகும் என்றார். (4-2)

# பெண்ணுடன் அநாகரிகமாக நடந்த இளைஞனுக்கு ஒருவருட சிறை

## கோட்டை நீதிமன்றம் வழங்கியது

(கொழும்பு)

கொழும்பில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றின் லிப்டில் ஏறிச் சென்ற இளம் பெண்ணுடன் அநாகரிமான முறையில் நடந்து கொண்ட இளைஞர் ஒருவருக்கு கோட்டை நீதிவான் ஒரு வருட சிறைத் தண்டனை விதித்துள்ளார்.

ஹோட்டலில் நிகழ்வு ஒன்றிற்காக வந்த இப் பெண் லிப்டில் ஏறி மேல் மாடிக்குச் சென்றார். அப்போது லிப்டில் இப்பெண்ணுடன் குறித்த இளைஞர் அவருடன் தகாத முறையில் நடந்து கொண்டார்.

இவருக்கு எதிராக லிப்டில் ஏறிச் சென்ற எட்டுப்பேர் சாட்சியம் அளித்தனர்.

விசாரணை முடிவில் கோட்டை நீதிவான் லங்கா ஜயரட்ண மேற்படி சிறைத்தண்டனையையும் ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதித்தார்.

அத்துடன் பெண்ணுக்கு 75 ஆயிரம் ரூபாவை நட்ட ஈடாக செலுத்துமாறும் உத்தர விட்டார்.

சந்தேக நபர் ஆரம்ப கட்ட விசாரணைகளில் நீதிமன்றத்துக்கு வந்தார் எனவும் பின்னர் வரவில்லை என்பதால் அவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜராகுமாறும் நீதிவான் பிடியாணை பிறப்பித்தார். சந்தேநபர் இன்றி விசாரணை நடைபெற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. (4-2)





கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் 18 வயதுப் பிரிவினருக்கு இடையில் நடைபெற்ற மேற்படி போட்டியில் சம்பியனாகிய உரும்பிராய் இந்துக் கல்லூரி பெண், ஆண் அணியினரைப் படங்களில் காணலாம்.

# குருவின் பார்வையில்



ஆன்மீகம் 13

## சகிப்புத் தன்மை

உங்களைச் சுற்றியிருக்கிற மக்களை, அவர்கள் எப்படியிருக்கிறார்களோ அப்படியே உங்களால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. ஏனென்றால், எல்லோருமே உங்களைப் போலவே இருக்க வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு இருக்கிறது. எதனால் இன்னொருவருடன் பிரச்சினை வருகிறதென்றால், அவர் உங்களைப்போல இல்லை, உங்களைப்போல சிந்திக்கவில்லை, உங்களைப்போல உணரவில்லை, உங்களைப்போல செயற்படவில்லை. எல்லோருமே உங்களைப் போல் இருந்தால் நீங்கள் இந்த உலகில்வாழ முடியுமா? உங்களைப் போல இன்னொரு மனிதர் உங்கள்



வீட்டில் இருந்தால், நீங்கள் அந்த வீட்டில் இருக்க முடியுமா? நீங்கள் ஒருவர்தான் என்பதால், எப்படியோ பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள். உங்கபைப் போல மூன்று பேர் அந்த வீட்டில் இருந்தால் நிச்சயமாக நீங்கள் அங்கே வாழவாய்ப்பில்லை. ஆனால், அத்தகைய முயற்சி எப்போதும் நடந்து கொண்டிருக்கிறது. ஏன் நம்மால் இன்னொருவரை ஏற்றுக் கொள்ள இயலவில்லையென்றால் அவர் நம்மைப்போல இல்லை, அந்த அடிப்படையான உண்மையை புரிந்து கொள்ளாமல், சகிப்புத்ததன்மை என்ற ஒன்றை உருவாக்கியிருக்கிறோம்.

ஒவ்வொரு மனிதனும் தனித்தன்மையானவன். ஒவ்வொரு உயிரும் தனித்தன்மையானது. ஒரு மரத்தில் ஒருலட்சம் இலைகள் இருந்தால், ஒவ்வொரு இலையும் தனித்தன்மையாக இருக்கிறது. அதேபோல்தான் ஒவ்வொரு மனிதனும் தனித்தன்மையாக இருக்கிறான். இந்தத் தனித்தன்மையை எற்றுக் கொள்ளா விட்டால் வேறு எதை ஏற்றுக் கொள்ள முடியும்? ஒவ்வொரு உயிரையும், ஒவ்வொரு மனிதரையும் தனித் தன்மையான மனிதராக உணர்ந்தால் சகிப்புத் தன்மையென்பது தேவையில்லை. சுற்றியுள்ள ஒவ்வொன்றும் தனித்தன்மையானது என்று அனுபவபூர்வமாக நீங்கள் உணரும்போது, ஏற்றுக் கொள்ளுதல் தானாகவே நிகழும்.

சகிப்புத் தன்மை உங்களுக்கும் நல்லதல்ல. யாரை சகித்துக் கொண்டீர்களோ அவருக்கும் நல்லதல்ல. உதாரணமாக, ஒரு வருடமாக தினமும் உங்கள் நண்பரின் வீட்டிற்குச் சென்று கொண்டிருக்கிறீர்கள். ஒரு வருடத்திற்குப்பிறகுதான் உங்களுக்குத் தெரிகிறது, அவர் ஒரு வருடமாக உங்களைச் சகித்துக் கொண்டிருந்தார் என்று இது தெரிந்தவுடன் உங்களுக்கு அது மிகுந்த பாதிப்பை உருவாக்கும். இனிமேல் வீட்டிற்கு வரவேண்டாம் என்று சொல்லியிருந்தால் கூட பெரிய பாதிப்பாய் இருந்திருக்காது. ஆனால், அவர் ஒன்றும் சொல்லாமல் உங்களைச் சகித்து வந்திருக்கிறார். என்பது உங்களுக்குப் பாதிப்பைத்தரும்.

உங்கள் வாழ்வை உங்களைச்



சுற்றியிருக்கிற உயிரை, சூழ்நிலைகளை அவை எப்படி உள்ளனவோ அப்படியே பார்த்தீர்கள் என்றால், ஏற்றுக்கொள்கிற தன்மை இயல்பாகவே நமக்குள் எழும். அதனோடு எந்தப்போராட்டமும். இருக்காது. போராட்டங்கள் இல்லாதபோது சகிப்புத் தன்மைக்கான தேவைகள் நம் வாழ்க்கையிலிருந்து விலகி விடும். (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# நாட்டார் பாடல்களும் அவற்றின் இலக்கிய இரசனைகளும் 03

இன்னுமொரு தூதுவிடு பாடல் ஒன்று,

கத்துறாயே காகம் என்
கண் மணியைக் கண்டா யோ?
சந்தித்துக் கேட்டால் என்
சரித்திரத்தைச் சொல்வாயா?

கிராமங்களில் காகங்கள் வீட்டுப் புறங்களில் இரைதேடி அலைவதுண்டு. இவ்வாறு அலையும் காகத்திடம் இக்காதலன் தூதுவிடுகிறான்.

நாட்டார் பாடல்களில் தத்துவப் பாடல்கள் தனிச்சுவை மிக்கவை. வாழ்க்கையில் எல்லாமே நிலையற்றது என்பதைச் சிந்திக்க வைத்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது தத்துவமாகும். இவ்வாறான ஆழமான கருதத்துக்களைக் கொண்ட பாடல்களை நாட்டார் இலக்கியம் வாய்மொழி மூலம் கைமாற்றி இன்று வரை அழியாச் செல்வங்களாக நிலை நிறுத்தியுமுள்ளது. விதியின் நியதியை இவ்வாறு பாடுகிறார்கள்.

மண்டையில எழுதி
மயித்தாலே மூடினதை
ஆரறிவர் இவ்வுலகில்-அந்த
ஆதிவல்லோன் தானறிவான்

இறைவன் மனிதனுக்கு எது எப்படி எப்போது எங்கே நடக்கும் என்பதை முன்கூட்டியே எழுதி விட்டான். அதை யாரும் மாற்றி அமைக்க முடியாது. கீதையின் கிருஸ்ண பரமாத்மா கூறும் அரிய பெரிய தத்துவத்தை இச்சிறிய பாடல் செப்பி நிற்கிறது. ஏடறியா, எழுத்தறியா இலக்கண வரம்பறியா பாமர மக்களாற் பாடப்பட்ட பாடல் இன்றும் அழியா வரம் பெற்று ஏடுகளில் மட்டு மல்ல அறிஞர்கள் எண்ணங்களிலும் நின்று நிலைக்கிறது.

ஆரும் எழுதினத
அழிச் செழுதிப் போட்டிரலாம்
அந்த ஆதி எழுதினத- அவன்
அழிச் செழுதப் போறதில்ல

இப் பாடலும் விதியை மாற்ற முடியாது என்றே அடித்துக் கூறுகிறது.

இன்னொரு பாடலை நோக்குவோம்.

ஆனையோடு ஆன
அசைந்தணையும் அல்லாமல்
பூனையோடு ஆன- என்றும்
புணர்ந்தணையப் போறதில்ல

உலகில் ஆற்றலும், அறிவும் நற்பண்பும் உள்ள உயர் குலமக்கள் தங்களைப் போன்ற மக்களோடுதான் பழகுவார்கள். உறவாடி மகிழ்வார்கள். பண்பாடற்றவர்களோடு இவர்கள் உறவு வைக்க விரும்பமாட்டார்கள். கிராமங்களிலும் உயர் கௌரமான குடும்பங்களும் சமூக ஏற்பற்ற குடும்பங்களும் காணப்படுவதை இப்பாடல் சித்திரிக்கின்றது. நகைச் சுவை மிக்க நையாண்டிப்பாடல்களும் இலக்கிய இரசனைகளாக மிளிர்வதைக் காணலாம். கிராமங்களில் நிலச் சுவாந்தர்கள், போடிமார், செல்வச் செழிப்போடு வாழும் வயது போனவர்கள் அழகிய ஏழைக் குமரிகளை தமது பண வலிமையைக் காட்டி மணம் புரிவதுண்டு. இவ்வாறு இளம் கன்னிக்கு வயதானவரைத் திருமணம் செய்ய பேசியிருந்தபோது அவள் தன் தோழியிடம் கேட்கிறாள் மாப்பிள்ளை எப்படி இருப்பரென்று, உடனே அவள்

கச்சான் அடிச்ச
காட்டில் மரம் நிண்டது போல்
உச்சியில் நாலு மயிர் - அவர்
ஓரமெல்லாம் தான் வழுக்கை

இப்பாடல் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கிறது. கிராமங்களில் கச்சான் காற்று அடித்த பிறகு மரங்களில் இலையெல்லாம் உதிர்ந்து கம்பும் கவருமாக உச்சியில் சில இலைகளோடு காட்சி தரும். இக்காட்சியை வழுக்கைத்தலை வயதான மணவாளனுக்கு உவமையாக அமைத்துப் பாடும் நயம் வியக்க வைக்கின்றதல்லவா? இன்னோர் பாடல்,

நாணப் பூப்போல
நரச்ச கிழவனுக்கு
குங்குமப்பூப்போல- இந்தக்
குமராகா வாய்ச்சிருக்கு

நாணப்பூ வெள்ளை நிறமானது அதுபோன்றே அந்த வயோதிபரது தலையும் இருப்பதாக உவமை கொண்டு பாடப்பட்டுள்ளது இப்பாடல். இங்கே குமரியின் அழகு குங்குமப் பூவிற்கு ஒப்பனையாக்கப்பட்டுள்ளது. இன்னுமோர் நையாண்டிப்பாடல்,

நாகப் பழத்திலயும்
நற்காசாம் பூவிலையும்
காகச் சிறகிலையும் -மச்சி நீ
கடும் கறுப்பாய் ஆனதென்ன

இங்கு ஒப்பனை, உவமை நயம் நன்றாகக் கையாளப்பட்டிருப்பதை

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

அவதானிக்க முடிகிறது. ஓசை நயம்கூட ஓங்கி ஒலிக்கிறது அழகாகவே. இன்னோர் பாடலையும் நோக்குவோம்.

பத்தேக்கர் காணியும்
பால் மாடும் வேணுமென்றாய்
இத்தனையும் தாறத்திற்கு-ஓங்கிட
உத்தியோகம் என்ன கிளி?

சீதணம் கேட்கிற ஒரு மணவாளனிடம்கிண்டலாக அவரது உத்தியோகம் என்ன என்று கேட்கிறாள் மாமியாக வர விரும்புகிறவள். தன் நிலை உணராது சீதணத்திற்காக அலைவோரின் கண்ணைத் திறந்து விடும பாடலாக இது சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கிறது.

இன்னோர் பாடலை நோக்குவோம்.

ஆமை ஆயிரம் முட்டையிட்டு
ஆன பலன் ஒன்றுமில்லை.
எங்கட கொம்பன் ஒரு குட்டி
போட்டா
கோடி பெறும் ஊரவர்க்கு

கிராமத்து விவசாயிகளுக்கு ஆமை ஒரு எதிரி வயல்களைச் சிதைத்து விடுகிறது. இவ்வாறு சமூகத்திற்குத் தீங்கிளைப்போர் ஆயிரம் பேச்சுப் பேசி என்னபயன்? கொம்பன் என்பது யானை, ஒரு குட்டி போட்டாலே அது, அநேக பயன் தரவல்லது. ஒரு திறமைசாலி பிறந்தால் சமூகத்திற்கு ஒரு கோடி நன்மையுண்டு என்பதை, இப்பாடல் மிகத்துல்லியமாக விளக்கி நிற்கிறது. இறுதியாக உலக இலக்கியங்களின் தாயாக இருந்து தாலாட்டுவது, நாட்டர் இலக்கியங்களே. இரசிக்கரசிக்க இரசனை குன்றாத, நிமிர்ந்து நிலைத்து நிற்கும் இலக்கியம் நாட்டார் இலக்கியம் என்றுரைப்பின் அது மிகையாகாது.

(முற்றும்)

வயலற் சரோஜா

# நீரிழிவு நோய்க்கான பரிசோதனை

நீரிழிவு நோய்க்கான பரிசோதனையை எப்போது மேற்கொள்ள வேண்டும் என்ற குழப்பமே வேண்டாம். எல்லோருமே நீரிழிவு நோய்க்கான பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம். பின்வரும்



வாய்ப்பு உள்ளவர்கள் நீரிழிவு நோய்க்கான பரிசோதனைகளை கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும்.

**நீரிழிவு நோய் வரும் வாய்ப்புள்ளவர்கள்**

✦ பெற்றோர் இருவருக்கும் நீரிழிவு இருந்தால் அவர்களின் பிள்ளைகளுக்கு இந்த நோய் வருவதற்கு 99 சதவீதம் வாய்ப்பு இருக்கிறது.

✦ பெற்றோரில் யாருக்கேனும் ஒருவருக்கு மட்டும் இந்த நோய் இருந்தால் வாரிசுக்கு வரும் வாய்ப்பு 40சதவீதம்.

✦ பெற்றோரில் ஒருவருக்கும் நெருங்கிய உறவினரில் யாருக்கேனும் ஒருவருக்கும் இந்த நோய் இருந்தால் வாரிசுவுக்கு வரும் வாய்ப்பு 70சதவீதம் உண்டு.

✦ வயிற்றுப் பகுதியில் அதிக கொழுப்பு இருத்தல், அதிக உடற்•பருமன், புகை மற்றும் மதுப்பழக்கம், அடிக்கடி டென்ஷன் ஆதல் போன்ற பிரச்சினை உள்ளவர்களுக்கும் மன அழுத்தம் உள்ளவர்களுக்கும் அடிக்கடி குழந்தை பெற்றுக்கொள்ளும் பெண்களுக்கும் நீரிழிவு நோய் வரும் வாய்ப்புகள் அதிகம்.

**பரிசோதனைகள்**

நீரிழிவு நோய் பரிசோதனையை எப்பொழுதெல்லாம் செய்துகொள்ள வேண்டும் என்பதைத் தெரிந்துகொண்டால் நோயைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை அறிந்து கொள்ள இயலும். அவ்வாறே, நோய் வராவிட்டாலும் தொடர்ந்து அந்த நோய் நம்மை தாக்காமல் பார்த்துக் கொள்ள இயலும்.

நீங்கள் முப்பது வயதைக் கடந்தவர் என்றால் ஆண்டுக்கு ஒரு முறை இரத்தப் பரிசோதனை செய்து கொள்ளுங்கள். நீரிழிவு நோய்க்காரர் என்றால் மூன்று மாதத்திற்கு ஒருமுறை இரத்தப் பரிசோதனை செய்து நோய் கட்டுக்குள் இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்களுக்கு நீரிழிவு நோய் இருப்பது தெரியவரவில்லையென்றால் வெறும் வயிற்றில் சீனிப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

அப்போது சீனியின் அளவு 60 முதல் 110 மில்லி கிராம் வரை இருக்கவேண்டும். கூடுதலாக இருந்தால் சீனி இருப்பதாக அர்த்தம்.

சாப்பிட்டு இரண்டு மணி நேரம் கழித்தும் சீனிப் பரிசோதனை செய்து கொள்ளலாம். அப்போது இரத்தத்தில் சீனியின் அளவு 80 முதல் 140 மில்லிகிராம் வரை இருந்தால் உங்களுக்கு நீரிழிவு நோய் இருக்கிறது என்று பொருள். இந்த விபரங்களை அறிய நேர்ந்தாலோ அல்லது தற்செயலாகவோ பரிசோதனை மேற்கொள்வது நல்லது.

நீரிழிவு நோய்க்கான பரிசோதனை செய்த அன்றுதான் நீரிழிவு நோய் இருப்பது தெரிய வருமா? என்ற சந்தேகம் பரவலாக இருக்கலாம்.

அவ்வாறு இல்லை.

எந்தவித அறிகுறிகளும் இல்லாமல் பல




ஆண்டுகளாக நீரிழிவு நோய் இருந்திருக்கலாம். இதனால் உள்ளுறுப்புகளும் பாதிக்கப்பட்டு இருக்கலாம். ஒருமுறை பரிசோதித்த பின்னர் நீரிழிவு நோய் இருப்பது தெரிய வந்திருந்தால் அது எப்போதோ உங்கள் உடலுக்குள் குடி வந்து விட்டது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

நீரிழிவு நோய் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதை எவ்வாறு தெரிந்துகொள்ள முடியும்? என்ற சந்தேகமும் பலருக்கு இருக்கத்தான்

**05**



செய்கிறது. சீனியின் அளவு சாப்பாட்டுக்கு முன் வெறும் வயிற்றில் 80 முதல் 120 மில்லி கிராமுக்குள் இருந்தாலும் சாப்பிட்டு இரண்டு மணி நேரம் கழித்து 140 முதல் 160 மில்லி கிராமுக்குள் இருந்தாலும் நோய் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதை அறிந்து கொள்ளலாம்.

பேராசிரியர்
டாக்டர் டி.காமராஜ்,
M.D.,P.G.D.C.G.,D.M.R.,
சென்னை.

இந்த அளவை விட அதிகரித்தால் நோய் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை அறிந்து கொண்டு மருத்துவர் ஆலோசனையை பெற்றுக் கொள்ளுங்கள்.

எங்களிடம் வரும் நோயாளிகள் பலர் பின்வருமாறு கேட்கிறார்கள்.

முதன்முதலாக நீரிழிவு நோய் பரிசோதனைக்குச் சென்றேன். முதல் கட்ட பரிசோதனையிலேயே நோய் கட்டுப்பாட்டில் இல்லை என்கிறார்கள். இதை உறுதி செய்துகொள்ள வேண்டுமென்றால் எது போன்ற பரிசோதனைகள் எல்லாம் மேற்கொள்ளப்பட வேண்டும்?

முதலில் இயல்பான சீனி அளவைத் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். அதன் பின்னர் கீழே தரப்பட்டுள்ள பரிசோதனைகளைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்.

(தொடரும்)

Health Care
மருத்துவ உலகம்
உங்கள் நலம் உங்கள் கைகளில்

# பித்தக்கல்

**பித்தப்பையின் செயற்பாடு என்ன?**

பித்தப்பையானது கல்லீரலில் இருந்து உற்பத்தியாகும் பித்தநீர் என்ற ஜீரண நீரை இருவேளை உணவுக்கு இடையே சேமித்து வைக்கிறது. இந்த ஜீரணநீர் ஒருநாளில் 600-700 மில்லிலீற்றர் அளவுக்கு உற்பத்தியாகிறது.

பித்தப்பையின் கொள்ளளவு சுமார் 50 மில்லிலீற்றர் முதல் 60 மில்லிஷீற்றர் நாம் உணவு உட்கொண்ட பின்னர் இந்தப் பை




சுருங்குவதால் இதில் சேகரிக்கப்பட்ட பித்த நீர் குடலை சென்றடைகிறது.

**பித்தப்பைக் கற்கள் என்பது என்ன? சாப்பிடும் உணவில் உள்ள கல்லுக்கும் இதற்கும் தொடர்பு உள்ளதா?**

பித்தப்பைக் கற்கள் என்பது சிறுகற்கள் போன்ற ஒரு படிமானப் பொருள். இதை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

**கொலஸ்ட்ரோல் கற்கள்**

இது வட இந்திய மக்களிடமும் மேலை நாட்டு மக்களிடமும் புரவலாகக் காணப்படுகிறது. உட்கொள்ளும் உணவை கொழுப்புச் சத்து அதிகமாக இருந்தால் உடல் பருமனாக உள்ளவர்களை, திடீரென்று உடல் இளைப்பவர்களை, கருத்தடை மாத்திரைகளை அதிகம் உபயோகிப்பவர்களை இவ்வகைக் கற்கள் அதிகம் பாதிக்கின்றன.

கொலஸ்ட்ரோல் என்ற கொழுப்புப் பொருள் அதிகமாக உள்ளதால் இவ்வகைக் கற்கள் மஞ்சள் நிறத்தில் காணப்படும். பெண்கள் இதனால் அதிகம் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

பித்தச் சாயத்தில் இருந்து உருவாகும் பிக்மெண்ட் கற்கள் இரத்தத்திலுள்ள சிவப்பணுக்கள் விரைவாக உடைவதாலோ, பித்த நீர்ப்பையில் பக்றீரியா அல்லது குடற்புழுக்கள் சேர்வதாலோ இக்கற்கள் உண்டாகின்றன.

மூன்றாவது வகை கொலஸ்ட்ரோல் மற்றும் பித்தச்சாயம் இரண்டும் சேர்ந்தது. பித் தப்பை கல்லுக்கும் நாம் உணவில் தவறு தலாக உட்கொள்ளும் கல்லுக்கும் சம்பந்தம் கிடையாது.

**பித்தப்பைக் கற்களின் அறிகுறிகள் என்ன?**

பித்தப்பைக் கற்கள் பல்வேறு வகைகளில் தொல்லை கொடுக்கும். அதில் முக்கியமானவை வாயுத்தொல்லை. சாப்பிட்ட பின்னர் வயிற்றின்மேற்பாகத்தில் வலதுபுறம் வலி உண்டாதல், மஞ்சள் காமாலை, மிகக் கடுமையான வயிற்றுவலி ஆகியன.

இப்பிரச்சினை உள்ளவர்கள் சரியான பரிசோதனை செய்து கொள்வது நல்லது. ஏனெனில், குடற்புண் என்று நினைத்து நாட்பட மருந்து உட்கொண்டும் பலனில்லாது ஏதாவது பின் விளைவுகளோடு மருத்துவமனைக்கு வருவதுண்டு.

**பித்தக்கற்களை எவ்வாறு கண்டறிவது?**

பித்தக்கற்களை அல்ட்ரா சவுண்ட் சோதனைமூலம் எளிதாகக் கண்டறியமுடியும். நூறில் ஒரு சிலருக்கு மட்டும் சிடிஸ்கேன் தேவைப்படும்.

**எந்த வயதினரை இந்த நோய் அதிகம் பாதிக்கிறது?**

இன்று பிறந்த குழந்தைமுதல் முதியோர்




வரை எவ்வயதினருக்கும் இந்த நோயால் பாதிப்பு ஏற்படலாம். குறிப்பாக 40 வயதிலிருந்து 52 வயதுவரை உள்ளவர்களை இந்தப் பிரச்சினை அதிகம் பாதிக்கிறது. சென்ற ஆண்டில் மட்டும் 2 வயதிற்குக் குறைவான 4

**01**



குழந்தைகளுக்கு எங்கள் ஜெம் மருத்துவமனையில் லேப்ராஸ்கோப் மூலம் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

**பித்தப்பைக் கற்களுக்கு உடனே சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமா?**

பித்தப்பைக்கற்க ளால் பாதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் தகுதிவாய்ந்த அறுவைச் சிகிச்சை நிபுணரிடம் சிகிச்சை மேற்கொள்வது நல்லது. அவ்வாறு செய்யாவிட்டால் பித்தப்பைக்கல் இரத்த நாளத்தில் விழுந்து அடைத்துக்கொள்ளும்.

இதனால் மஞ்சள் காமாலை உண்டாகும் வாய்ப்புள்ளது. இன்னும் சிலருக்கு பான் கிரியாட்டிஸ் என்ற கணைய அழற்சி உண்டாகலாம்.

இது உண்டாகும்போது நோயாளிக்கு மிகக் கடினமாக வலி உண்டாதும் சிறுநீரகம், நுரையீரல் போன்ற உறுப்புக்கள் பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. வேறு சிலருக்கு நாட்பட்ட கற்களால் பித்தப்பையில் புற்றுநோய்க்கட்டி

டாக்டர் வி.வெங்கடேஷ்,Ms.,
கோவை

கள் உருவாகலாம்.

எனவே எந்தவொரு நோயாளிக்கு மயக்க மருந்தைத் தாங்கிக் கொள்ளும் சக்தி உள்ளதோ அவர் உடனடியாக சிகிச்சை மேற்கொள்வது நல்லது.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டு மென்றால் நீரிழிவு நோய் உள்ளவர்கள் உடனடியாக சிகிச்சை மேற் கொள்ளவேண்டும். ஏனெனில் அவர்களுக்கு பித்தப்பை விரைவில் அழுகிட வாய்ப்புள்ளது.

(தொடரும்)

## வரட்சி நிலை காரணமாக நீர்மின் உற்பத்தியில் வீழ்ச்சி

(கொழும்பு)

50 வருடங்களின் பின்னர் மின் உற்பத்தி நிலையங்களுக்கு அருகிலுள்ள நீரேந்து பிரதேசங்களில் ஏற்பட்டிருந்த வரட்சி காரணமாக நீர் மின் உற்பத்தி 10 தொடக்கம் 15 வீதம் குறைவடைந்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் பேராசிரியர் விமலதர்ம அபேவிக்ரம தெரிவிக்கிறார்.

எதிர்காலத்தில் மழை வீழ்ச்சியின் மூலம் மின் உற்பத்தியை அதிகரித்துக் கொள்ள முடியுமென அவர் தெரிவித்துள்ளார். நாட்டின் மொத்த மின்சார தேவையில் 40 வீதத்திற்கும் மேல் நீர் மின் உற்பத்தியே மேற்கொள்ளப்படுவதாக சபையின் தலைவர் தெரிவிக்கிறார்.

நீரேந்து பகுதிகளில் போதியளவு நீர் சேருகின்ற பட்சத்தில் வரட்சியான காலநிலை நிலவுகின்ற அடுத்த ஏப்ரல் மாதம் வரையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமென அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (4-2)

## சனல் 4 இற்கு எதிரான அரசாங்கத்தின் காணொளி வோஷிங்டன் மாநகரில்

(கொழும்பு)

சனல் 4 காணொளிக்கு எதிராக இலங்கை அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட பதில் காணொளி அடுத்த மாதம் 2 ஆம் திகதி அமெரிக்காவில் வோஷிங்டனில் காண்பிக்கப்படவுள்ளது.

போரின் பின்னரான இலங்கையின் அபிவிருத்தி எனும் தொனிப்பொருளில் அமெரிக்க காங்கிரஸ் தலைமையகத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் இந்த காணொளி காண்பிக்கப்படவுள்ளதாக அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க காங்கிரஸ் இலங்கை நட்புறவு ஒன்றியத்தின் இணைத் தலைவர்களினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் பின்னர் வடக்கு- கிழக்கு பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்கள் குறித்து அமெரிக்க காங்கிஸ் உறுப்பினர்களைத் தெளிவுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. (4-2)

## தாய்லாந்திலிருந்து இலங்கை மாணவர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

தாய்லாந்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக உயர் கல்வி நடவடிக்கைகளுக்காக அந்நாட்டிற்குச் சென்றிருந்த இலங்கையைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்று இன்றைய தினம் மீண்டும் நாட்டை வந்தடைந்துள்ளது.

மொறட்டுவ மற்றும் கொழும்பு ஆகிய பல்கலைக்கழகங்களின் 34 மாணவர்கள் தாய்லாந்திற்கு உயர்கல்வி நடவடிக்கைகளுக்காக சென்றிருந்தனர். இவர்களே நாடு திரும்பியுள்ளனர்.

கடந்த சில நாட்களாக தாய்லாந்தில் ஏற்பட்டுள்ள மழை- வெள்ளம் காரணமாக நாட்டின் பல பகுதிகள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் குறிப்பிடுகின்றன.

வெள்ளம் காரணமாக இதுவரையில் 342 பேர் உயிரிழந்துள்ளதாகவும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் மூவாயிரம் பேர் பாங்கொக் விமான நிலையத்தில் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (4-2)

## சுகயீனம் காரணமாக கைதி ஒருவர் மரணம்

(கொழும்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள கைதியொருவர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

வாழைச்சேனையைச் சேர்ந்த 34 வயதுடைய கைதியே சுகயீனம் காரணமாக உயிரிழந்தவர் ஆவார்.

குறித்த கைதி சுகவீனமடைந்த நிலையில் சிறைச்சாலை அதிகாரிகளினால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக ஆட்கடத்தும் நடவடிக்கைக்கு உடந்தையாகவிருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணையின் பின்னர் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

தற்போது சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது

மரண விசாரணையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை சிறைச்சாலை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். குறித்த கைதி ஒரு ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-2)




★ 1147-முதலாம் அஃபொன்சோ தலைமையில் போர்த்துக்கீசர் லிஸ்பன் நகரைப் பிடித்தனர்.

★ 1415-அஜின்கோர்ட் நகரில் இடம் பெற்ற போரில் இங்கிலாந்தின் ஐந்தாம் ஹென்றியின் படைகள் பிரான்சைத் தோற்கடித்தன.

★ 1616-அவுஸ்திரேலியாவில் கால் பதித்த இரண்டாவது ஐரோப்பியர் டச்சு கப்டன் டேர்க் ஹார்ட்டொக் மேற்கு அவுஸ்திரேலியாவில் டேர்க் ஹார்ட்டொக் தீவு அவரது பெயரால் அழைக்கப்படுகிறது.

★ 1760-மூன்றாம் ஜோர்ஜ் பெரிய பிரித்தானியாவின் மன்னனானான்.

★ 1900-ஐக்கிய இராச்சியம் தென்னாபிரிக்காவின் டிரான்ஸ்வால் மாநிலத்தை இணைத்துக் கொண்டது.

★ 1917-ரஷ்யாவில் ஒக்டோபர் புரட்சி (பழைய ஜூலியன் நாட்காட்டியின் படி) இடம் பெற்றது. போல்ஷெவிக்குகள் குளிர்கால அரண்மனையைக் கைப்பற்றினர்.

★ 1918-அலாஸ்காவில் பிரின்சஸ் சோஃபியா என்ற கப்பல் தாண்டதில் 353 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1924-இந்தியாவில் சுபாஷ் சந்திர போஸ் பிரித்தானியரால் சிறைப்பிடிக்கப்பட்டார்.

★ 1935-எயிட்டியில் சூறாவளி மற்றும் வெள்ளம் காரணமாக 2 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 1936-ஹிட்லர் மற்றும் முசோலினி இணைந்து ரோம்-பேர்லின் அச்சு என்ற கூட்டமைப்பை ஏற்படுத்தினர்.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: பிலிப்பைன்சில் ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் வரலாற்றில் பெரும் கடற்சமர் இடம் பெற்றது.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் கூட்டு நாடுகளிடம் சரணடைந்ததைத் தொடர்ந்து சீனக் குடியரசு தாய்வானை இணைத்துக் கொண்டது.

★ 1971-ஐ.நா.விலிருந்து சீனக் குடியரசு வெளியேற்றப்பட்டு மக்கள் சீனக்குடியரசு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

★ 1983-ஐக்கிய அமெரிக்காவும் அதன் கரிபியன் கூட்டு நாடுகளும் கிரெனாடாவை முற்றுகையிட்டு அதனைக் கைப்பற்றின.

★ 1991-யூகொஸ்லாவிய இராணுவம் சிலவேனியாவில் இருந்து முற்றாக வெளியேறியது.

★ 1995-கொழும்பு கொலன்னாவை எண்ணெய்க் குதங்களில் இடம்பெற்ற பெரும் தீயில் 21 படையினர் கொல்லப்பட்டனர்.

★ 2000-பிந்துனுவேவா படுகொலைகள் இலங்கையில் பண்டாரவளை, பிந்துனுவேவா சிறைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தமிழ் அரசியல் கைதிகள் 26 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2001-விண்டோஸ் எக்ஸ்பி வெளியிடப்பட்டது.

★ 2001-இந்தியாவில் தடா சட்டத்துக்கு பதிலாக POTO என்ற புதிய பயங்கரவாத தடுப்பு சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தது.

★ 2007-சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முதலாவது இரட்டை அடுக்கு விமானம் ஏர்பஸ் ஏ380 தனது முதலாவது சேவையை சிட்னிக்கு ஆரம்பித்தது.

### பிறப்புக்கள்

★ 1811-எவரிஸ்ட் கால்வா, பிரெஞ்சு கணிதவியலர் (இ.1832)

★ 1881-பாப்லோ பிக்காஸோ, ஸ்பானிய ஓவியர், சிற்பி (இ.1973)

★ 1973-றசல் பிரேமகுமாரன் ஆர்னோல்ட், இலங்கை துடுப்பாட்ட வீரர்

### இறப்புக்கள்

★ 1400-ஜெஃப்றி சோசர், ஆங்கில இலக்கிய மேதை (பி.1340)

★ 2005-நிர்மல் வர்மா, ஹிந்தி எழுத்தாளர் (பி.1929)

★ 1980-ஸாகிர் லுதியானவி, ஹிந்தித் திரைப்படப் பாடலாசிரியர் (பி.1921)

### சிறப்பு தினம்

★ கசகஸ்தான் -குடியரசு தினம் (1990)

# நவீன எண் சோதிடம்

79



## பொதுநலத் தொண்டு செய்து புகழடைவர்

### உடல் எண் 9 உயிர் எண் 6

9,18,27 போன்ற தேதியில் பிறந்து, பிறந்த தேதி, மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 6 வருமேயானால் இவர்கள் செவ்வாய் சுக்கிரன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்த வராவர்.

இவர்கள் மிடுக்காகவும் கம்பீரமாகவும் தைரியமாகவும் விளங்குவர். எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று எண்ணுவர். இவர்களது நடை, உடை பாவனைகள் ஆடம்பரமாகவும் கவர்ச்சியுள்ளதாகவும் இருக்கும். நல்ல அறிவுடைய இவர்கள் எதையும் சிந்தித்தே செயற்படுவர். சூழ்ச்சிக்காரரிடம் சூழ்ச்சிக்காரராகவும் எதிரிகளிடம் பலத்த எதிரியாகவும் தன்மீது அன்புள்ளம் கொண்டவரிடத்து மிகுந்த அன்புடையவராகவும் நடந்து கொள்வர். பிறரைக் கவரும் காந்த சக்தியுடையவர்கள்.

வேதாந்தம் பேசுபவர்களையும், வெட்டியாகக் கதை பேசுபவர்களையும் கண்டால், இவர்களுக்குக் கடுமையாகக் கோபம் வரும். தனது முயற்சியால் உழைத்து, உயர்ந்த இடத்தை அடைய வேண்டும் என்ற நோக்கோடு வாழ்வர். இந்த உலகத்திலுள்ள அனைத்துச் சுகங்களையும் முறையாக அனுபவிக்க ஆசைப்படுவர். நல்ல நண்பர்களைக் கொண்ட இவர்கள் நண்பர்களுக்காக எதையும் செய்ய முற்படுவர். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் சாதாரண நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு வர வாய்ப்பிருப்பதால், பெயரை நல்ல எண்ணில் மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

மற்றவர்களும் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். ஆதலால் பொது நலத்தொண்டு செய்து புகழடைவர். கடவுள் நம்பிக்கையும் சமய நம்பிக்கையும் கொண்ட இவர்கள் அடிக்கடி கோயிலுக்குப் போவதைவிட தன் மனதாலேயே தியானம் செய்வர். எவ்வளவு இன்பதுன்பங்கள் வந்தாலும் நடுநிலையாகவே காணப்படுவர். பிறரைத் துன்புறுத்தும் விடயங்களில் ஈடுபட மனம் கூசுவர். ஆரம்பத்திலே இவர்களுக்குப் பெயர் நன்றாக அமைந்து விட்டால் பெரும் செல்வந்தராகி விடுவர்.

இன்னும் சிலருக்கு பெயர் நன்றாக அமையாத காரணத்தினால் வாழ்க்கையில் போராடிக் கொண்டே இருப்பர். இவர்கள் மனம் தூர தேசப்பயணங்கள் செய்வதாலும் கடற்கரை ஓரங்களில் ஓய்வு எடுப்பதாலும், பசுமையான மலைப் பிரதேசங்களை காண்பதிலும், ஆடம்பரமான பொருட்களைப் பார்ப்பதாலும் அமைதி கொள்ளும். இந்த எண்ணிக்கையில் பிறந்த சிலர் உத்தியோகம் செய்து கொண்டிருந்தாலும், தனக்கு வருமானம் போதவில்லை என்பதால் வேறு தொழில் மூலம் வருமானத்தைத் தேடிக்கொள்ள முயல்வர்.

இந்த எண்ணில் பிறந்த பலர் வியாபாரிகளாகவும், தொழில் அதிபர்களாகவும், டாக்டர்களாகவும், வக்கீலாகவும், இஞ்சினியராகவும், உயர் அதிகாரிகளாகவும் வாழ்கின்றனர். ஆனால், பெயர் நன்றாக அமையாவிட்டால் குடும்ப வாழ்க்கை குழப்பமானதாகவும், பொருளாதார வளர்ச்சியின்றியும், போட்டியும், பொல்லாப்பும் நிறைந்த வாழ்க்கையாக அமைந்து விடுகின்றது. இதனால், பெயரைப் பிறந்த தேதி எண்களுக்கு பொருத்தமானதாக மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

இவர்கள் மனம் அனைத்து இன்பகரமான விடயங்களிலும், சட்டம், ஜோதிடம், மருத்துவம், விஞ்ஞானம், போன்றவற்றிலும் நாடிச்செல்லும். இவர்கள் மனதில் திடீரென்று புதிய கருத்துக்கள் தோன்றுவதால் அவற்றை எழத்தாலோ, பேச்சாலோ வெளியிடுவர். சாதாரண உத்தியோகம் பார்ப்பவர்கள்கூட பெயரைப் பொருத்தமான எண்களில் மாற்றி அமைத்துக் கொண்டால் படிபடியாக வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவர்.

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

**தொழில்**

ஆடம்பரம் சம்பந்தமான பொருட்கள் வியாபாரம், காண்ட்ராக்ட், ஏஜென்சீஸ், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு பொருளை அனுப்புதல், விவசாயம், கட்டிடத் தொழில் போன்றவைகள் இவர்களுக்கு ஏற்றவை.

**நோய்**

இவர்களுக்கு இரத்த அழுத்தம், வாயுக்கோளாறு, சிறுநீர்க் கோளாறு, முதுகுவலி, பைல்ஸ், பல்வலி, நீரிழிவு வியாதி போன்றவைகள் வந்து நீங்கலாம்.

**பெயர் அமைக்கும் முறை**

இந்த எண்ணிக்கைக் காரர்களுக்கு செவ்வாய், சுக்கிரன் ஆதிக்கமான 27,36,45,15,24,33,42,51,60,69 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்-9,5,6

யோகமான தேதிகள்-9,18,27,1, 10,19,28,6,15,24



யோகமான மோதிரக்கல்-பவளம்

யோகமான நிறம்-வெளிர் நீலம்,சிவப்பு,வெளிர் மஞ்சள்

ஆகாத தேதிகள்-2,11,20,29,7, 16,25

ஆகாத நிறம்-இருண்ட பச்சை, ரோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பூநிறம்

* * *

## பெயர் எண்களின் பலன்

**12 எண் பலன்**

1 என்ற சூரியனும் 2 என்ற சந்திரனும் சேர்ந்த 3 என்ற குரு வருவதால் ஒரு பொதுநல வாதியாகவே வாழ்வர். எப்படிச் சந்திரனும், சூரியனும் ஒரே நேரத்தில் பிரகாசிக்க முடியாதோ அதே போன்று தன் வாழ்க்கையில் பிரகாசத்தை அடைய முடியாது. நல்ல பேச்சாற்றலும் பலருக்காகப் போராடுவதும் இந்த எண்காரர் களது அமைப்பாகும்.

**13 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயரில் வைப்பதற்கு எல்லோரும் பயப்படுகின்றனர். உதாரணமாக 1964 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம்



திகதியன்று மலேசியா நாட்டில் ஏற்பட்ட கலவரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மாண்டனர். விஞ்ஞான உலகில் சிறந்து விளங்கும் அமெரிக்கா, அப்பலோ 12 இற்கு அடுத்து 13 என்ற ராக்கெட்டை அனுப்பவில்லையா? என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆங்கிலேயர் 13 என்ற எண்ணைப் பயன்படுத்த அஞ்சுகின்றனர். இதனால், 13 என்ற எண் கெடுதல் தரக் கூடியது என்று ஒதுக்கப்பட்டது. ஆனால், இந்த எண்ணைப் பெயராகக் கொண்டவர்கள் சிலர் செல்வந்தர்களாக இருந்தும் பெண்களாலோ அல்லது நோயாலோ மனக் கவலையுடன் வாழ்கின்றனர். ஆனால், 1,10,19,28; 6,15,24 தேதியில் பிறந்தவர்கள் அந்த எண்ணைப் பெயரில் அமையும்படி வைத்திருந்தால் அவ்வளவு கெடுதல் விளைவிப்பதில்லை

**14 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராகக் கொண்டவர்கள் வியாபாரம் செய்தால் நல்ல முன்னேற்றம் அடையலாம். இவர்களுக்கு நண்பர்கள் கூட்டம் உண்டு. பல்வேறு தொழில்களில் உள்ள நண்பர்களின் தொடர்பு உண்டு. சில நேரங்களில் பெரிதாக ஆசைப்பட்டு பொருள் இழப்பதும் உண்டு. காதல் விவகாரங்களில் தலையிடாதிருந்தால் நல்ல முன்னேற்றத்தை அடையலாம். எப்பொழுதும் இவர்களுக்கு உதவி செய்ய பலர் முன்வருவர். இவர்களை யோகக் காரர்கள் என்று சொல்லலாம்.

**15 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயரில் உடையவர்கள் உலகிலுள்ள அனைத்து சுகநலன்களையும் அனுபவிக்கப் பிறந்தவர்கள். தன்னுடைய வெற்றிக்கும் தனது இலட்சியத்திற்கும் உழைத்த வண்ணமே இருப்பர். பேச்சாற்றலும் கவர்ச்சியான நடை, உடையும் கொண்ட இவர்கள் பல்வேறு தொழிலால் ஏராளமான பொருட்களைச் சேர்ப்பர். இவர்களுக்கு எக்காலமும் மணற்கேணி நீரூற்றுப்போல் பணம் சேரும். பிறந்ததேதி எண்கள் பொருத்தமின்றி 3,12, 21,30 இல் அமைந்துவிட்டால் தீய வழியில் பணம் சம்பாதித்து தீய வழியிலேயே செலவு செய்வர்.

(தொடரும்)

# ஐ. நா. இலங்கைக்கு எதிராக செயற்படுவதை நிறுத்த வேண்டும்

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழு இன்று அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ளது. இவ்விடயம் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே, அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்த வரையில் புலிகளின் பிரிவினைவாத கொள்கையுடன் முன்னோக்கிச் செல்கின்றவர்கள் கடந்த காலத்திலும் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைபின் நடவடிக்கைகள் நாட்டிற்கு அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளன. இவர்கள் தற்போது சர்வதேச நாடுகளுடன் இணைந்து இலங்கைக்கு எதிரான சதிகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஒரு அரசியில் கட்சியை அழைத்து இலங்கையின் தீர்வுகள் குறித்து அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கின்றன என்றால் அது நாட்டிற்கு எதிரான துரோகத்தனமாகும். அது மட்டுமன்றி இலங்கையின் இறையாண்மைக்கும் அச்சுறத்தலான விடயமாகும்.

இலங்கைக்கு எதிரான நடவடிக்கைளில் இந்தியா, அமெரிக்க மற்றும் கனடா உட்பட மேற்குலக நாடுகள் மிகவும் தீவிரமாக செயற்படுகின்றன. போலிக்குற்றச் சாட்டுக்களை சுமத்தி விசாரணைகளை முன்னெடுப்பதே அவர்களின் நோக்கம். இதற்கு உதவி ஒத்தசைகளை வழங்கவே கூட்டமைப்பு சர்வதேசத்தினால் பயன்படுத்தப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை உண்மையான குற்றவாளிகளை இனங்கண்டு கொள்ள வேண்டும். அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளே உலகத்தின் முதல் வசை போர்க்குற்றவாளிகள் ஆவர். இவர்களுக்கு எதிரான விசாரணைகளே அவசியமாகும். இன்று லிபியாவிற்கு நடந்தது நாளை சிரியா மற்றும் ஈரான் போன்ற நாடுகளுக்கு நடைபெறலாம். தமிழ்க்கூட்டமைப்பின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகும் எனவும் ரணவக்க மேலும் கூறியுள்ளார். (4-2)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து இலங்கையின் இறையாண்மைக்கு அச்சுறத்தல் ஏற்படுத்தும் வகையில் அமெரிக்காவும் இந்தியாவும் செயற்படுகின்றன.

இதற்கு கூட்டமைப்பின் அமெரிக்க விஜயம் இதன் ஒரு கட்டமேயாகும். எனவே, தமிழ்க்கூட்டமைப்பின் தேசத்துரோக செயல்களை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என அரசாங்கத்தின் பங்காளிக்கட்சியான ஜாதிக ஹெல ஊறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கேணல் கடாபின் கொலையுடன் உண்மையான போர்க் குற்றவாளிகள் யார்? என்பது வெளியிடப்பட்டுள்ளது. எனவே, ஐ.நா. இலங்கைக்கு எதிராக செயற்படுவதை நிறுத்திவிட்டு அமெரிக்க மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மீன்பிடி உபகரணங்கள் தீயில் கருகின

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கிழக்கு 15 ஆம் வட்டாரத்தின் மீன் வாடி ஒன்று முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

கடந்த புதன்கிழமை நள்ளிரவு இனம்தெரியாதவர்களால் தீயூட்டப்பட்ட இந்த வாடியில் இருந்த சுமார் 4 இலட்சம் பெறுமதியான வலைகள், மிதவைகள் உட்பட மீன்பிடி உபகரணங்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

தீயை அணைக்க எடுத்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை என அப்பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (4-2)

# அரசாங்கத்தில் ஓய்வூதியம் பெறும் 20,000 பேர் வெளிநாடுகளில் உள்ளனர்

## மீண்டும் பதிவு செய்ய நடவடிக்கை

வெளிநாடுகளில் தங்கியிருந்து ஓய்வூதியம் பெறுவோர் தொடர்பில் பதிவு செய்யப்பட்டு குறித்த ஓய்வூதியத்தினை மீண்டும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை ஓய்வூதியத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

அரசாங்கத்தினால் ஓய்வூதியம் பெறுகின்றவர்களில் 20 ஆயிரம் பேர் வெளிநாடுகளில் தங்கியுள்ளதாக ஓய்வுதியத் திணைக்களத்தினால் கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் வெளிநாடுகளில் தங்கியிருந்து ஓய்வூதியம் பெறுவோர் குறித்த மீண்டும் பதிவுகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக ஓய்வூதியம் வழங்கும் நடவடிக்கைகள் அதிபாதுகாப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஓய்வூதியத் திணைக்களத்தின் அதிகாரி ஜெனரல் கே.எல் திலகரத்தின தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இரண்டு வருடங்களாக சுமார் 3 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் எந்தவித முன்னறிவித்தல்களுமின்றி ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

இதன்பிரகாரம் கடந்த 2010 ஆம் ஆண்டு மாத்திரம் வெளிநாடுகளில் வசிப்போருக்கு 150 கோடி ரூபா பணம் ஓய்வூதியமாக செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு செலுத்தப்பட்ட பணத் தொகைக்கு புதிய திட்டம் ஒன்று அறிமுகம் செய்து அதற்கமைய வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (4-2)

# கோம்பாவில் பகுதியில் துரித கதியில் 200 வீடுகள் அமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கோம்பாவிலில் முதற்கட்டமாக மீள்குடியமர்த்தப்படவிருக்கும் 200 குடும்பங்களுக்கான தற்காலிக வீடுகள் அமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

வவுனியா மெனிக்பாம் முகாமில் இருந்து கோப்பாவிலில் மீளக்குடியமர்த்தப்படவுள்ள குடும்பங்களுக்கான அடிப்படை வசதிகளும் சமகாலத்தில் செய்து கொடுக்கப்படவுள்ளன.

கோம்பாவிலில் புதிதாக உருவாக்கப்பட்ட மீள்குடியேற்றக் கிராமத்தில் ஆனந்தபுரம், சிவநகர், மந்துவில் ஆகிய இடங்களைச் சேர்ந்த 200 குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்படவுள்ளன.

டிசெம்பர் மாதத்திற்கு முன்பு அனைவரும் மீள்குடியேற்றப்படவிருப்பதால் அங்கு பொது நோக்கு மண்டபம், 13 பொதுக்கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. அதேநேரம் போக்குவரத்திற்கு வசதியாக 15 மில்லியன் ரூபா செலவில் வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன. துரித மீளெழுர்ச்சித்திட்டத்தின் கீழ் 10 மில்லியனும் மீள்குடியேற்ற அமைச்சில் இருந்து 5 மில்லியனும் இத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றப்படவிருக்கும் மக்களுக்காக அமைக்கப்படவிருக்கும் 200 தற்காலிக வீடுகளில் தற்பொழுது 83 வீடுகள் பூர்த்தியடைந்த நிலையில் உள்ளன. மீள்குடியேற்றப்படவிருக்கும் மக்களில் ஒருபகுதியினரை கோம்பாவிலுக்கு அழைத்து சென்று அமைக்கப்பட்டு வருகின்ற வீடுகளை நேரில் காண்பிப்பதற்கான ஒழுங்குகளும் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு வீடும் ஒருஇலட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, இங்கு மீள்குடியேற்றப்படும் மாணவர்கள் அருகாமையிலுள்ள பாடசாலைகளில் கல்வியைத் தொடர்வதற்கான வசதிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (4-2)

# ஆறு இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்தவருக்கு பிணை

(கொழும்பு)

இத்தாலி அனுப்புவதாக கூறி ஆறு இலட்சம் ரூபா பணத்தை மோசடியான முறையில் பெற்ற சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பெண்ணொருவரை நீர்கொழும்பு பிரதான நீதிவான் 5 இலட்சம் ரூபா சரீர பிணையில் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

சந்தேக நபரான பெண் வழக்கின் முறைப்பாட்டாளரிடம் ஆறு இலட்சம் ரூபா பணத்தை பெற்றதாக நீதி மன்றில் ஏற்றுக் கொண்டார். 3 இலட்சம் ரூபா பணத்தை சந்தேக நபர் முறைப்பாட்டாளருக்கு கொடுத்ததுடன் மிகுதிப்பணத்தை 50 ஆயிரம் ரூபா வீதம் தவணை முறையில் செலுத்த இணக்கம் தெரிவித்தார்.

இத்தாலியில் தொழில் புரியும் நபர் ஒருவர் தொலைபேசியூடாக முறைப்பாட்டாளரை தொடர்பு கொண்டு சந்தேகநபரை அறிமுகப்படுத்தியுள்ளார்.

சந்தேகநபரான பெண் கொட்டுக்கொட பிரதேசத்தில் தங்கியிருந்து முறைப்பாட்டாளரிடம் பணத்தை பெற்றுள்ளார். பின்னர் சந்தேகநபர் வேறொரு பிரதேசத்திற்கு வீடொன்றை வாடகைக்கு பெற்று தனது இருப்பிடத்தை மாற்றியுள்ளார்.

இந்நிலையில் நீர்கொழும்பு பொலிஸ் நிலைய விசேட குற்ற விசாரணைப்பிரிவினர் சந்தேகநபரை கைது செய்துள்ளனர். (4-2)

# நெடுந்தீவின் உல்லாசத்துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் உல்லாசத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக கடந்த வாரம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் நெடுந்தீவுக்கு வருகை தந்து அங்குள்ள வரலாற்று முக் கியத்துவம் மிக்க இடங்களைப் பார்வையிட்டதுடன் பொது மக்களுடன் கலந்துரையாடியு ள்ளனர்.

உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ள நிலையில் அவர்கள் நெடுந்தீவில் தங்கி நின்று வரலாற்றுச் சான்றுகள் உள்ள பகுதிகளைப் பார்வையிட முடியாத நிலையில் நெடுந்தீவுக்கு வந்ததும் உடனே திரும்பிச் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

உல்லாசப் பயணிகள் தங்கிச் செல்லக்கூடியதான விடுதி வசதிகள் அங்கு இல்லை. விடுதி வசதிளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவுள்ளனர். (4-2)



யாழ்.பல்கலைக்கழகத்தினால் கௌரவ கலாநிதி பட்டம் பெற்ற செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனை யாழ்.தேசிய கல்வியற்கல்லூரி சமூகத்தினர் கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

# த.தே.கூட்டமைப்பிற்கு காலம் தந்த தக்க வாய்ப்பே அமெரிக்க பயணம்

## கனேடிய தமிழ் கன்சவேட்டிவ் அமைப்பு

(கொழும்பு)

காலம், தமிழ் மக்களுற்று சமகாலத் தெரி வாக்கக் காட்டியுள்ள தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புத் தலைமையை மேற்குலகு அரவ ணைத்துச் செல்வதையிட்டு உலகத்தமிழர் கள் பெருமையடைய வேண்டுமனவும் இந் தப் பயணத்தை வெற்றிப்படியை நோக்கி நகர்த்த தம்மாலான ஆதரவை வழங்க வேண்டுமெனவும் கனேடியத் தமிழ் கன்ச வேட்டிவ் அமைப்பு வெளியிட்டுள்ள வரவேற் புச் செய்தியில் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா இந்த விஜயத்தை ஒரு உய ரிய இராஜாங்க விஜயமாக அமெரிக்காவின் இராஜாங்கச் செயலர் திருமதி ஹிலாரி கிளின்டன் உள்ளிட்ட முக்கிய முடிவெடுக்கும் அதிகாரிகளைச் சந்திப்பதானது தமிழர்களின் வரலாற்றில் புதியதொரு விடயம் என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளதுடன்,

இந்த விஜயம் இன்னமும் இனவாதத் தைக் கக்கிக் கொண்டிருக்கும் இலங்கை அரசிற்கு இனியும் மேற்குலகம் வெறுமனே பார்வையாளராக இருக்காது என்ற செய்தி யைத் தெளிவாகச் சொல்லும் என்றும் நம்பு வதாகவும் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பிற்கு விசா வழங்குவதைத் தவிர்த்து வந்த கனேடியக் கொள்கை வகுப்பாளர்கள் கூட இம்முறை அவர்களிற்கு விசா வழங் கியதோடு மாத்திரமல்லாமல் கனேடியத் தலைநகரில் மேற்கொள்ள்வுள்ள சந்திப்புக் களிற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுத் ததானது கனடாவின் அண்மைக்காலச் செயற்பாடுகளில் புதியதொரு வரவு என்றும் அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீதான பார்வையைத் திருப்புகிறது என்பதைக் காட்டுகிறது என்றும் மேற்படி அமைப்பு தெரிவித்துள்ளது.

கனடாவின் இந்த மனமாற்றத்தை வர வேற்று கனேடிய தமிழர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு தங்களால் இயன்ற ஆதரவை வழங்கி எமது இனத்தை அடுத்த பரிமாணத்தை நோக்கி நகர்த்த வேண்டு மெனவும் கேட்டுள்ளது.

அமெரிக்கா சென்று முக்கிய சந்திப்புகளை மேற்கொண்ட பின்பே கனடாவிற்கு இவர்க ளது பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போதும் கனடாவிற்கான பயணத்தின் பிற்பா பாடும் வோசிங்டனிற்கு வந்து போகும் படி மேலதிக அழைப்பை அமெரிக்கா தற்போது விடுத்துள்ளதானது பத்தோடு பதினொன்றாக விடமுடியாத ஒரு பயணமாக இது அமைகிறது என்பதைக் காட்டுவதாக இருக்கிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலமும் வரலாறும் எமக்குத் தரும் வாய் ப்புக்களை நாங்கள் ஆராயாமல் விட்டால் அதுவே எமது இனத்திற்கான ஒட்டுமொத்த அழிவிற்கான காரணியாக அமைந்து விடும் என்பதை கருத்திற் கொண்டு செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முயற்சி களிற்குத் புலம்பெயர்ந்த மக்கள் தங்களது முழு ஆதரவையும் வழங்க வேண்டும் என வும் கேட்டுள்ளது.

தமிழர்களின் விடுதலைக்காக புலம் பெயர் ந்த அமைப்புக்கள் பலவும் பலவழிகளில் முயற்சிகளை மேற்கொண்டு வரும் ஒரு கால கட்டத்தில் மேற்குலகம் தமிழர்களின் ஜனநா யகத் தலைமையை தனது அரவணைப்பிற் குள் கொண்டு வருவதற்கு உரம் சேர்க்க புலம்பெயர்ந்த அமைப்புக்களால் மாத்திரமே முடியும் என்ற உண்மையை உணர்ந்து அனைத்து அமைப்புக்களும் ஏகோபித்த ஆதரவை வழங்க வேண்டுமெனவும் கேட் டுள்ளது. (4-2)

## அபிஷேக ஆராதனை

(யாழ்ப்பாணம்)

கந்தசஷ்டி விரதாரம்பத்தை முன்னிட்டு கொக்குவில் நந்தாவிலில் அமைந்துள்ள கற் புலத்து மனோன்மணி அம்பாள் ஆல யத்தில் முருகப் பெருமானுக்கு தினமும் காலை 8 மணி முதல் அபிஷேகம், விசேட பூசைகள் என்பனவும் அர்ச்சனைகளும் இடம்பெறவுள்ளது. அதனைத்தொடர்ந்து மாலை 4.30 மணிமுதல் கந்தசஷ்டி விர தோற்சவம் ஆரம்பமாகி நடைபெறும். (4-12)




## வரணி ஊரெல்லை வீதிக்கு மின்சாரம் எப்போது?

வரணி-கரம்பைக்குறிச்சி கிழக்கு பொதுக் கிணற்றுக்கருகில் செல்லும் நாவற்காடு ஊரெல்லை வீதிக்கு மின்சாரம் கிடைப்பது எப்போது?

கணிசமான மக்கள் தொகையினரைக் கொண்ட ஊரெல்லை வீதி மக்கள் மின்சாரம் பெறுவதற்கான ஆயத்த வேலைகளைச் செய்து அதன்பின் மின்சாரம் வழங்கக்கோரி ஆண்டுக்கணக்கான போதும் இன்று மின்சாரம் வழங்கப்படாதிருக்கின்றது.

மக்களால் கையொப்பமிடப்பட்ட கோரிக்கையினை ஆழ்வார் மடம் வேலாயுதர் கோவில் பொதுமுகாமையாளரால் அரச அதிப ருக்கு அனுப்பி ஒரு வருடம் கடந்துவிட்டது.

அரச அதிபரினால் மின்சாரசபைக்கு மின்சார விநியோக வேலைகள் ஆரம்பிக்கப்படும் போது ஊரெல்லை வீதியைக் கவனத்திற் கொள்ளுமாறு பணிப்புரை விடுக்கப்பட்படும் ஓராண்டு பூர்த்தியும் இடம் பெற்றாகிவிட்டது.

பொதுமக்களின் நாளாந்த பாவனையை விடவும் மாணவர்கள் வழிபாட்டுத்தலங்கள் மற்றும் பொது நிலையங்களின் நன்மை கருதியாயினும் மின்சாரம் கிடைக்கச் செய்வது உரிய தரப்பின் பொறுப்பு - (பாதிக்கப்பட்ட மக்கள்)

## இனச் சுத்திகரிப்பு குறித்து கூட்டமைப்பு வலியுறுத்துகிறது

## திலங்க சுமதிபால எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படும் யோசனைகளுக்கு ஆதரவளிக்க முடியாது என கொழும்பு மாவட்ட ஆளும் கட்சி நாடா ளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரி வித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நாட்டுக்கு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்ட சமாதா னத்தை சீர்குலைக்கும் முயற்சிகளுக்கு ஒத் துழைப்பு வழங்க முடியாது.

வடக்கு -கிழக்கு தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பில் அவர் இந்தக் கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

சம்பந்தன் சிரேஷ்டஅரசியல்வாதி என்ப தால் மிகவும் சிறந்ததிட்டத்தை முன்வைப்பார் என எதிர்பார்த்தேன். எனினும் அவரது யோச னைத் திட்டம் என்னை கலக்கமடையச் செய் தது.

இனச் சுத்திகரிப்பு குறித்து தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு வலியுறுத்திவருகின்றது.

முத்தையா முரளிதரன் பந்தை வீசி எறிவ தாக அவுஸ்திரேலியாவில் குற்றம் சமத்திய போது எந்தவொரு தமிழ்த் தலைவரும் அவ ருக்காக குரல் கொர்டுக்கவில்லை எனவும் முரளிக்காக நாமே குரல் கொடுத்தோம் என வும் அவர் தெரிவித்துள்ளார். (4-2)

## கனேடிய பொங்குதமிழ் நிகழ்வில் கூட்டமைப்பினர் பங்கேற்பார்களா?

## கண்காணிக்கும் புலனாய்வுப் பிரிவினர்

கனடாவில் நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வுகளில் தமிழ்த் தேசியக்கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங் கேற்க முயற்சி எடுத்து வருவதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இந்த விடயம் குறித்து புலனாய்வுப் பிரி வினர் கண்காணிப்பு பணிகளை ஆரம்பித் துள்ளனர்.

பொங்கு தமிழ் நிகழ்வுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர்கள் மூவர் கலந்து கொள்ள முயற்சித்து வருவ தாகக் குறிப்பிடப்படுகிறது.

எதிர்வரும் மாதம் பொங்கு தமிழ் நிகழ்வு கனடாவில் நடைபெறவுள்ளதாகவும் இதில் கலந்து கொள்வதற்காக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் ஏற்பா டுகளை செய்துவருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர் சுரேஸ்பிரேமச்சந்திர னுக்கு கனடா விசா வழங்க மறுப்பு வெளி யிட்டுள்ளது.

அமெரிக்க விஜயத்தை முடித்துக் கொண்டு கனடாவில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வுகளில் கலந்து கொள்ள குறித்த உறுப் பினர்கள் முயற்சி எடுத்து வருவதாகக்குறிப் பிடப்படுகிறது. (4-2)



யு.என்.டி.பி நிறுவனத்தின் அனுசரணையுடன் இரணைப் பாடசாலைத்திட்டத்திற்கான கலைநிகழ்வுகள் நேற்றையதினம் உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் கலவன் பாடசாலையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பாடசாலை அதிபர் கு. திலீபன் மங்கல விளக்கேற்றுவதையும் மாணவிகளின் கலை நிகழ்வுகள் இடம் பெறுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :- என்.குமார்)

# மேற்குலக நாடுகள் நல்ல பல பண்புகளை இழந்து வருகின்றன

## கடாபியின் கொலை குறித்து வீரவன்ச கருத்து



மேற்குலக நாடுகள் நல்ல பண்புகளை இழந்து வருவதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

முவம்பர் கடாபி படுகொலைச் சம்பவம் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டி மன்னர் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனை பிரித்தானியர்கள் கைது செய்த போது படுகொலை செய்யவில்லை என அவர் தெரி வித்துள்ளார்.

மாறாக அவரை நாடு கடத்தியதாக குறிப் பிட்டுள்ளார். எனினும் தற்போதைய மேற் குலக சமூகம் கொடூரமாக நடந்து கொள்வ தாக குற்றம் சுமத்தியுள்ளார்.

சதாம் உசைன், முவம்பர் கடாபி அடுத்து ஈரானிய ஜனாதிபதியாக இருக்கக்கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.

பலர் விமர்சனம் செய்த போதிலும் லிபிய சமூகக் கட்டமைப்பு ஏற்ற வகையில் கடாபி ஆட்சி நடத்தி வந்ததாகவும் அதனை சர்வாதி காரமாக கருத முடியாத எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# நான்கு கடற்படை வீரர்கள் உள்ளிட்ட ஏழு பேர் மீதான வழக்கு ஒத்திவைப்பு

கடற்படையினரின் டீசலை மோசடியாகப் பெற்று விற்றதாக குற்றம் சாட்டப்பட்ட நான்கு கடற்படை வீரர்கள் உட்பட ஏழு பேர் மீதான வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடற்படையினரின் டீசலைப் பெறுவதற்குரிய உத்தரவு புத்தகத்தை திருடி அதிலிருந்து பதினொரு வவுச்சர்களைப் பயன்படுத்தி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இருந்த 2 இலட்சத்து 70 ஆயிரத்து 600 லீற்றர் டீசலை பெற்றதாக வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த நான்கு கடற்படை வீரர்கள், இவர்களுக்கு உதவிய பெற்றோலிய கூட்டுத்தாபன இரு ஊழியர்கள், இரு எரிபொருள் விற்பனை நிலையங்களின் உரிமையாளர்கள் ஆகியோர் மீது குற்றப் புலனாய்வு பொலிஸார் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த 2007 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதிக்கும் 2007 மார்ச் 25 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் இவர்கள் இக்குற்றத்தை செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எரிபொருள் விற்பனை உரிமையாளர்கள் மூலம் டீசலை களஞ்சியப்படுத்தி வைத்து விற்றதாகவும் பெற்றோலிய கூட்டுத்தாபன இரு ஊழியர்கள் டீசலை வேறு எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு கொண்டு சென்ற தாகவும் விசாரணைகள்மூலம்தெரிய வந்துள்ளது.

பொதுச் சொத்துக்கள் சட்ட விதிகளின் கீழ் இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சந்தேக நபர்களை கோட்டை நீதிவான் எதிர் வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (4-2)

# அரிசியை ஆபிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவுள்ள இலங்கை

(கொழும்பு)

இலங்கை ஒரு தொகுதி அரிசியை ஆபிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய தயாராகி வருகின்றது. இது தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷவிற்கும் ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களுக்கும் இடையிலான பேச்சுக்கள் வெற்றிகரமான பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இலங்கை அண்மையில் 250 மெற்றிக் தொன் அரிசியை நைஜீரியாவிற்கு ஏற்றுமதி செய்தது. ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நாடுகளுக்கு மேலதிக உணவையும் திரிபோஷா உணவு வகைகளையும் ஏற்றுமதி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பான பேச்சுக்கள் ஐக்கிய நாடுகள் பிரதிநிதி களுக்கும் திறைசேரி செயலாளர் பி.பி. ஜெச்சுந்தருக்கும் இடையில் அண்மையில் இடம் பெற்றன. (4)

# கரைச்சி பிரதேச செயலகத்தின் கலாசாரவிழா போட்டி முடிவுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக கலசார விழாவையொட்டி நடத்தப்பட்ட கலை இலக்கிய போட்டிகளின் முடிவுகளை கரைச்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கே.றஜீபன் அறிவித்துள்ளார்.

இதில் திறந்த போட்டி மற்றும் பாடசாலை மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்று முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**சிந்துநடைக்கூத்து**

கலைவாணி நாடக மன்றம் (கோணாவில்), முத்துமாரி அம்மன் நாடகமன்றம் (திருநகர்)

**கவிதை பாடல்**

சி.கவிப்பிரியா (கிளி /புனித திரேசா பெண்கள் கல்லூரி)

**சிறுகதை**

*கீழ்ப்பிரிவு*

ச.கோடீஸ்வரன் (றோயல் கலா மன்றம்), க.அனுசியா (றோயல் கலாமன்றம்), ஜெ.சத்தி யாம்பிள்ளை (றோயல் கலாமன்றம்)

**பாடலாக்கம்**

சிவ.ஏழுமலை மூவேந்தன். (மலையாவிபுரம்), பூ.கவிப்பிரியா (கிளி /புனித திரேசா பெண்கள் கல்லூரி),திருமதி இ.சூரியகுமாரி (சிவன் வீதி, உருத்திரபுரம்)

**சிறுகதை**

*மேற்பிரிவு*

இ.நடராசா (திருநகர்), சிவ.ஏழுமலை மூவேந்தன். (மலையாளபுரம்)

**கவிதை**

சி.கவிப்பிரியா (கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி), ர.மாலினி (கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்), திருமதி இ.சூரியகுமாரி (சிவன் வீதி, உருத்திரபுரம்)

**சிந்துநடைக்கூத்து**

கிளி/இந்துக் கல்லூரி (உருத்திரபுரம்)

**சித்திரம்**

*கீழ்ப்பிரிவு*

ஞ.ரஜீந்தன் (கிளி/உருத்திர புரம் மகா வித்தியாலயம்), வி.ஹர்சாந் (கிளி/பற்றிமா றோ.ம.வி), ஞ.சுரேந்திரன் (கிளி/உருத்திர புரம் மகா வித்தியாலயம்)

*மேற்பிரிவு*

சஞ்ஜீபன் (கிளி/பற்றிமா றோ.ம.வி), சங்கீர்த்தனா (கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி), மதுசனன் (கிளி/மகா வித்தியாலயம்)

**நாடகம்**

கிளி/இந்துக் கல்லூரி (உருத்திரபுரம்)

**பேச்சுப்போட்டி**

*கீழ்ப்பிரிவு*

அ.கணேசன் (கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி), கி.ருசாந்தி (கிளி/பற்றிமா றோ.ம.வி), கி.கிருசாந்தி (கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்)

*மேற்பிரிவு*

ந.கீர்த்தனா (கிளி/இந்துக் கல்லூரி)

**கவிதை பாடல்**

*கீழ்ப்பிரிவு*

நா.விதுர்சன் (கிளி/உருத்திர புரம் மகா வித்தியாலயம்), ச.லாவண்யா ( கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்)

*மேற்பிரிவு*

கு.மோனப்பிரியா (கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி), அ.தர்சனா (கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்)

**கவிதை**

*கீழ்ப்பிரிவு*

ர.வினுசா (கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்), க.கீர்த்தனி (கிளி/ புனித பற்றிமா றோ. க.த.க),சி.பிரவீணா (கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி)

**சிறுகதை**

*மேற்பிரிவு*

தி.நிரோஷா (கிளி/மத்திய கல்லூரி), அ.சுவேதா (கிளி/மத்திய கல்லூரி), இ.தர்ஷா ( கிளி/கனகபுரம் ம.வி) (4-12)


# மரண அறிவித்தல்

## கோகுலதாஸ்-சகாயறூபி (விசி)



நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும், கொண்ட கோகுலதாஸ்-சகாயறூபி (விசி) அவர்கள் 19.10.2011 சுவிற்ஸர்லாந்தில் காலமானார். இவர் கோகுலதாஸ் (பொபி) யின் பாசமிகு மனைவியும், யேசுராசா- பிலோமினாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற மரியதாஸ்-இராஜேஸ்வரியின் அன்பு மருமகளும், றோகித் (சுவிஸ்), றொக்சிக்கா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயும், விஜயன், பிறேமினி, வினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், லலிதா, சாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும், நேசன் (பிரான்ஸ்), ராசன் (இலங்கை) ஆகியோரின் சகோதரியும், மனோச் (சுவிஸ்), றமியா, வினோஜா, வினித், ஜதுசன், ஜஸ்மி ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சுவிசில் உள்ள நிரோம் சேமக் காலையில் 27.10.2011 அன்று 12 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதனை அறியத்தருகின்றோம். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-

மருமகன்-யேசுநேசன்-நெல்சன் (சுவிஸ்)

0041765093877, 0771770078

(6671)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கனகாம்பிகைக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 2011 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து சாதனை படைத்த மாணவி செல்வி ஜெயதாசன் பவித்திரா (157 புள்ளி) அவர்களையும்



100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற

செல்வி ஜே.வேணுஜா -134
செல்வன் இ.நிரோஜன் -115
செல்வன் சி.தமிழன்பன்-115
செல்வி ச.நிருஜா -127
செல்வி லி.சுதர்சனா-112
செல்வி க.துர்க்கா-111
செல்வி ப.சாணுஜா-104
செல்வி ர.சஜித்திரா -103
செல்வன் ச.வஜீகரன்-108

ஆகியோரையும் இம்மாணவர்களது வெற்றிக்கு விடாமுயற்சியுடன் அரும்பாடுபட்டுழைத்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கமும், பழைய மாணவர் சங்கமும்.

(6660)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று பாடசாலைக்கு புகழ்சேர்த்த மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.



மதனராஜா கேசிசன்-168



ஜனனி மதன்மோகன்-158



யசோதினி சுதாமாறன்-157



மகிஜா மோகனராஜா-157



பிரபாகரன் அனோஜன்-156



கணேசமூர்த்தி சாரங்கன் 155

யாழ். பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் வாழ்த்துவோர்:- பாடசாலைச் சமூகம்

# கடாபியின் மகன் கன்னிபலுக்கு ஜனாதிபதி இரங்கல் மடல் அனுப்பினார்

## இலங்கைக்கு வருமாறும் அழைப்பு

ஜனாதிபதி ராஜபக்ஷ மற்றும் அவருடைய குடும்பத்தினர் கேணல் கடாபியின் மறைவு தொடர்பான தமது இரங்கல் செய்தியை அவரது மகனான கன்னிபல் கடாபிக்கு தெரிவித்துள்ளனளர்.

கடந்த 21 ஆம் திகதி மிஸ்ரட்டாவின் புறநகர்ப் பகுதியிலுள்ள மசூதி ஒன்றின் அருகில் உள்ள மரக்கறிச் சந்தையின் அறையொன்றுக்குள் இருந்த மெத்தை மீது லிபிய நாட்டின் பலம் மிக்க ஆட்சியாளரான முவம்பர் கடாபியின் இறந்த உடல் வைக்கப்பட்டிருந்தது.

கடாபி கொல்லப்பட்டமை தொடர்பாக பல்வேறு குழப்பகரமன சூழல் நிலவுகின்ற போதிலும் கூட லிபியத் தலைவர்கள் தமது நாட்டிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதிலும் ஜனநாயக ஆட்சியை இங்கு மேற்கொள்ள வேண்டும் என்பதில் பல்வேறு பாரிய அழுத்தங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் கேணல் கடாபி கொல்லப்பட்டது தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் கன்னிபலுக்கு எழுதப்பட்ட இரங்கல் கடிதத்தின் மூலப் பிரதி வருமாறு,

**அன்பிற்குரிய மகன் கன்னிபல்,**

தயவுடன் எமது அனுதாபங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களது அப்பாவிற்கு என்ன நடந்ததென்பது தொடர்பாக முற்றிலும் நாம் மிகவும் குழப்பமடைந்துள்ளோம்.

இலங்கையில் இது போன்ற சம்பவங்கள் பல தடவைகள் இடம் பெற்றுள்ளதை நாம் பார்த்துள்ளோம். கடந்த வாரம் கூட எனக்கு நெருக்கமானவர்கள் மற்றும் சில மக்கள் இங்கே கொல்லப்பட்டுள்ளனர்.

எமது நாட்டிலுள்ள ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என எல்லா வகையான மக்களையும் பாதுகாக்க முயற்சிப்பதுடன் அவர்களுக்கு நல்லவற்றைச் செய்ய முயற்சிக்கும் போது இவ்வாறான சம்பவங்களை நாம் ஒவ்வொரு நாளும் சந்திக்கின்றோம்.

இவ்வாறான நன்றி கெட்ட விதத்தில் எமது நாட்டில் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் சம்பவங்களுக்கு மத்தியில் இந்நாட்டைக் கட்டுப்படுத்தி ஆட்சி செய்வதற்கு நாம் மிகப் பிரயத்தனப்படுகின்றோம். எங்களை விளங்கிக் கொள்ளாதவர்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றனர்.

அன்பிற்குரிய கன்னிபல் நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்களது அப்பா பல மில்லியன் கணக்காணவர்களுக்கு கதாநாயகராகவும் மாவீரராகவும் இருந்துள்ளார்.

உங்களது அப்பா அவருடைய நண்பர்களால் எப்போதும் அன்புடனும் நேசிப்புடனும் நன்றியுணர்வுடனும் எப்போதும் நினைவு கூரப்படுவார்.

உங்களது நேசிப்பிற்குரிய தந்தையாரின் இறப்பை நினைவுகூர்ந்து அவருக்கு பிரித் ஓதும் நிகழ்வை நுகேகொடவில் உள்ள கங்காராம விகாரையில் மேற்கொள்ளவுள்ளோம். அவர் முக்தி அடைவார் என பௌத்தர்களாகிய நாம் சொல்கின்றோம்.

மகனே கன்னிபல் உங்களுக்கு ஓய்வு எடுப்பதற்கு ஒரு இடம் தேவைப்படுமானால் தயவு செய்து கொழும்பு வரவும். நாங்கள் உங்களுக்கு ஒரு அறையை தயாராக வைத்துள்ளோம். உங்களது கவலைகளை மறப்பதற்கான பல்வேறு களியாட்ட நிகழ்வுகளை நாம் இங்கு கொண்டிருக்கின்றோம்.

உங்களது அப்பா தனது குடும்பத்தவர்களை எவ்வாறு நேசித்தார் என்பது எங்களுக்குத் தெரியும். உங்களது தாயார், சகோதரர்கள்,சகோதரிக்கும் தயவு செய்து எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளவும்.

அவருடைய செவிலிப் பெண்களைப் பராமரிப்பதையும் மறக்க வேண்டாம். உங்களின் தந்தையார் பின்பற்றிய சிலவற்றை தொடர்ந்து செய்ய வேண்டிய கடப்பாட்டை நீங்கள் கொண்டுள்ளீர்கள்.

இவ்வாறான ஒரு கடினமான சூழலில் உங்களையும் உங்களது குடும்பத்தவர்களையும் கடவுள் காத்தருள்வார். எந்த வழியில் நீங்கள் இது தொடர்பாக பார்த்தாலும் கூட பிரபாகரன் மற்றும் பின்லேடன் போன்றவர்களின் மரணத்தைப் போன்று இது சிலிர்க்க வைக்கும் சம்பவமல்ல.

தங்களின் நேசிப்பிற்குரிய, குடும்பத்தவர்களான மாமா மகி, அன்ரி சிராந்தி, மல்லிலா (தும்பிகள்) இவ்வாறு அந்த இரங்கல் மடலில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சிறி லங்கா கார்டியன் இணையத்தளம் வெளியிட்டுள்ளது. (பூ)

# இருபது கோடி ரூபா தரவேண்டும் அல்லது தாக்குதல் நடத்துவோம்

## தலிபான்கள் மிரட்டல்

பாகிஸ்தான் அரசுக்கு சொந்தமான எண்ணெய் நிறுவனம் மற்றும் தனியார் எண்ணெய் நிறுவனம் இரண்டும் தலா 20 கோடி ரூபாய் என மொத்தம் 40 கோடி ரூபாயை இன்னும் 20 நாட்களில் தங்களுக்குத் தர வேண்டும் என பாகிஸ்தான் தலிபான்கள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

இது குறித்து தாரிக் இ தலிபான் பாகிஸ்தான் பிரிவைச் சேர்ந்த தளபதி ஒருவர் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு தொலைபேசி மூலம் தெரிவித்த தகவலில் கூறியதாவது,

பாகிஸ்தான் தேசிய எண்ணெய் நிறுவனம் மற்றும் ஷெல் பாகிஸ்தான் எண்ணெய் நிறுவனம் இரண்டின் நிர்வாக இயக்குநரிடம் நான் தனிப்பட்ட முறையில் பேசி ஆளுக்கு 20 கோடி ரூபாய் தர வேண்டும் என்று கூறியுள்ளேன்.

தரவில்லையெனில் அந்த நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்துவோம் எனவும் எச்சரித்துள்ளேன் என தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தேசிய எண்ணெய் நிறுவனம், பத்திரிகைகளுக்கு இது குறித்து அறித்த செய்தியில்,

தாங்கள் நேட்டோவுக்கு அளித்து வரும் எண்ணெய் விநியோகத்தை தடுக்கப் போவதாக தலிபான்கள் மிரட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு மறுப்புத் தெரிவித்த தலிபான் தளபதி பணத்தைப் புரட்ட தங்களுக்கு அவகாசம் கோரியுள்ளனர். அதேநேரம் நேட்டோவுக்கான விநியோகத்தை தாங்கள் தடுக்கப் போவதாக மிரட்டியதாக வந்த செய்தி தவறானது. அவர்கள் என்ன செய்தாலும் எங்களுக்கு கவலையில்லை. இன்னும் 20 நாட்களில் 40 கோடி ரூபாய் எங்களுக்கு வந்தாக வேண்டும் என்பதை மட்டும் சுட்டிக்காட்டியுள்ளேன் என்றார். (4-2)




# என் தந்தையை கொன்றவர்களை ஒழிக்கும் வரை போராடுவேன்

## கடாபியின் மகன் சூளுரை



லிபியாவில் சிர்த் நகரில் சுட்டுக் கொல்லப்பட்ட கடாபிக்கு 2 மனைவிகள் மூலம் 7 மகன்கள் மற்றும் ஒரு மகள் இருந்தனர். அவர்களில் 2 பேர் தங்கள் குடும்பத்துடன் அல்ஜீரியாவுக்கு தப்பி சென்றுவிட்டனர். நேட்டோ படை குண்டு வீச்சில் ஒருவர் பலியாகிவிட்டார். முட்டாசிம் என்ற மகன் கடாபியுடன் கொல்லப்பட்டார்.

மற்றொரு சயீப் அல் இஸ்லாம் என்பவர் தலைமறைவாகி விட்டதால் உயிருடன் இருக்கின்றார். அவர் சிரியாவில் இருந்து ஒளிபரப்பாகும் ஒரு தனியார் தொலைக்காட்சியில் திடீரென தோன்றினார். அப்போது தனது ஆதரவாளர்களுக்கு உரை நிகழ்த்துகையில்,

நான் சாகவில்லை. இன்னும் உயிருடன் சுதந்திரமாக இருக்கின்றேன். லிபியா மக்களுக்காக நான் இறுதிவரை போராடுவேன். என் தந்தையை (கடாபியை) கொன்றவர்களை எதிர்த்து போராடி பழிவாங்குவேன்.அதுவரை எனது போராட்டம் ஓயாது என்று ஆவேசமாக பேசினார்.

சயீப் அல் இஸ்லாம் கடாபி இராணுவத்தில் கொமாண்டராக இருந்தார். புரட்சி படையை எதிர்த்து போரிட்டு வந்த அவர் திடீரென சரண் அடைவதாக அறிவித்தார். பின்னர் தலைமறைவாகி விட்டார். (4-2)

# ஆர்ஜென்டீனாவின் வெற்றிக்கு பாடுபடுவேன்- கிறிஸ்டினா

ஆர்ஜென்டீனாவில்ஜனாதிபதித்தேர்தல்நடந்தது. அதில் தற்போதைய ஜனாதிபதி கிறிஸ்டினா பெர்னாண்டஸ் டி கிர்ச்னர் (வயது-58) பெரோனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிட்டார்.அவரை எதிர்த்து சோசலிஸ்ட் கட்சியை சேர்ந்த ஹெர்மஸ் பினர் உட்பட 5 பேர் போட்டியிட்டனர்.

தேர்தல் முடிந்ததை தொடர்ந்து நேற்று முன்தினம் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டன. பதிவான 15 சதவீத வாக்குகள் எண்ணப்பட்டதில் கிறிஸ்டினா பெர்னாண்டஸ் 53 சதவீதம் வாக்குகள் பெற்றார். அவருக்கு அடுத்தபடியாக ஹெர்ம்ஸ் பின்னர் 17 சதவீத வாக்குகள் பெற்றார். இதன்மூலம் கிறிஸ்டினா பெர்னாண்டஸ் அமோக வெற்றி பெறுவது உறுதியாகி விட்டது.

அதைத் தொடர்ந்து அவர் மீண்டும் ஜனாதிபதியாகவுள்ளார். அவர் தொலைக்காட்சியில் தோன்றி தனது ஆதரவாளர்களிடம் பேசுகையில்,

எப்போதும் ஆர்ஜென்டீனாவின் வளர்ச்சிக்கு தொடர்ந்து பாடுபடுவேன் என உறுதி அளித்தார். கிறிஸ்டினா பெர்னாண்ஸ்சுக்கு முன்பு அவரது கணவர் நெஸ்டர் கிர்ச்னர் 2003 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக இருந்தார்.

மாரடைப்பு காரணமாக அவர் திடீரென இறந்ததை தொடர்ந்து கிறிஸ்டினா ஜனாதிபதியானார். தற்போது மக்களின் அமோக ஆதரவுடன் மீண்டும் ஜனாதிபதியாக பொறுப்பு ஏற்கிறார். (4-2)



பிரான்ஸ் பிரதமர் பிரான்சியோஸ் பில்லோன் (இடது) ஜப்பான் நாட்டு பிரதமர் யோஷிஹிகோ நோடா, ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நோடோ அபிசியல் மாளிகையில் இருவரும் கைலாகு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# லிபியா விடுதலையடைந்து விட்டது புதிய தலைவர் அறிவிப்பு

லிபியா விடுதலை அடைந்து விட்டதாக அந்நாட்டின் புதிய ஆட்சியாளர்கள் நேற்று முன்தினம் அறிவித்தனர். சர்வாதிகாரியாக இருந்த முவம்பர் கடாபி கொல்லப்பட்ட 3 நாட்கள் கழிந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியிருந்தது.

பெங்காசி நகரில் கூடியிருந்த ஆயிரக் கணக்கானோர் முன்னிலையில் இடைக்கால அரசின் துணை தலைவர் அப்துல் ஹபீஸ் கோகா உரையாற்றுகையில்,

இது விடுதலை அறிவிப்பு. தலையை நிமிர்த்துங்கள். இப்போது இது சுதந்திர லிபியா என்று கூறியதும் கூடியிருந்தவர்கள் ஆர்ப்பரித்தனர். சுதந்திர லிபியா என்று ஒவ்வொருவரும் உரக்கக் கோஷம் எழுப்பினர். கூட்டம் நடந்த கிஷ் சதுக்கம் முழுவதுமே பச்சை, சிவப்பு, கறுப்பு நிறங்களைக கொண்ட புதிய கொடிகள் கட்டப்பட்டிருந்தன. வந்திருந்தவர்கள் கைகளிலும் கொடிகள் இருந்தன. (4-2)

மண்ணாசை கொண்டு மண்ணை ஆண்ட மன்னவர் எல்லோரும் மடிந்து மண்ணாகிவிடுவதை நீ அறிவாய். இருந்தும் நீ ஏன் மண்ணாசை கொண்டு அலைகிறாய்.

—வள்ளலார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## மேல் உலகில் ஆத்மாக்கள் கூடி ஐ.நா.சபையை அமைத்தால்

கேணல் கடாபியின் மரணம் ஏதோ ஒருவகையில் மக்கள் சமூகத்திடம் தாக்கத்தை ஏற்படுத்தவே செய்துள்ளது.

இந்தத் தாக்கத்தின் காரணம் என்னவென்பது தெரியாவிடினும் மரணம் யாருக்கு ஏற்பட்டாலும் அதில் எவரும் ஆறுதல் அடைய முடியாது என்பதே கடாபியின் மரணம் ஏற்படுத்திய மனத்தாக்கத்திற்கான காரணமாகும்.

இந்த நினைவுகளோடு இவ்வுலகில் அநியாயமாக-அவலமாக உயிர் பறிக்கப்பட்ட ஆத்மாக்கள் ஒன்று கூடி மேல் உலகில் ஒரு ஐ.நா.சபையை ஆரம்பித்தால் எப்படியிருக்கும் என்று ஒருகணம் நம் சிந்தனையில் எண்ணத்தோன்றியது.

வன்னிப் போரில் அநியாயமாக அழிக்கப்பட்ட ஆத்மாக்களே ஐ.நா.சபையின் பொறுப்பான பதவிகளில் இருக்கின்றார்கள்.

அவர்கள் தங்களை சுட்டவர்கள், சுடவைத்தவர்கள், சுடும்போது பார்த்துக்கொண்டிருந்தவர்கள், புலிகளோடு சேர்ந்து நடித்தவர்கள், அதன் ஊடாக பதவியை பிடித்தவர்கள் என்ற மிகப்பெரியதொரு பட்டியலைத்தயாரித்து வைத்திருந்தனர்.

கூடவே, வன்னியில் தங்கள் உயிரைக்காப்பாற்றுவதற்காக அவலக்குரல் எழுப்பியபோது, அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் நாடகம் நடித்த கலைஞர் கருணாநிதி உட்பட, யாழ்ப்பாணத்திற்கு வந்துபோன டி.ஆர்.பாலு உள்ளிட்டவர்களின் பெயர்களும்,

தூது என்ற பெயரில் இலங்கைக்குவந்து அரசாங்கத்தை உசார்ப்படுத்திய அகாஷி போன்றவர்களின் பெயர்களும் குற்றமிழைத்தவர்களின் பட்டியலில் இடம்பெற்றிருந்தன.

இதில் மிகவும் அதிசயம் என்னவெனில் மேல் உலகில் கூடிய ஐ.நா. பொதுச்சபையில், பூலோகத்தில் ஐ.நாவின் செயலாளராக இருக்கின்ற பான் கீ மூனை, மேல் உலகிற்கு அழைத்து வந்து ஈழத் தமிழர்களை காப்பாற்றத்தவறிய குற்றத்தின் பேரில் விசாரணை செய்ய வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்படுகின்றது.

இந்த நேரத்தில் ஒரு புதிய விண்ணப்பம் அந்த ஐ.நா. அமைப்புக்கு கிடைக்கின்றது. அது கேணல் கடாபியின் விண்ணப்பம்.

லிபிய நாட்டில் மக்களை வதைசெய்த கடாபிக்கு மேல் உலக ஐ.நா.சபையில் அங்கத்துவம் கொடுக்கக் கூடாது என்று பொதுச்சபை உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

மேலோக ஐ.நா.செயலாளர், கடாபியின் ஆத்மாவை அழைத்து உங்கள் மரணம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு இலங்கை அரசு கோரியுள்ளது.

எங்கள் மரணம் தொடர்பில் விசாரணை தேவையில்லை என மறுக்கும் இலங்கை அரசு உனது மரணம் தொடர்பில் விசாரணை தேவை என வலியுறுத்துகிறது. எப்படி இருக்கிறது நியாயம்

ஐ.நா.செயலாளரின்கருத்துக்கு பதிலளித்த கடாபியின் ஆத்மா,

இலங்கை அரசுடன் நான் வைத்திருந்த நட்புக்காக என்னை மன்னித்துவிடுங்கள். உங்களுக்கு வன்னியில் செய்த கொடூரத்தை இங்கு வந்த போதுதான் அறிந்துகொண்டேன். எனது மரணம் தொடர்பில் விசாரணை தேவை என்று கூறும் இலங்கைமீது முதலில் விசாரணை தேவை.

ஐ.நா. பொதுச்சபையில் கரகோஷம்.

ஆத்மாக்களின் உலகில் ஐ.நா.சபை உருவாகினால் எப்படியிருக்கும்? விசாரணைக்காக பலர் அழைக்கப்பட்டால் தென்பகுதி உயர் பீடத்தின் நிலைமை மோசமாகத்தான் இருக்கும்.

### அமைச்சர் ராஜிதவினால்

# ரோலர் படகில் மீன்பிடிக்கு தடை உத்தரவு பிறப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் ராஜிதசேனாரத்னவின் பணிப்பின் பேரில் நேற்று குருநகர் பகுதியில் ரோலர் படகுகளில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டது.

இதற்காக யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் ராஜித சேனாரத்தினவிடம் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனங்களின் சமாசத்தினால் கோரிக்கைகளை முன்வைத்து மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

அதில் ஒரு கோரிக்கையாக யாழ். மாவட்டத்தில் குருநகர் மற்றும் வல்வெட்டித்துறைப் பகுதிகள் 162 ரோலர் படகுகள் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதனால் சிறு படகுகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர் பாதிப்படைகின்றனர். இதனால் அவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர், ரோலர் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவது நாடளாவிய ரீதியில் தடைசெய்யப்பட்டுள்ளது.

இருப்பினும் யாழ்.குடாநாட்டில் குறிப்பிடப்பட்ட சில பகுதிகளில் தொடர்ந்து இம்முறை மூலம் சிலர் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுவதனால் அதனைத் தடுக்க பொலிஸ் உயரதிகாரி என்.இந்திரன் தலைமையில் விசேட பொலிஸ் பிரிவொன்று செயற்படவுள்ளது என்று தெரிவித்தார்.

## ரோலர் படகு பாவிப்பவர்கள் குமுறல்

அமைச்சரின் பணிப்பிற்கமைய நேற்றையதினம் குருநகர் பகுதியில் ரோலர் படகுகளின் மூலம் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கான அனுமதியை கடற்படை வழங்க மறுத்துவிட்டது.

இதனால்அப்பகுதியில்இந்தொழிலை நம்பியிருக்கும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

அத்தோடு உள்ளூர் மீனவர்கள் ரோலர் படகுகளில் மீன்பிடியில் ஈடுபடுவதை தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுத்த அரசாங்கம் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளின் அத்துமீறல்களைத் தடுக்க இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை.

உள்ளூர் மீனவர்கள் ரோலர் படகுகளில் மீன் பிடிக்கத் தடை. ஆனால் இந்திய மீனவர்களுக்கு தடை இல்லை. இதை எவ்வாறு ஏற்றுக்கொள்வது.

சிறு படகுகளில் மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவகையில் வாரத்திற்கு மூன்று நாட்கள் மட்டுமே நாம் தொழிலில் ஈடுபடுகின்றோம். மிகுதி நான்கு நாட்கள் சிறுபடகுகளில் மீன் பிடிப்பவர்கள் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

அதிக முதலீடுகளை இட்டு இந்தப் படகுகளை கொள்வனவு செய்து வைத்துள்ளோம். இந்நிலையில் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் அத்துமீறலினால் ஏற்கனவே எமது தொழில் பாதிப்படைந்த நிலை எம்மையும் தொழில் செய்ய விடாது தடுத்தால் நாம் என்ன செய்வது.

தடை செய்யப்பட வேண்டிய எத்தனையோ தொழில் இன்னும் நடைபெற்று வருகின்றது. ஆனால் 5 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய தொழிலை உடனடியாக நிறுத்த பொலிஸாருக்கு பணிப்பு விடுத்துள்ளது எந்தவகையில் ஏற்றுக்கொள்ள முடியும் எனவும் குருநகர் பகுதியில் தொழில் செய்ய விடாது தடுக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர். (4-6)

## மின்சாரம் தாக்கி சிறுமி பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ் சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகிழூர் முனைக் கிராமத்தில் சிறுமியொருவர் மின்சாரம் தாக்கி பலியாகியுள்ளார்.

மகிழூர் முனைக் கிராமத்தைச் சேர்ந்த தங்கவேல் தினுசி வயது 6 என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

பாடசாலை முடித்துவிட்டு நண்பகல் வீடு திரும்பிய இச்சிறுமி மலசலகூடம் சென்ற போது இந்த விபத்து சம்பவித்துள்ளது.

மரண விசாரணையை களுவாஞ் சிக்குடி வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் கு.சுகுணன் மேற்கொண்டார்.

சடலம் தற்போது களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில்பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (4-2)

## ஆதிவாசிகள் நிர்வாகத்தின் கீழ் மாதுரு ஓயா சரணாலயம்

### அமைச்சர்.எஸ்.எம். சந்திரசேன

(கொழும்பு)

மாதுருஓயா சரணாலயத்தை ஆதிவாசிகள் மூலம் நிர்வகிக்கும் தேசிய சரணாலயமாக மாற்றவுள்ளதாக வனஜீவராசிகள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

தம்பான பிரதேசத்தில் ஆதிவாசிகள் தலைவர் ஊருவரிகே வன்னிலத்தோவை சந்தித்தபோதே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

ஆதிவாசிகளின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக வனஜீவராசிகள் அமைச்சர் தம்பான் பிரதேசத்திற்கு சென்றிருந்தார்.

பிரதேசத்தில் உள்ள குளங்களை துப்பரவு செய்து மீன்பிடி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுப்பதாகவும் இதன்போது அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு சேர்க்கப்பட்டுள்ள ஆதிவாசி இளைஞர்களை தம்பான பிரதேசத்திலேயே தொழிலில் ஈடுபடுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த யோசனைகளை முன்னிட்டு மகிழ்சியடைவதாக குறிப்பிட்ட அவர் காட்டில் தொழில் செய்வதற்கு பரீட்சை எழுதத் தேவையில்லை என்றும் காட்டில் வாழ்வதே ஒரு பரீட்சை என்றும் ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னிலத்தோவை குறிப்பிட்டார். (4-2)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யா/ இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறும் என வலிகாமம் வலயக் கல்வி பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி கலந்துரையாடல் இன்று நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-2)

## நேரடி அஞ்சல்

தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நடைபெறவுள்ள விசேட பூஜைகள் இலங்கை வானொலியின் பண்பலையில் நேரடி அஞ்சல் செய்யப்படவுள்ளது.

வரலாற்றுப் புகழ்பெற்ற இவ்வாலயத்தில் இருந்து நேரடி ஒலி பரப்பினை மதுரகவி காரை எம்.பி அருளானந்தன், ரி.உருத்திராபதி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். இந்நிகழ்வில் அருளாசிரியுரையினை ஸ்ரீ விஸ்ணு ஸ்ரீ க.ச.சோமஸ்கந்த சிவாச்சாரியார் வழங்கவுள்ளார். (4)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



✷ சுயநலம் அற்றவர்களாக இருங்கள். ஒரு நண்பன் மற்றொருவரைத் தனிமையில் தூற்றுவதை ஒரு போதும் கேட்டுக் கொண்டிருக்காதீர்கள்

✷ இன்றைய இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் நவீன தலைமுறையை சேர்ந்தவர்கள்ஆகிய உங்களிடம்தான் என் நம்பிக்கை இருக்கிறது. இவர்களிடமிருந்தே என் தொண்டர்கள் தோன்றுவார்கள்.

✷ மற்றவர்களுக்காக நாம் மேற்கொள்ளும் மிகக் குறைந்த அளவு உழைப்பும் நமக்குள்ளே இருக்கும் சக்தியைத் தட்டி எழுப்புகிறது.

✷ மற்றவர்களுடைய நன்மையைக் குறித்துச் சிறிதளவு நினைப்பதும் கூட சிங்கத்திற்குச் சமமான ஆற்றலை நமது இதயத்திற்குப் படிப்படியாகத் தருகிறது.

✷ வாழ்க்கை என்னும் போர்க்களத்தில் அஞ்சாது எதிர்த்து நிற்கும் வீரன் ஒருவனுடைய மனநிலையே நமக்கு இப்போது தேவை.

✷ உங்களிடமே நம்பிக்கை எவையுங்கள் ஒரு காலத்தில் நீங்கள் வேதகாலத்தைச் சேர்ந்த ரிஷிகளாக இருந்தீர்கள். இப்போது வேறு வடிவம் தாங்கி வந்திருக்கிறீர்கள்.

# கனிமொழியின் பிணைமனு வழக்கு சி.பி.ஐ. எதிர்ப்பு தெரிவிக்கவில்லை



(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தி.மு.க எம்.பி. கனிமொழியின் பிணைமனுவுக்கு சி.பி.ஐ. தரப்பு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

எனினும் இந்த பிணை மனு மீதான விசாரணையை டில்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் நவம்பர் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு முறைகேடு வழக்கில் கடந்த 5 மாதங்களாகச் சிறையில் உள்ள தி.மு.க மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி உள்பட 7 பேரின் பிணை மனுக்கள் மீதான விசாரணை சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று காலை தொடங்கியது.

கனிமொழி, சரத்குமார் ஆகியோர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு விட்டதால் அவர்கள் ஆதாரங்களை வழங்குவார்கள் என்ற கேள்விக்கே இடமில்லை என்றும் இனியும் அவர்கள் நீதிமன்றக் காவலில் சிறையில் இருக்க வேண்டியதில்லை என்றும் இருவர் தரப்பிலும் வாதிடப்பட்டது.

நீதிமன்றம் வலுவான நிபந்தனைகளை விதித்தாலும் அவற்றை பின்பற்ற தயார் என கனிமொழி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**கனிமொழி, சரத்துக்கு விரையில் ஜாமின் ?**

பின்னர் கனிமொழி ,சரத்குமார் உள்ளிட்டோரின் பிணை மனு தொடர்பாக சி.பி.ஐ மதியம் 2 மணிக்கு விளக்கமளிக்கத் தொடங்கியது.

அப்போது அவ்விருவரது பிணைமனுக்களையும் சி.பி.ஐ தரப்பு எதிர்க்கவில்லை. இதேபோல் கரிம் மேரானி, ஆசிஃப் பால்வா, ராஜீவ் அகர்வால் ஆகியோரின் மனுக்களும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. எனினும் ஏனைய இருவரின் மனுக்களுக்கு சி.பி.ஐ எதிர்ப்பு தெரிவித்தது.

இதை தொடர்ந்து ஏழு பேரின் பிணை மனுக்கள் மீதான விசாரணையை எதிர்வரும் நவம்பர் 3 ஆம் திகதி நீதிபதி ஓ.பி.சைனி ஒத்தி வைத்தார். அன்றையதினம் கனிமொழி உள்ளிட்டோருக்கு பிணை வழங்குவது குறித்து முடிவாகும் என தெரிகிறது.

விசாரணை ஒத்திவைக்கப்பட்டதால் தீபாவளிக்குள் கனிமொழி பிணையில் விடுவிக்கப்படுவார் என தி.மு.க.வினரின் நம்பிக்கை நிறைவேறாமல் போயுள்ளது. எனினும் சி.பி.ஐ எதிர்ப்பு தெரிவிக்காததால் கனிமொழியும் சரத்குமாரும் பிணையில் விடுவிக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக கனிமொழி பெண் என்பதாலும் அவர் தனது குழந்தையை கவனித்துக்கொள்ள வேண்டியுள்ளது என்பதாலும் பிணைவழங்கவேண்டும் என்று கோரப்பட்டது. வயதான தாயையும் பள்ளிக்குச் செல்லும் வயதிலுள்ள குழந்தைகளையும் கவனிக்க வேண்டிய காரணத்தால் பிணை வழங்கவேண்டும் என்று கலைஞர் டி.வி நிர்வாக இயக்குநர் சரத்குமார் கோரியிருந்தார். அண்மையில் புதிதாக நம்பிக்கை மோசடி என்னும் குற்றச்சாட்டு அவர் மீது பதிவு செய்யப்பட்டது. அதன் மீதான விசாரணை நவம்பர் 11 இல் தொடங்கவுள்ளது.

**கருணாநிதி ஏமாற்றம்..**

டில்லி பயணம் மேற்கொண்டுள்ள தி.மு.க தலைவர் கருணாநிதி கடந்த சனிக்கிழமை திகார் சிறையில் மகள் கனிமொழியை சந்தித்தார்.

இந்த நிலையில் கனிமொழியின் பிணை மனுமீதான உத்தரவு நேற்று வெளியாகும் என்ற எதிர்பார்ப்பில் அவர் சென்னைக்கு திரும்புவதை ஒத்தி வைத்துவிட்டு டில்லியி லேயே முகாமிட்டார். ஆனால், கனிமொழியின் பிணைமனு மீதான் உத்தரவு ஒத்திவைக்கப்பட்டது அவருக்கு ஏமாற்றத்தை தந்திருக்கும் எனத் தெரிகிறது. அதேவேளையில் சி.பி.ஐ எதிர்ப்பு தெரிவிக்காதது அவருக்கு மிகுந்த ஆறுதலுக்குரிய விடயமாக இருக்கும் என டில்லி வட்டரங்கள் கூறுகின்றன. (4-2)

# 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கு நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியது

## அத்வானி தெரிவிப்பு

(ராஜ்பூர்)

ஸ்பெக்ட்ரம் விவகாரம் தொடர்பாக மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தை விசாரிக்க வேண்டும் என்று பா.ஜ மூத்த தலைவர் அத்வானி வலியுறுத்தியுள்ளார்.

ஊழலுக்கு எதிராக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த பா.ஜ.க மூத்த தலைவர் அத்வானி இரத யாத்திரை மேற்கொண்டுள்ளார். சட்டீஸ்கர் தலைநகர் ராஜ்ப்பூரில் நேற்று முன்தினம் வந்த அத்வானி நிருபர்களுக்கு அளித்த பேட்டி, அடுத்தடுத்து அம்பலமாகும் மாபெரும் ஊழல்களால் மன்மோகன்சிங் தலைமையிலான அரசு பலவீனம் அடைந்துள்ளது. இந்த ஊழல்களை தடுக்கக் கூடிய நிலையில் இந்த அரசு இல்லை. பிரதமருக்கு தெரிந்தே ஊழல் நடந்துள்ளது. இதை தடுக்க அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை இது அவரது தலைமையின் மீதே சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் 17 பேர் மீது குற்றச்சாட்டுக்களை நீதிமன்றம் பதிவு செய்துள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால் பல முக்கிய பிரமுகர்களை விசாரணை வளையத்துக்குள் கொண்டுவரவில்லை. குறிப்பாக ஸ்பெக்ட்ரம் முறைகேடு நடந்தபோது நிதி அமைச்சராக இருந்த ப.சிதம்பரத்தை விசாரிக்கவே இல்லை.

(4-2)

# அமைச்சர்களின் சொத்துவிபரங்களை கோரிய மன்மோகனுக்கு புகழாரம்

## இதன் பின்னணியில் ராகுல்காந்தி



மத்திய மந்திரிகள் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்கள் சொத்து விபரங்களை வெளியிட வேண்டும் என்ற பிரதமர் மன்மோகன் சிங் உத்தரவுக்கு பின்னால் ராகுல்காந்தியின் கைங்கர்யம் இருப்பது இப்போது வெளியாகி இருக்கிறது. மத்திய மந்திரிகள் சிலர் ஏற்கனவே ஊழல் புகாரில் சிக்கி வழக்குகளைச் சந்தித்து வருகின்றனர். இன்னும் சிலர் மீது ஊழல் மற்றும் இலஞ்ச குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்த நிலையில் மத்திய மந்திரிகள் தங்களது சொந்த விபரங்களை தெரிவிக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன்சிங் உத்தரவிட்டார்.அதன்படி மந்திரிகள் அளித்த சொத்து விபரங்கள் தவிர அவர்களது மனைவி, பிள்ளைகள் [illegible]ம் நெருங்கிய உறவினர்களின் சொத்துக்கள் விபரங்களு[illegible] கடந்த மாதம் வெளியிடப்பட்டன. இதனால் மன்மோகன் சிங்கிற்கு பாராட்டுக்கள் குவிந்தன.

ஆனால் இந்த முடிவை எடுத்தது மன்மோகன்சிங் அல்ல காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல்காந்தி தான் என்று இப்போது தெரிய வந்துள்ளது.

மந்திரிகள் மட்டுமன்றி அவர்களின் நெருங்கிய உறவினர்களின் சொத்து விபரங்களையும் வெளியிடச்செய்ய எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து விபரங்கள் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் சமூகஆர்வலர் ஒருவர் பெற்றுள்ளார். அதில் தெரிய வந்துள்ள விபரங்கள் வருமாறு. இதன் தொடர்ச்சியாகவே மந்திரிகளின் குடும்பத்தினர் மற்றும் நெருங்கிய உறவினர்களின் சொத்துவிபரங்கள் கேட்டு பெறப்பட்டு கடந்த மாதம் வெளியிடப்பட்டன. மந்திரி சபையில் சேருமாறு பிரதமர் பலமுறை கேட்டுக்கொண்டும் ராகுல் மறுத்துவிட்டார். மூத்தவர்கள் பலர் இருக்க இளையவனான நான் மந்திரி சபையில் சேர விரும்பவில்லை என்று ராகுல்காந்தி மறுத்துவிட்டார்.

மந்திரி சபையோ அல்லது பிரதமரோ எடுக்கும் முக்கிய முடிவுகளில் ராகுல் தலையிடுவதில்லை என்ற பொதுவான கருத்து நிலவி வந்தது. ஆனால் இந்த கருத்தை இந்த விவகாரம் பொய்யாக்கி இருக்கிறது. மந்திரிகளின் உறவினர்கள் சொத்து விபரங்களை வெளியிடச்செய்ய பிரதமரை அவர் வலியுறுத்திய தகவல் மத்திய அரசின் முக்கிய முடிவுகளில் ராகுலின் தலையீடு இருப்பதை அம்பலப்படுத்துகிறது.

(4-2)

# பாரதச் செய்திகள்

# ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு குறித்து தயாநிதியிடம் விசாரிக்க முடிவு

## சி.பி.ஐ. தெரிவிப்பு

(புதுடில்லி)

சன்.டி.டி. எச்க்கு ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு செய்ததில் தொலைத்தொடர்பு துறை முன்னாள் அமைச்சர் தயாநிதியின் பங்கு குறித்து விசாரணை நடத்தவுள்ளதாக சி.பி.ஐ. வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக அந்த வட்டாரங்கள் கூறியதாவது, ஏர்செல் நிறுவனம் மேக்ஸிஸ் நிறுவனத்துக்கு விற்கப்பட்ட விவகாரத்தில் மத்திய தொலைத்தொடர்பு துறை முன்னாள் அமைச்சர் தயாநிதி மீது.சி.பி.ஐ வழக்கு பதிவு செய்துள்ளது.

தயாநிதியின் வீட்டுக்கு 300 தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டது தொடர்பான விவகாரம் குறித்தும் விசாரணை நடந்து வருகிறது. இந்நிலையில் 2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேடு குறித்த வழக்கில் தொடர்புடைய சில தொலைத் தொடர்பு நிறுவனங்கள் டி.டி.எச். சேவையில் ஈடுபட்டுள்ளதை சி.பி.ஐ. கண்டுபிடித்தது. இதுகுறித்து விசாரணை நடத்துவதற்காக டி.டி.எச். நிறுவனங்களுக்கு ஸ்பெக்டரம் ஒதுக்கீடு செய்யப்பட்டதுதொடர்பான ஆவணங்களை தொலைத் தொடர்பு துறையிடம் சி.பி.ஐ. கேட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து டிஷ்.டிவி இந்தியா லிட், ரிலையன்ஸ் பிக் டி.வி, பிரைவேட் லிட், பார்தி மல்டி மீடியா லிட், பாரதி பிசினஸ் சனல், பிரைவேட் லிட்,தூர்தர்ஷன், சன்.டி.டிஃஎச், பிரைவேட்லிட், டாடா ஸ்கை லிட் போன்ற நிறுவனங்களுக்கு ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு செய்யப்பட்டது தொடர்பான ஆவணங்களை பெற்ற சி.பி.ஐ அவற்றை ஆய்வு செய்தது. இதன்பின் சன்.டி.டி.எச் தொடர்பான ஆவணங்களை தவிர ஏனைய ஆவணங்கள் தொலைத் தொடர்பு துறையிடம் திரும்ப அளிக்கப்பட்டு விட்டன.

சன்டி.டி.எச்கு ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் முன்னாள் தொலைத் தொடர்பு துறை அமைச்சர் தயாநிதியின் பங்கு குறித்து விசாரிக்க சி.பி.ஐ திட்டமிட்டுள்ளது என சி.பி.ஐ. வட்டாரங்கள் தெரிவித்தன.

(4-2)



டில்லி சர்வதேச விமான நிலையம் வந்திறங்கிய பூட்டான் மன்னர் வாங்க் மற்றும் அவரது மனைவி ஆகியோரைப் படத்தில் காணலாம்.

## இரண்டாம் இடத்திற்கு முன்னேறினார் சங்கா

(டுபாய்)

ஐ.சி.சி. டெஸ்ட் போட்டிக்கான தரவரிசைப் பட்டியலில் இலங்கை வீரர் குமார் சங்கக்கார இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) நேற்று முன்தினம் டெஸ்ட் போட்டிக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டது. இதில் இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் (818 புள்ளிகள்) ஐந்தாவது இடத்திலும் டிராவிட் (762 புள்ளிகள்) பத்தாவது இடத்திலும் உள்ளனர்.

பந்துவீச்சுப் பட்டியலில் சாகிர் கான் (713 புள்ளிகள்) ஆறாவது இடத்தில் நீடிக்கிறார். பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இரட்டைச் சதம் அடித்ததைத் தொடர்ந்து இலங்கையின் சங்கக்கார (823 புள்ளிகள்) இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

பாகிஸ்தான் ஆரம்ப வீரர் தௌபிக் உமர் அதிகபட்சமாக 17 இடங்கள் முன்னேறி 46 ஆவது இடத்தினைக் கைப்பற்றியுள்ளார்.

பந்துவீச்சுப் பட்டியலில் தென்னாபிரிக்காவின் ஸ்ரெயன், இங்கிலாந்தின் ஆண்டர்சன், சுவான் ஆகியோர் முதல் மூன்று இடங்களில் நீடிக்கின்றனர்.

# ஆஸி. அணிக்குப் பதிலடி கொடுத்தது தென்னாபிரிக்கா

(போர்ட் எலிசபெத்)

இரண்டாவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 80 ஓட்டங்களால் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தித் தொடரை 1:1 என்ற கணக்கில் சமனிலையாக்கியது.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது போட்டியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில் இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் போர்ட் எலிசபெத்தில் நடைபெற்றது.



இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 303 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் ஜக்கலிஸ் 88 பந்துகளில் (7 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 76 ஓட்டங்களையும் மில்லர் 51 பந்துகளில் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 59 ஓட்டங்களையும் சிமித் 69 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 57, டுமினி 58 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 56 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பொல்லிங்கர் 2 விக்கெட்டுகளையும் கம்மின்ஸ் டோகோர்ரி, ஸ்ரீபன் சிமித் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 304 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி மோர்னி மோர்கலின் வேகத்தில் 50 ஓவர்களில் 223 ஓட்டங்களை மாத்திரமெடுத்துச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதன்மூலம் தென்னாபிரிக்க அணி 80 ஓட்டங்களால் வெற்றி பெற்று தொடரை 1:1 என்ற கணக்கில் சமனிலையாக்கியது.

துடுப்பாட்டத்தில் டேவிட் வோர்னர் 74 ஓட்டங்களையும் மைக்கல் ஹசி 37, ஸ்ரீபன் சிமித் 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மோர்னி மோர்கல் 10 ஓவர்கள் பந்துவீசி (2 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட) 22 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 4 விக்கெட்டுகளையும் ஸ்ரெயன், ரிசொற் சோபே தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்குத் திருப்புமுனையமைத்த மோர்னி மோர்கல் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

## சமனிலையை நோக்கி முதலாவது டெஸ்ட்



பங்களாதேஷ் – மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி மழை காரணமாக வெற்றி தோல்வியின்றி முடிபடையும் வாய்ப்புள்ளது.

பங்களாதேஷிற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 21ஆம் திகதி சிட்டஹொங்கில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகளையிழந்து 350 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் அணித்தலைவர் முஸ்பீகர் ரஹீம் 68 ஓட்டங்களையும் தமீம் இக்பால் 52 ஓட்டங்களையும் ரகிபுல் ஹசன் 41, சகீப் அல் ஹசன் 40, நயீம் இஸ்லாம் ஆட்டமிழக்காமல் 36, நசீர் ஹுசைன் 34, நபீஸ் 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிஸ்ஷோ 3 விக்கெட்டுகளையும் எட்வோட்ஸ், சாமுவேல்ஸ் தலா 2 விக்கெட்டுகளையும் ராம்போல், சமி தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளையிழந்து 144 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சந்தர்போல் 49 ஓட்டங்களையும் பிராத்வேய்த் 33, சாமுவேல்ஸ் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அறிமுக வீரர் எலியாஸ் சணி 4 விக்கெட்டுகளையும் ஹுசைன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் இரண்டாம், மூன்றாம் நாள் ஆட்டம் மழை காரணமாக முழுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டமும் போதிய வெளிச்சமின்மையால் குறித்த நேரத்திற்கு முன்னதாக நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் போட்டியின் ஐந்தாவதும் இறுதியுமான ஆட்டம் இன்றாகும்.

## 'இருபது-20' தரவரிசை வெளியீடு இங்கிலாந்து முதலிடம் பிடித்தது

### இரண்டாமிடத்தில் இலங்கை

சர்வதேச இருபது-20 கிரிக்கெட்டில் சிறந்த அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதில் இங்கிலாந்து அணி 127 புள்ளிகளுடன் முதலாம் இடத்தையும் இலங்கை 126 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தையும் பிடித்துள்ளன.

இதில் 117 புள்ளிகளுடன் நியூசிலாந்து அணி மூன்றாம் இடத்திலுள்ளதுடன் தென்னாபிரிக்கா (113), இந்தியா (112), அவுஸ்திரேலியா (111), பாகிஸ்தான் (97), மேற்கிந்தியத் தீவுகள் (89), ஆப்கானிஸ்தான் (75), சிம்பாவே (54) அணிகள் முறையே முதல் பத்து இடங்களில் உள்ளன. இப்பட்டியலில் டெஸ்ட் அந்தஸ்துள்ள பங்களாதேஷ் அணி இடம்பெறாமை குறிப்பிடத்தக்கது.

## டிராவிட், இஷாந்திற்கு பி.சி.சி.ஐ. விருது

(மும்பை)

இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) சார்பில் சிறந்த டெஸ்ட் வீரருக்கான விருதை டிராவிட், இஷாந்த் சர்மா ஆகியோர் பெறுகின்றனர்.

பி.சி.சி.ஐ. சார்பில் ஆண்டுதோறும் கிரிக்கெட்டில் சிறந்து விளங்கும் நட்சத்திரங்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. இம்முறை 2010 ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் 2011 செப்ரெம்பர் 30ஆம் திகதி வரையிலான காலம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இக்காலகட்டத்தில் டிராவிட் 15 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி ஆயிரத்து 285 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இவருக்கு பாலி உமரிகர் கிண்ணம் வழங்கப்படவுள்ளது.

இதேபோன்று பந்துவீச்சில் அசத்திய இஷாந்த் சர்மா சமீபத்திய மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்று டெஸ்ட் போட்டிகளில் 16 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இவருக்குச் சிறந்த பந்துவீச்சாளர் விருது வழங்கப்படுகின்றது.

எதிர்வரும் டிசம்பரில் சென்னையில் நடக்கவுள்ள நிகழ்ச்சியில் இவ்விருதுகள் பி.சி.சி.ஐ. சார்பில் வழங்கப்படவுள்ளன. வாழ்நாள் சாதனையாளருக்கான ஜி.கே.நாயுடு விருதும் வழங்கப்படவுள்ளது.

## செய்மதி...

சுற்றிக்கொண்டிருந்தது.

இச்செய்மதி கடந்த சனிக்கிழமை இரவு 9.45 மணிக்கும், 10.15 மணிக்கும் இடையில் புவியை நெருங்கியதாகவும் அது தரையில் விழுவதற்கு 10 தொடக்கம் 15 நிமிடங்களே எடுத்திருக்கும் என்றும் ஜேர்மனி விண்வெளி ஆய்வுநிலையம் கூறியுள்ளது.

இந்தத் துண்டுகள் எங்கு விழுந்தன என்பது இன்னமும் உறுதி செய்யப்பட வில்லை என்றும் இவை மனிதர்கள் வசிக்கும் பகுதியில் விழவில்லை எனவும் அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இந்த செய்மதியின் பாகங்கள் விழுவதால் ஐரோப்பா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியாவுக்கும் பாதிப்பு ஏற்படாது என்று முன்னரே கணிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை அமெரிக்க இராணுவ விஞ்ஞானிகள் இந்தச் செய்மதிப்பாகங்கள் இலங்கையின் கிழக்குப் பகுதி, மியன்மார் கரையோரத்திற்கு அப்பாலுள்ள அந்தமான் கடல், மியன்மார் அல்லது சீனாவின் உட்பகுதியில் விழலாம் என்று எதிர்பார்த்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தச் செய்மதிப்பாகங்கள் இலங்கையின் கிழக்குப்பகுதியில் வீழ்ந்தனவா என்பது குறித்த தகவல்கள் ஏதும் தெரியவரவில்லை.

இச்செய்மதிப் பாகங்கள் பூமியில் மனிதர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதற்கு 2000இல் ஒருபங்கு வாய்ப்பு இருப்பதாக விஞ்ஞானிகள் முன்னரே கூறியிருந்தனர்.

ஆனாலும் இந்த செய்மதிப்பாகங்களால் இலங்கைக்கு ஆபத்துள்ளதாக முன்னரே கணித்திருந்த அமெரிக்க, ஜேர்மனிய விஞ்ஞானிகள் இது குறித்த முன்னெச்சரிக்கைகள் எதையும் பொது மக்களுக்கு வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-5)

# TILKO JAFFNA CITY HOTEL

70/6,K.K.S ROAD,JAFFNA. T.P:0212225969
Web:cityhoteljaffna.com
e-mail:info@hoteljaffna.com

Tilko Jaffna City Hotel for Business & Relaxation in the heart of Jaffna City
Conference Hall Facilities including Multimedia & PA System
Large Banquet Hall For Wedding Receptions, Work Shops, Conventions & Seminars
Non Ac Mini Conference Hall
Special take away Lunch/Dinner Pack
Morning/ Evening Snacks
Special Package Rate for
Family Get-to-Gathers, Birthday/ Anniversary Functions, Company Get to Gathers

*Await Opening*
*Special Barbaque at our Garden Cafeteria*
*Inclusive of Chines/Indian Jaffna Authentic*
*Variety Cuisine s From our open hot ranga Kitchen*

உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்கு யாழ். நகரின் மத்தியில் ஒளி, ஒலி அமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம், சிறிய /நடுத்தர /பிரமாண்டமான குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத சகல வசதிகளுடன் கூடிய மண்டபங்கள்,திருமண, பிறந்த நாள் கொண்டாட்டங்கள்,வியாபார நிறுவன ஒன்றுகூடல்களுக்கும் ஏதுவான பாரிய மண்டப வசதி அத்துடன் மதிய, இரவு பொதி செய்யப்பட்ட உணவு வகைகள், காலை, மாலை சிற்றுண்டிகள்...

இந்தியா, சீனா மற்றும் யாழ். பாரம்பரிய உணவு வகைகளும் ஒரே இடத்தில்...

மிகவிரைவில் TILKO HOTEL இல் Barbeque வசதியுடனான பூந்தோட்ட உணவகம் திறக்கப்பட வுள்ளது.



உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு யாழ் நகரில்...

T.P.:077 6943479
K.Gunaseelan
Marketing Executive


# விக்கிலீக்ஸ் இணையத்தளத்தை தற்காலிகமாக நிறுத்த முடிவு




விக்கிலீக்ஸ் இணையதளத்தை முடக்க சிலர் சதி செய்வதாக கூறியுள்ள அதன் நிறுவனர் ஜூலியன் அசாஞ்ச், தற்காலிகமாக தனது தளத்தின் செயற்பாடுகள் நிறுத்தி வைக்கப்படுவதாகவும் கூறியுள்ளார்.

அமெரிக்க தூதரகங்களுக்கும் அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்திற்கும இடையிலான தகவல் பரிமாற்ற விவரங்களை வெளியிட்டு உலகையே உலுக்கிய இணைய தளம் விக்கிலீக்ஸ். இதன் தலைவர் ஜூலியன் அசாஞ்ச்.

விக்கிலீக்ஸ் வெளியிட்ட பல பரபரப்புத் தகவல்களால் அமெரிக்காவில் மட்டுமல்லாமல் பல உலக நாடுகளிலும் பெரும் புயல் கிளம்பியது இந்த நிலையில் தனது தளத்தின் செயற்பாடுகளை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக அதன் நிறுவனர் ஜூலியன் அசாஞ்ச் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று லண்டனில் செய்தியாளர்களிடம் கூறுகையில், எங்களுக்கு எதிராக அமெரிக்க மற்றும் இங்கிலாந்து வங்கிகள் நிதி கையாளுதலை தடை செய்துள்ளன. இதனால் எங்களது செயற்பாடுகளை தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் தற்காலிகமாக எங்களது செயற்பாடுகள் நிறுத்தி வைக்கப்படுகின்றன. எதிர்கால பாதுகாப்பை கருத்தில் கொண்டும் இந்த முடிபை எடுத்துள்ளோம் என்றார்.

# பொலிஸ் நிலையத்...

கட்டுப்படுத்துவதற்குப் பல அமைப்புகள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. இருப்பினும் அவை தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

இந்நிலையில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதில் ஊடகங்களுக்கு முக்கிய பங்கு உண்டு. சிறுவர் உரிமைகள் மட்டுமல்லாது பெண்கள் உரிமைகளைப் பாதுகாக்கவும் ஊடகங்களினால் முடியும்.

ஊடகங்கள் செய்திகளைப் பிரசுரிக்கும் போது தர்மத்தைப் பேண வேண்டும்.

பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகளை மக்கள் முழுமையாக நம்புகின்றனர். அவர்களை வழிநடத்துவதாகப் பத்திரிகையின் செய்திகள் அமைய வேண்டும்.

சமுதாயத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு பத்திரிகைகளுக்குண்டு என்பதை உணர்ந்து ஊடக தர்மத்தை நிலைநாட்ட வேண்டும்.

யுத்தத்தின் பின்பு மக்களை மீளக்குடியமர வைக்கும் நோக்குடன் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. ஆனால் மீளக் குடியமரும் மக்கள் தமது பழைய வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டனர் என்று கூறமுடியாது.

அவர்களின் மனநிலையில் மாற்றத்தினைக் கொண்டுவர வேண்டும். அதனை ஊடகங்களினால் மட்டுமே செய்ய முடியும்.

பெண் பிள்ளைகள் துன்புறுத்தப்படுகின்றனர். பாடசாலைகளில் மாணவர்களிடம் ஏற்றத்தாழ்வு காணப்படுகின்றது. வன்னியிலிருந்து வந்த மாணவர்களை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் தரக்குறைவாகப் பார்க்கின்றனர் எனப் பல முறைப்பாடுகள் வந்த வண்ணமுள்ளன.

குடும்ப வன்முறைகள் காரணமாக முறைப்பாடு செய்வதற்காக பெண்கள் பொலிஸ் நிலையம் சென்றால் அங்கு பெண்களுடன் தகாதமுறையில் நடக்கப் பொலிஸார் முற்படுகின்றனர்.

இவ்வாறு பல முறைப்பாடுகள் வந்த வண்ணமுள்ளன. இந்நிலையில் சமூகத்தை நல்வழிப் படுத்த ஊடகங்கள் முன்வர வேண்டும் என அவர் மேலும் கூறினார். (எ-6)

# மனித...

நாடுகள் வலியுறுத்தி வரும் நிலையிலேயே இலங்கை அரசாங்கம் இந்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் சர்வதேச ரீதியில் கடும் நெருக்கடிகளை சந்தித்து வரும் நிலையில், பொதுநலவாய அமைப்பில் இத்தகையதொரு பதவியை உருவாக்குவது தமக்கு மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் என இலங்கை கருதுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பரப்புரைகளுக்கு வலுச் சேர்க்கவே ஐக்கிய நாடுகள் சபையின் மனித[illegible]ரிமைகள் ஆணைக்குழு பயன்படுவதாக [illegible] சுமத்தியுள்ள அரசாங்கம், இத்தகையதொரு பதவியும் அத்தகைய வழிமுறைகளுக்கே பயன்படும் எனவும் தெரிவித்துள்ளது. (எ-5)

# யாழ்.பல்கலை...

பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் எந்த விதமான விசாரணைகளையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-8-9)

# தமிழ்க்...

குழுவைச் சந்திக்கவுள்ளதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவைச் சந்திப்பதற்கு இலங்கை அரசாங்கம் இராஜதந்திர ரீதியில் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில் இச்சந்திப்பு இடம்பெறுமா என்பது தொடர்பில் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று சந்தேகம் வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் சந்திக்க முனைவதாகவும் ஆனால் அதற்காக அனைவரும் சந்திப்புக்காக நேரம் ஒதுக்கியுள்ளதாக அர்த்தம் கொள்ள முடியாதென்றும் கூறியுள்ளார். (பா)

# அரசின்...

ஜனாதிபதியின் ஆலோசகர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொலை உட்பட பல சம்பவங்கள் குறித்து அரசாங்கம் முறையான விளக்கங்களை வழங்கவேண்டுமெனவும் கஜந்த கருணாதிலக்க கூறினார்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற பல சம்பவங்களுக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (எ-1)

# அவுஸ்.செல்லும்...

இலங்கையின் வகை கூறும் தன்மை: பொதுநலவாய அமைப்பின் பொதுவான நீதித்தன்மை எனும் தலைப்பில் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற கருத்தரங்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளதாகப் பேராசிரியர் டாமியன் கிங்ஸ்பெரி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது 40 ஆயிரம் வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளமை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மக்கள் செறிந்திருந்த பகுதிகளை இலக்கு வைத்து படைத்தரப்பால் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலின்போது இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் உயிரிழந்துள்ளதாக டாமியன் கிங்ஸ்பெரி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இப்போரின்போது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற நம்பத்தகுந்த சாட்சியங்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்குப் போதுமானது எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் சட்டத்தின் முன்னிறுத்தப்படும் வரை இலங்கையைப் பொதுநலவாய அமைப்பில் இருந்து இடை நிறுத்துவதற்கான நடைமுறைகள் உள்ளதாகவும் அவர் தனது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்நாட்டிற்கு விஜயம் செய்யும்போது அவருக்கெதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளுமாறு இக்கருத்தரங்கில் உரையாற்றிய பேராசிரியர் டாமியன் கிங்ஸ்பெரி உட்பட பலரும் அழைப்பு விடுத்திருந்தனர்.

இக்கருத்தரங்கில் மலேசியாவின் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான டத்தோ ஜொகாறி அப்துல் மற்றும் மனோகரன் உட்பட மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்கள் அவ்வழைப்புக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர்.

அதேவேளை இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதியும் அவுஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவருமான அட்மிரல் திசார சமரசிங்க பொறுப்புக் கூற வேண்டும் என்பதற்கான போதிய சாட்சியங்கள் இருப்பதால் அவரை இலங்கைக்குத் திருப்பியனுப்ப வேண்டும் எனவும் இக்கருத்தரங்கில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையின் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அரசு உரியவகையில் பொறுப்புக் கூறாத வரை 2013-ம் ஆண்டு இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டைப் புறக்கணிக்கப் போவதாக கனேடியப் பிரதமர் ஏற்கெனவே அறிவித்திருந்தார் என இவ் வூடகம் மேலும் தெரிவித்துள்ளது.




உங்கள் மழலைகளை எம்மிடம் ஒப்படையுங்கள். அவர்கள் ஆங்கில அறிவில் உறுதியான தெளிவான அடித்தளத்தை நாம் இடத் தயாராகவுள்ளோம்.

அதற்காக பிரபல நிபுணர்களால் குழந்தைகள் உளவியலுக்குட்பட்டுத் தயாரிக்கப்பட்ட

Tky Kids - 07

ஏழு வயதுக்குட்பட்ட குழந்தைகளிற்கான அடிப்படை ஆங்கிலக் கற்கைநெறி - 5 மாத காலம்

**உள்ளடக்கங்கள்**

- ஆங்கில எழுத்துக்களை உறுப்பமைய எழுதப் பழக்கல்
- சொல்பிரயோகம், வசனம் அமைத்தல், கட்டுரையாக்கம்
- இலக்கண வேதனையின்றி பேச்சு ஆங்கிலமும் விளங்கிக் கொள்ளலும்
- பாடல்கள், கதைகள், ஆங்கிலப் பத்திரிகைகள்

ஆரம்பம் : 29.10.2011 சனி காலை 8 மணி

இரண்டு பிரிவுகளாக 50 மாணவர்களிற்கு மட்டும் அனுமதி, எனவே பதிவுகளை உறுதிப்படுத்துங்கள்.

## திசைகாட்டி

முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்

37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ் நகரிலிருந்து கஸ்தூரியார் வீதி ஊடாக வருகையில் யாழ். இந்துக்கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)

☎ : 021 4914527

(சி-4814)

## இடமாற்றம்

இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த

நியூ லலிதாஸ் ஜுவல்லறி ஸ்தாபனம்

10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு : 021 222 4134




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.